# ஓய்ந்தாய்ந்து பார்க்கையிலே...

-ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு



4-60
நடரா
SL.PR

இலக்கிய வித்தகர்
கலாநிதி கே.எஸ்.நடராசா

தலைப்பு : **ஓய்ந்தாந்து பார்க்கையிலே....**
ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

ஆசிரியர் : *இலக்கிய வித்தகர்*
**கா. செ. நடராசா**

முதலாம் பதிப்பு : ஓகஸ்ட் 1996

பதிப்புரிமை : கொழும்பு தமிழ்ச் சங்கம.

வெளியீடு : கொழும்பு தமிழ்ச் சங்கம்,
கொழும்பு.

அட்டை
வடிவமைப்பு : எம். கே. எம். ஷகீப்

அச்சுப் பதிப்பு : கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட்
501/2, காலி வீதி, கொழும்பு - 06.
தொலைபேசி : 595875



இலக்கிய வித்தகர்

**கா. செ. நடராஜா**

# ஓய்ந்தாய்ந்து பார்க்கையிலே

## ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு

இலக்கிய வித்தகர்
கலாநிதி கே. எஸ். நடராசா

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 01. | நூன்முகம் | iii |
| 02. | வெளியீட்டுரை | iv - v |
| 03. | அணிந்துரை | vi - vii |
| 04. | நூலாசிரியர் உரை | viii |
| 05. | உபயம் | ix |

| **இலக்கண ஆய்வுகள்** | | **பக்கம்** |
|---|---|---|
| 01. | தமிழ்ப் பிர ந்த வரைவிலக்கணங்களிலுள்ள சில முரண்பாடுகள் | 01 - 10 |
| 02. | தொல்காட் ய நூற்பா முரண்பாடும் உரையாசிரியர்கள் இடர்ப்பாடும் | 11 - 15 |
| 03. | குற்றியலுக மும் குற்றியலுகரமும் | 16 - 19 |
| 04. | சார்பபெழுத்துக்கள் | 20 - 23 |
| 05. | தமிழ் எழுத்துக்கள் சிலவற்றின் இருவகை ஒலிவடிவங்கள் | 24 - 30 |

| **இலக்கிய ஆய்வுகள்** | | |
|---|---|---|
| 06. | புறநானூற்றிற் சில அகத்திணைப் பாடல்கள் | 31 - 33 |
| 07. | அரிச்சுவடி அளம்பில் ஆன்மஞான வைப்பு | 34 - 38 |
| 08. | வேதாந்தச் நுயில் | 39 - 41 |
| 09. | திருக்குறட் பாடபேதங்கள் | 42 - 44 |

| **வரலாற்று ஆய்வுகள்** | | |
|---|---|---|
| 10. | நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வன்னி வரலாற்றுக் குறிப்புகள் | 45 - 47 |
| 11. | வையாபாடல் ஆய்வுரை | 48 - 64 |
| 12. | யாழ்ப்பாணம் என்ற பெயரின் காரணங்கள் பற்றிய கருத்தாய்வு | 65 - 70 |

# நூன் முகம்

## இலக்கிய கலாநிதி செ. குணரத்தினம்
## முன்னாள் இலங்கை அரசு அமைச்சுச் செயலாளர்.
## தலைவர், கொழும்பு தமிழ்ச் சங்கம்

பேரறிவுக் கொருவரம்பாய்ப் பெரும்புலமைப் கோரெல்லை
பிறங்குதிறன் பிறவிதரும் கொடையாமென்ன
நேரதற்ற கவிதைவளம் நெஞ்சார்ந்த பெருஞ்சிறப்பால்
தமிழறிஞர் நினைந்து போற்றும் நிறைவு
சீர்பெறவே இவையாவும் சிறப்புறவே பெற்றதிரு
தெளிந்த ஞானச் செஞ்சொற் கவிதைத் தென்றல்
ஊர்ப்பெயரார் நாவற்குழியூர் நடராசன் பெருந்தகை
பெருங்கவிஞன் என்றே வியந்து உலகு ஏத்தும்

2. 'சிலம்பொலியும்' 'கவிக்கற்பரசி' செப்புபலவாய செஞ்சொற்
கவிதைகளைத் தன்திறலால் செய்துநின்றே
நிலம்புகழ வாழ்ந்தமகான் தமிழாராய்ச்சி மகாநாடு பலகண்டு
நேரில்புகழ் ஆராய்ச்சி நிகழ்த்தியே அறிஞர்போற்று
நலன்பலவே கண்டும் பல்லாண்டுஇலங்கை வானொலித் தலைமை
நல்கிநின்றே புகழ்வழங்கி என்றும்வாழ்வோன்
தலம்பெயர்ந்து கனடாநாடு உற்றபோதும் காதல்
தமிழ்மறவா சிந்தையினான் தமிழர் வேந்தே

3. வித்தகச்சீர் பேரறிவால் நாடுபோற்றும் செஞ்சொல்
விறலினால் தமிழ்இலக்கிய வரலாறு போற்றும்
புத்தகமாய் நின்றென்றும் வாழவழி வகுத் தோன்மற்றும்
புதிதுபுதிதாய்க் கருத்துக்கள்மலரப் போற்றிச்
சத்தியமாய் விளங்குபல ஆராய்வுகள் நிகழ்த்திச்
சங்கத்தமிழ்க் கவிதை நுண்பொருளின் சால்பை
எத்திசையும் தொழும் வண்ணம் ஏடுகண்டு
இலக்கியத்தை நின்றென்றும் இலங்கச் செய்தோன்

4. தலைநகரில் சான்றோர்கள் தமிழ்தழைத்து நின்று வாழத்
தமிழ்ப்பண்பாடு அதன்வளர்ச்சி தமிழின்மேன்மை
நிலைநிறுத்தி மகிழ்ந்திட்ட கொழும்புபுகழ் பேரமைப்பாம்
தமிழ்ச்சங்கம் நெறிகொள் தலைமைப்பதவி
அலகில்புகழோ டன்றுஅணிந்து சங்கம் மேன்மைகொளச்
சேவைபல ஆக்கம்கண்டோன் நிறைவானின்கண்
நிலவெனவே கலைபரப்பி கவிதையொடு நிலைத்தபுகழ்
நித்தியவாழ்வு உயர்வதுவாய் நிகரில்பெற்றோன்

5. அன்னவனின் தலைமையினைப் பேரறிவைத் தொண்டைக்
கொழும்புபயில் தமிழ்ச்சங்கம் அகத்திருத்தி
மன்னுமிந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளாம் இவற்றை மகிழ்வால்
பன்னிரண்டை ஒன்றாக தொகுத்து அவைதான்
நன்னூலாய் வெளிவரும் இவ்வரிய வேளைதனில்
சங்கமது நன்மதிப்பால் நடராசன் நாமம்போற்றும்
இன்னினைவாய் வெளிக்கொணர உதவிநிற்க வேயிசைந்து
இதயபூர்வமாய் மகிழ்ந்தோம் இந்நூல்வாழி!

# வெளியீட்டுரை

இலக்கிய வித்தகர் கலாநிதி க.செ. நடராசா அவர்கள் இலங்கைத் திரு நாட்டின் தலை சிறந்த அறிஞர்களில் ஒருவர். கவிதையுலகிலே அவர் நாவற்குழியூர் நடராசன் எனப் பிரபலமாக விளங்கியவர். நாவற்குழியூர் நடராசன் என்ற பெயரிலே 50 ஆண்டுகளுக்கு முன் கவிதையுலகில் பிரவேசித்த' அவர் சுவாமி விபுலானந்தரின் மாணாக்கனாக இலங்கைப் பல்கலைக்கழகத்திலே வித்துவான் படிப்பை முடித்து இலங்கை வானொலியில் சேர்ந்தார். இளைப்பாறும் தறுவாயில் கலாநிதிப்பட்டத்திற்காக அவர் ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் விளைவே இவ் ஆராய்ச்சிக் கட்டுரைகள். அவரின் ஆழ்ந்த புலமையும் நடுநிலை நின்று ஆயும் ஆய்வுவன்மையும் பல அறிஞர்களால் போற்றப்பட்டுள்ளன. இருமுறை சாகித்தியப் பரிசு பெற்ற கலாநிதியின் ஆய்வுப் பணிகளைப் பாராட்டி இலங்கை அரசு இவருக்கு ''முத்தமிழ் வித்தகர்'' என்ற பட்டத்தினை வழங்கிக் கௌரவித்து உள்ளது குறிப்பிடத்தக்கது. பல இலக்கியத்துறைகளில் முன்னோடியாகி விளங்கிய நடராசன் அவர்கள் பல ஆண்டுகளாக வானொலித் துறையில் தனது கவனத்தைச் செலுத்தியதோடு அத்தாபனத்திற்குப் பல வருடங்கள் தலைமைதாங்கியதுடன் இலங்கை வானொலி ஒளிபரப்புக்கூட்டுத்தாபன, திரைப்படக்கூட்டுத்தாபனத்திற்கு வழிகாட்டியாகப் பல ஆண்டுகள் பொறுப்பு வகித்துள்ளார். வானொலியில் அவர் தலைவராயிருந்த காலத்தில் புதுமைகளைச் செய்து காட்டியவர்கள் பல கவிதைக் கலையைப் பொது மக்களிடம் பரப்பியது மாத்திரமன்றிப் பல கவிஞர்களை அவர் உருவாக்கி இத்துறையில் பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளார்கள். கவிதை அரங்குகள் பலவற்றுக்குத் தலைமைதாங்கிப் பெயரும் புகழும் பெற்றது மாத்திமன்றிப் புதியவர்களையும் நெறிப்படுத்தி இக்கலையினை இலங்கையில் வளர்த்த தனிப் பெருமை கலாநிதி நடராசனையே சாரும் எனலாம்.

அரசாங்கப்பொறுப்புக்களிலிருந்து ஓய்வு பெற்ற நிலையிலும் தமிழ்த்துறை சம்மந்தமான பரந்துபட்ட ஆராய்ச்சிகளை நடாத்தி அவற்றின் பயனாகத் தமிழ் கூறும் நல்லுலகில் நிரந்தரமான தமது முத்திரையை நிலைநாட்டியவர். இத் தொகுதியிலுள்ள அவரது ஆய்வுக் கட்டுரைகள் கனடாவில் வெளியாகும் தமிழோசைச் இதழிலே வெளிவந்தவை. நடராசன் அவர்கள் தமது வாழ்வின் பிற்பகுதியைக் கனடாவிலேயே போக்கினார்கள்.

கனடாவில் பத்து மகாணங்கள், இரண்டு பிரதேசங்கள் என இருக்கும் அமைப்பில் ஒரு மாகாணமாகிய ஒன்ரோறியோவில் அதுவும் அதன் தலைநகராய ரொரொன்றோவில் மட்டும் 80,000 இலங்கைத் தமிழர்கள் வரை வாழ்வதால் இங்கு தமிழ்க்கலை கலாசார வைபவங்கள் இடம் பெறுகின்றன. தமிழ்ப் பத்திரிகைகள், வானொலி நிகழ்ச்சிகள் சஞ்சிகைகள் ஆகியவற்றிற்கும் அதிக வரவேற்பு அங்குண்டு. அவரது கட்டுரைகள் தமிழோசையில் வெளிவந்தபொழுது பலர் பலவகைப்பாராட்டுகளைத் தெரிவித்திருந் தார்கள். நடராசனார் 1994ம் ஆனி கனடாவிலேயே காலமானார்கள். தமிழோசைச் சஞ்சிகையில் வெளிவந்த பன்னிரண்டு அரிய கட்டுரைகளை அவரது அருமை மனைவி யார் ஒரு சேரத்தொகுத்து அக்கட்டுரைகளை இலங்கையில் வெளியிட்டால் சிறப்பாக வரவேற்கப்படுவதோடு, பரந்துபட்ட தமிழ் மக்கள் படித்துப் பலனடை வார்கள் எனக்கருதி அதனைச் செய்யும் படி அவரது மருகராகிய எம்மிடம் கையளித்தார்கள். காலாநிதி நடராசாவின் மருகரென்ற முறையிலன்றி அவரது அறிவு ஆளுமைக்குப் பெரிதும் ஆட்பட்டவன் என்பதால் இப்பணியைச் மேற்கொண்டு கொழும்புத்தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடன் அவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுகின்றேன்.

என்னை வளர்த்து ஆளாக்கிய எனது மாமனாருக்கு நன்றிக்கடனாக இப்பணியினை எனக்குச் செய்யச் சந்தர்ப்பம் வழங்கிய எனது மாமியார் தங்கராணி நடராசா அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இவ்வரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பத்திரிகை இதழோடு மறந்துவிடப்படாது காலத்தால் நின்று வாழ அவர்கள் எடுத்த முயற்சிக்குத் தமிழ்கூறும் நல்லுலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது எனப் பெருமிதத்துடன் கூறிக்வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இக்கட்டுரைகளைப் பார்வையிட்டு அரிய அணித்துரை வழங்கிய பேராசிரியர் கலாநிதி பொ.பூலோகசிங்கம் அவர்களுக்கும் எமது நன்றி உரியது. கலாநிதி நடராசாவைத் தலைவராகக் கொண்டு அவர் சேவையைப் பெரிதும் பெற்ற கொழும்புத்தமிழ்ச்சங்கம் இந்நூலினைத் தமிழ்ச்சங்கத்தின் வெளியீடாக ஏற்றுப் போற்றியமைக்கும் எமது நன்றி உரியது.

பெரும் புலமையும் பேரறிவும் வாய்க்கப் பெற்ற கலாநிதி நடராசா அவர்களின் தமிழ்த்தொண்டு மேலும் விளங்க இந்நூல் துணைபுரியும் என்பது எனது உறுதியான நம்பிக்கை யாகும். கலாநிதி அவர் நாமம் என்றும் நின்று நிலவுவதாக.

*சொ. கணேசநாதன்*
*ஆளுனரின் செயலாளர்,*
*வடகிழக்கு மாகாணம்.*

## இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாகீர்த்தி பொ. பூலோகசிங்கம் அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

இலக்கிய வித்தகர், கலாநிதி க.செ. நடராசா இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பழைய பட்டதாரிகளிலொருவர். சுவாமி விபுலானந்த அடிகள் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியராக விளங்கிய காலத்தில், அவரிடம் வித்துவான் டிப்ளோமா வகுப்பிற் கற்றுத் தேறியவர்; நாவற்குழியூர் நடராசனாக மறுமலர்ச்சிக் கவிதைகள் பாடிய கவிஞர். அவருடைய 'சிலம்பொலி' இன்றும் சிலர் காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பகுதியினை நீண்ட காலம் வழிநடத்தியவர். அக்காலத்தில் இடையே மீண்டும் கல்வித் துறையில் ஈடுபட்டு முதுமாணிப் பட்டத்தைப் பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் களத்திலே பெற்றவர். கலாநிதிப் பட்டத்துக்கு அவர் செய்த ஆய்வை நெறிப்படுத்தியபோது எம்முடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் சம்பந்தமாக அவர் செய்த ஆய்விற்காக இலங்கைக் கொழும்புப் பல்கலைக் கழகம் அவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கியது. அப்பட்டம் பெற்றுச் சிலவாண்டுகளுக்குள்ளே ஓய்வு பெற்றபின், இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் இயக்குனர் சபை அங்கத்தவராகக் கடமையாற்றி விட்டு வெளிநாடு சென்றுவிட்டார்.

அவரது ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்ற ஆய்வு நூல் 1990ம் ஆண்டிலும், 'கவிக்கறபரசி' என்ற கவிதைத் தொகுதி நூல் 1994ம் ஆண்டிலும் இலங்கை அரசின் தமிழ் சாகித்தியப் பரிசுகளைப் பெற்றனவாகும். அன்றியும், இலங்கை இந்துக் கலாசார இராஜாங்க அமைச்சு 1994ம் ஆண்டு நடத்திய தமிழ் சாகித்திய விழாவின்போது இலக்கிய வித்தகர் என்ற விருதினையும் அவருக்கு வழங்கிக் கௌரவித்தது. அவர் வெளிநாடு சென்றதால் நல்லதொரு ஆய்வாளரைத் தமிழியல் இழந்து விட்டதே என்று கவன்றவர்களின் யானுமொருவன். இன்று அவருடைய ஆய்வுக் கட்டுரைகளைப் பார்வையிடும்போது அக்கருத்தினை மாற்றிக் கொள்ள வேண்டியிருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நடராசா அவர்களின் பன்னிரண்டு ஆய்வுக் கட்டுரைகள் இத்தொகுப்பிலே இடம்பெறுகின்றன. அவை அவருக்குள்ள தமிழ் இலக்கணம், இலக்கிய, வரலாற்று ஈடுபாடுகளைக் காட்டி நிற்கின்றன. தமிழ்ப் பிரபந்த வரைவிலக்கணங்கள் பற்றி அவர் செய்த ஆய்வு முதற்கட்டுரை. வெற்றிக்கரந்தை மஞ்சரி என்பது வெட்சிக்கரந்தை மஞ்சரி என்றும், புறநிலையும் புறநிலை வாழ்த்தும் தனித்தனியாக வேறன்று எனவும், செவியறிவு நூ உவையும் அவையடக்கியலையும் ஒன்றாக்கியது தவறா என்றும், இயன்மொழி வாழ்த்து இலக்கணத்தில் முன்னோர் என்பது அன்னோர் என்றும், முப்பத்திரண்டு வெண்பாவாற் கைக்கிளை வருமென்பதற்கு ஆட்சி இல்லை என்றும் தசாங்கத்துட் கொடையைச் சேர்த்தது தவறு என்றும் ஆசிரியர் நுணுகி ஆராய்ந்துரைத்துள்ளார்.

உ ஊ கார நவொரு நவிலா எனும் தொல்காப்பிய எழுத்ததிகாரச் சூத்திரம், உ ஊ கார நவ்வொடு நவிலா என்றிருத்தலே சரியென அவர் செய்த பாடபேத ஆராய்ச்சி பல்வேறு ஆட்சிகளை மையமாகக் கொண்டு செய்யப்பட்டிருத்தல் பாராட்டுக்குரியதாகும்.

தமிழ் மரபிலக்கிணத்திற்கு பல்வேறு ஐயங்கள் இருக்கின்றன என்பதைக் குற்றியலிகரம், குற்றியலுகரம் பற்றிய கட்டுரை காட்டுகிறது. அப்பகுப்புத் தமிழ், இலக்கணத்திற்கு அவசியந்தானா என்ற கேள்வியை அவரோடு சேர்ந்து நாமும் கேட்க வைத்திருக்கிறார் ஆசிரியர்.

அடுத்த கட்டுரையிலே, சார்பெழுத்துக்கள் என்றால் எவை? ஒலி வடிவம் மட்டுமே உள்ள எழுத்துக்களா, அன்றி எழுத்து வடிவமும் உள்ள எழுத்துக்கள் சிலவும் சார்பெழுத்துக்களா? அப்படியானால் அவற்றின் வரைவிலக்கணம் என்ன? தமிழ் எழுத்துக்களின் தொகையிலும்

பார்க்கச் சார்பெழுத்துக்களின் தொகை பலமடங்கு அதிகமென இலக்கண ஆசிரியர்கள் காட்டுவது ஏற்கத்தக்கதா? சார்பெழுத்தெனக் கொள்ளப்படும் ஆயுதம் எழுத்தா அல்லது எழுத்தைப் போன்ற ஒன்றா? அது எழுத்தோரன்ன என்றால், ஆயுதம் என்ற முப்பாற் பள்ளி என்று ஏன் அதற்கு எழுத்து வடிவம் சொல்லப்பட்டிருக்கிறது? சார்பெழுத்துக்கள் என்று ஒரு பகுப்பு இலக்கணத்துக்கு இன்றியமையாததா? என்பன போன்ற கேள்விகளை எழுப்பி விடை காண முயன்றிருக்கிறார் ஆசிரியர். இவர் எழுப்பியுள்ள சந்தேகங்கள் இலக்கண ஆசிரியர்களைச் சந்தேகிக்க வைக்கத் தக்கனவே.

ஐந்தாவது கட்டுரையிலே தமிழ் எழுத்துக்கள் சிலவற்றின் இருவகை ஒலிவடிவங்களை அவதானித்து, அவற்றை வகைப்படுத்திக் காட்டியிருக்கிறார். மொழியியலாளர் சிந்திக்க வேண்டிய கருத்துக்கள் இவை.

அடுத்து, புறநானூற்றில் இடம் பெறும் அகத்திணைப் பாடல்கள் மூன்று அங்கு வைக்கப்பட்டது ஏன் என்று சிந்திக்க வைத்துள்ளார் ஆசிரியர்.

ஏழாவது கட்டுரையில், தமிழ் அரிச்சுவடியைப் புதிய கண்ணோட்டத்தில் நோக்கி அங்கு வெளிப்படையாகப் புலனாகாத தத்துவம் புதைந்திருப்பதைத் திறமையாக நிறுவ முற்பட்டிருக் கிறார்.

அதனைத் தொடர்ந்து, பாரதியாரின் குயிற்பாட்டு எவ்வாறு வேதாந்தப் பொருளுடையதாக அமைகின்றது என்பதை நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்.

திருக்குறளுக்கு இன்னமும் சிறந்த பதிப்பு வெளிவரவில்லை என்பதை ஒரு குறட்பா மூலம் முன்வைக்கிறார் ஆசிரியர் அடுத்த கட்டுரையில்.

பத்தாவது கட்டுரையில், ஜே. பி. லூயிஸ் முதலானோர் எழுதிய குறிப்புக்களைத் தொகுத்து வன்னியின் தெற்கெல்லை நூறு ஆண்டுகளுக்கு முன் எப்படியிருந்தது என்று ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டிருக்கிறார் ஆசிரியர்.

நல்ல பதிப்பெதுவும் வெளிவராமலிருந்த வையா பாடல் என்ற நூலைத் தமது முதுமாணிப் பட்டப் பரீட்சையின் பொருட்டுத் திருத்தமான பதிப்பாகத் தயாரித்திருந்தார். அப்பொழுது அதற்கெழுதிய ஆய்வுரையினை இப்பொழுது மீண்டும் புதுக்கிச் சிற்சில திருத்தங்களுடன் இங்கு தந்திருப்பது வரவேற்கத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் பெயர்க் காரணங்களைக் காலத்துக்குக்காலம் பல்வேறு ஆசிரியர்கள் பல்வேறு கோணங்களிலிருந்து பார்த்துத் தங்கள் கருத்துகளை அவ்வப்போது வெளியிட்டிருக்கி றார்கள். அவற்றையெல்லாம் தொகுத்து நோக்கி ஆராய்ந்து, எவற்றை எவ்வெக் காரணங்களுக் காகத் தள்ளலாம் என்றும் கொள்ளலாம் என்றும் காட்டித் தனது வரலாற்றுத்துறை ஆய்வாற்றலை நிறுவியிருக்கிறார் இந்நூலாசிரியர் இத்தொகுப்பின் இறுதிக் கட்டுரையில்.

இக்கட்டுரைகள் படிப்போரின் சிந்தனையைத் தூண்டிப் புதிய நோக்கிலே கருத்தைச் செலுத்த உதவுவனவாய் அமைந்திருத்தல் பாராட்டற்பாலதாகும்.

*பொ. பூலோகசிங்கம்*
*37,32வது ஒழுங்கை*
*கொழும்பு 6.*

# ஓய்ந்தாய்ந்து பார்க்கையிலே
# நூலாசிரியர் உரை

அவ்வப்போது நான் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் பத்தினைக் கொண்ட ஒரு தொகை மலராக இது மலர்கிறது

கலநிதிப் பட்டத்துக்காக நான் எழுதிய நூலின் முதற் பகுதி ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்ற பெயரில் 1982 ஆம் ஆண்டு வெளிவந்தது. அதன் இரண்டாம் பகுதி தாமதமாவதால், அதன் சுருக்கத்தைத் தமிழ்ப் பிரபந்த வரைவிலக்கணங்களிலுள்ள சில முரண்பாடுகள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரையாக்கி தந்துள்ளேன்.

1986 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் நான் எழுதிப் படித்த கட்டுரையாய தொல்காப்பிய நூற்பா முரண்பாடும் உரையாசிரியர்கள் இடர்ப்பாடும் என்ற ஆய்வினை இதன் இரண்டாம் இதழாக இணைத்துள்ளேன்

இம்மலரின் மூன்றாவது இதழில் வரும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் என்ற கட்டுரை குற்றியலிகர உகரங்களைப் பற்றிய ஒரு பதிய கண்ணோட்டமாகும்

தமிழ் எழுத்துக்கள் பல இருவேறு ஒலி வடிவங்களைக் கொண்டியலுந் தன்மையை அவதானித்து அவற்றை வகைப்படுத்திப் பார்க்க எடுத்துக்கொண்ட முயற்சியே இத்தொகுப்பின் ஐந்தாம் இதழாக அமைகிறது.

புறநானூறு என்ற தொகை நூலில் அகத்திணை சார்ந்த சில பாடல்கள் இருப்பதனை அவதானித்து, அவற்றை ஆராய்ந்து பார்க்க எடுத்துக்கொண்ட எத்தனமே இம்மலரின் இதழாக மலர்கிறது

***ஆசிரியர்***



## உபயம்

சங்கத் தமிழறிவும் சங்கதமும் இலத்தீனும்
சிங்களமும் ஆங்கிலமும் சேர்ந்து மனைமாட்சி
பொங்கக் கலைபயிற்றிப் புகழ்புரிந் தில்லறஞ்செய்
தங்க ராணியென் தாரத்துக் குபயமிது

# இலக்கண ஆய்வுகள்

## தமிழ்ப் பிரபந்த வரைவிலக்கணங்களிலுள்ள சில முரண்பாடுகள்

தொல்காப்பியனார் காலத்தின் பின் தமிழ் இலக்கியங்கள் புது வடிவங்கள் பெற்றுப் பெருகுதலை உணர்ந்த சான்றோர், அவற்றை வகைப்படுத்தி அவ்வடிவங்களுக்கான இலக்கணம் வகுக்கத் தலைப்பட்டனர். தொல்காப்பியனார் காலத்தில் அகப் பொருளிலே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை ஆகிய ஏழு திணைகளிலும், புறப் பொருளிலே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய ஏழு திணைகளிலுமே செய்யுள் இலக்கியம் செய்யப்பட்டதாகத் தொல்காப்பியப் பொருளதிகாரத் திணைப்பகுப்பிலிருந்து தெரிகிறது. இவ் வழக்கிலமைந்த அகத்திணைப், புறத்திணைத் தனிச் செய்யுள்கள் பெரும்பாலும் ஆசிரியப் பாங்கிலமைந்தன.

சங்ககாலத்தெழுந்த அகத்திணைப், புறத்திணைப் பாடல்களைத் தொடர்ந்து, தேவர்ப் பரவும் இசைப்பாடல்கள் திருமால், செவ்வேள் ஆகிய தெய்வங்களையும், வையை நதியையும் போற்றிப் பரிபாட்டென எழுந்தன. அப் பாடல்கள் அதுவரை கையாளப்பட்டு வந்த ஆசிரியப்பா மரபிலிருந்து வேறுபட்டு, வெண்டளையும் ஆசிரியத் தளையும் விரவி வந்து, துள்ளலோசை பொருந்திப் பண்ணோசை கூட்டிப் பாடத்தக்கனவாயமைந்திருந்தன. இதனைப் புதிய ஒரு இலக்கிய வடிவமென்றே கொள்ளுதல் வேண்டும். சங்ககாலத்திறுதிக்கும் காவிய காலத்திற்குமிடைப்பட்ட காலத்தே தமிழ் இலக்கியங்கள் பல்வேறு புது வடிவங்கள் பெற்றுப் பெருகலாயின. அதனை உணர்ந்த சான்றோர் அதனை வகைப்படுத்த முயன்றனர். அம் முயற்சியில் எழுந்தனவே பாட்டியல் நூல்களாகும்.

பாட்டியல் நூல்களுட் காலத்தால் முந்தியது பன்னிரு பாட்டியல் என்று கருதப்படுகிறது. அது கி.பி பன்னிரண்டாம், பதின் மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்கலாம் என்பது அறிஞர் கருத்து. தொல்காப்பியனார் காலத்தில் வழக்கிலிருந்த இலக்கிய வடிவங்கள் சில மறைந்தும் வேறு சில திரிந்தும் போய் விட்டமையால், அவற்றின் பெயர்கள் சில வேறுபட்டு விளங்குதலைப் பன்னிரு பாட்டியலிற் பார்க்கிறோம். அதிற் கூறப்பட்டுள்ள அறுபத்தொரு இலக்கிய வடிவங்களுட் பதினெட்டு வடிவங்கள், தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களெனப் பொதுவாகக் குறிக்கப்படுவனவற்றுக்குப் புறம்பானவையாகக் காணப்படுகின்றன.

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்ற வரையறை பதினேழாம் நூற்றாண்டில் ஏற்பட்டிருத்தல் வேண்டும். அக்காலப் பகுதியில் வாழ்ந்த படிக்காசுப் புலவர், தான் பாடிய சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவில், ''தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்'' என்று சொல்லியிருப்பதே அதற்கான முதல் இலக்கியச் சான்றாக உள்ளது. அதனையடுத்து, 1732 ஆம் ஆண்டில் வீரமாமுனிவர் இயற்றி வெளியிட்ட சதுரகராதியிற் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்று வரையறை செய்து, சாதகம் முதலாய்ச் சிறுகாப்பியமீறாய் விளக்கப்பட்டிருக்கின்றன. பிரபந்த மரபியல், பிள்ளைக் கனி முதற் புராண மீறாத் தொண்ணூற்றாறெனுந் தொகையாம் என்று குறித்துள்ளது. பிரபந்த தீபிகையின் முதற் செய்யுளிலே,

''பதினாறை யாறிற் பெருக்கு பிரபந்ததி
பலவகை யெடுத் துரைக்கின்'' என்று கூறப்படுகின்றது.

இவற்றிலிருந்து 17 ஆம் நூற்றாண்டு முதற் பிரபந்த வகைகள் தொண்ணூற்றாறெனுங் கொள்கை உறுதியடைந்து வந்திருக்கிறதெனத் தெரிகிறது. பிரபந்த மரபியல், சிதைந்த கையெழுத்துப் பிரதியாகச் சென்னை அரச ஓலைச் சுவடி நூலகத்தே ஒதுங்கிக் கிடப்பதாலும், செந்தமிழ்ப் பதினேழாந் தொகுதியில் வெளிவந்த இருபத்தைந்து முழுச் செய்யுள்களையும் ஒரு அரைச் செய்யுளையும் விடப் பிரபந்த தீபிகை முழுமையாக அகப்படாமையாலும், சான்றோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் எவையெனத் துணிவதற்கு வீரமாமுனிவரின் கூற்றைத் தவிர வேறு மார்க்கமெதுவும் இப்பொழுதில்லை. ஏனைய பாட்டியல் நூல்களாகிய வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல் ஆகியனவும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களை முற்றாகக் கூறாதொழிந்தன.

வச்சணாந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியல் பிள்ளைக்கவி முதலாய்ப் புராணமீறாக ஐம்பத்தைந்து பிரபந்தங்கள் பற்றியே பேசும். அவற்றுள் மூன்று தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களெனக் கூறப்படுவனவற்றுக்குப் புறம்பானவையாகக் காணப்படுகின்றன. நவநீதப்பாட்டியல் ஐம்பத்தைந்து பிரபந்தங்கள் பற்றிக் கூறும். அவற்றுள் ஐந்து சதுரகராதியிற் குறிப்பிடப்பட்டுள்ள தொண்ணூற்றாறு பிரபந்தங்களுக்குப் புறம்பானவையாகக் காணப்படுகின்றன. சிதம்பரப் பாட்டியல் அறுபத்து மூன்று பிரபந்தங்கள் பற்றிக் கூறும். அவற்றுள் இரண்டு வீரமாமுனிவரின் பிரபந்த வகுப்பிற் சேராதனவாகும். இலக்கண விளக்கப் பாட்டியல் எழுபத்து மூன்று பிரபந்த வகைகளின் இலக்கணத்தைக் கூறும். அவற்றுள் மூன்று வீரமாமுனிவரின் கணிப்பில் இடம் பெறாதொழிந்தன. பிரபந்த தீபிகை என்ற பாட்டியல் நூலின் ஒரு பகுதியே இப்போது கிடைத்யிருக்கிறது. 1919 ஆம் ஆண்டு வெளிவந்த செந்தமிழ் என்ற சஞ்சிகையின் 17 ஆந் தொகுதியது 3 ஆம் பகுதியிற் பிரசுரிக்கப்பட்டுள்ள இப் பாட்டியற் செய்யுள்களிலிருந்து எழுபத்தாறு பிரபந்தங்களின் இலக்கணம் தெரிகிறது.

''தொண்ணூற்றாறு பிரபந்தாது யெடுத்துரைக்க'' வென்றெழுந்த இந்நூலின் இறுதி இருபது பிரபந்தங்களின் இலக்கணம் மறைந்தொழிந்தன. எனவே 96 பிரபந்தங்கள் எனக் குறிக்கப்பட்டவை எவையென அறிய இப்போது வீரமாமுனிவரின் சதுரகராதியையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

வீரமாமுனிவர் பிரபந்தங்களைக் கூறிய ஒழுங்கு முறையும், பிரபந்த தீபிகை ஆசிரியர் கூறிய ஒழுங்கு முறையும் பெரிதும் ஒத்திருக்கின்றன. பத்துப் பிரபந்தங்களின் பெயர்கள் மட்டுமே ஒழுங்கு மாறி இடம் பெற்றிருக்கின்றன. அவற்றின் ஒற்றுமை நோக்கி ஒருவர் அவற்றைப் பிறவற்றோடு இணைத்திருத்தல் கூடும். உதாரணமாக, சாதகம், பிள்ளைக்கவி, பரணி, கலம்பகம், வருக்கோவை, மும்மணிகோவை, அங்கமாலை, அட்ட மங்கலம், அநுராகமாலை.....என்ற பிரபந்த தீபிகை அமைத்த ஒழுங்கில், அகப்பொருட்கோவை, ஐந்திணைச் செய்யுள் என்ற இரண்டினைக் கலம்பகத்தின் பின் வைத்து ஏனைய ஒழுங்கினை அவ்வாறே கொண்டுள்ளது சதுரகராதி. இவ்வாறே வருக்கமாலை, எண்செய்யுள், புறநிலை, கடைநிலை, கையறுநிலை, கைக்கிளை, தசாங்கத்தியல், அரசன் விருத்தம் ஆகியனவும் ஒழுங்கு மாறிக் காணப்படுகின்றன. பிரபந்ததீபிகை நூலாசிரியரும், வீரமாமுனிவருமே பலசந்தமாலை என்றும் ஒலியலந்தாதி என்றும் குறிப்பிடுவர். ஏனையோர் அவற்றை முறையே பல்சந்தமாலை, ஒலியந்தாதி என்றே கூறுவர்.

பிரபந்தம் ஒவ்வொன்றுக்கும் இவ்விருவர் கூறும் விளக்கங்களும் எவ்வித பேதமுமின்றி சொல்லுக்குச் சொல் ஒற்றுமை காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக வீரவெட்சி மாலை என்ற பிரபந்தத்தின் விளக்கத்தைச் சதுரகராதி

''சுத்த வீரன் மற்றாரூரிற் சென்று கோடற்கு வெட்சிப்
பூமாலை சூடிய வண்ணம் போய்நிரை கவர்ந்துவரி னவனுக்கு
முன்பு தசாங்கம் வைத்துப் போய்வந்த வெற்றியைப் பாடுவது'' என்று கூறும்.
அதற்கான பிரபந்தத் தீபிகைச் செய்யுள்,

''மிகுசுத்த வீரன்மாற் றார்புறஞ் சென்று பசு
வேட்டுநிரை கவருதற்கு
வெட்சியின் மாலைசூ டியவண்ண மேகிய
மீட்டாவி னிரைகவர்ந்தே
லிகறுறந் தூர்வரும் தலைவன்மேற் பாவினுக்
கியைதசாங் கம்பொருந்த
லிசை வெற்றி யைக்கருதி யேபாட லதுவீர
மெனும் வெட்சி மாலையாமே''

என்பதாகும். ஒன்றிலிருந்து மற்றது பிறந்திருக்கின்றது என்பது இவ்விரு விளக்கங்களையும் சேர்த்து வாசிப்போருக்குப் புலப்படாமற் போகாது. அன்றியும் வெட்சிமாலைக்கு வீர என்ற அடை கொடுத்தவர்கள் இவ்விரு ஆசிரியர்களையும் விட வேறிலர். மேலும் தசாங்கம் வைத்துப் பாடுவது என்ற குறிப்பும் இவ்விரு ஆசிரியர்கள் மட்டுமே கூறியுள்ளனர். இவ்வாறே ஒவ்வொரு பிரபந்த விளக்கத்திலும் இருவரும் ஒரே சொல்லாட்சியினைக் கையாண்டிருக்கக் காணலாம். இவற்றிலிருந்து, ஒருவர் மற்றவர் நூலைத் தழுவித் தன் ஆக்கத்தை அமைத்துள்ளனர் என்பது தெட்டத் தெளிவாகிறது. பரம்பரையாக வந்த தமிழறிஞர் செய்த தமிழ் நாட்டுப் பாட்டியல் நூல்களைப் பின்பற்றாது, பிறநாட்டவர் செய்த சதுரகராதியென்ற புதுமுறை வசன நூலைத்தழுவித் தன் பிரபந்த தீபிகையை முத்து வேங்கட சுப்பையர் செய்யுள் யாப்பிற் செய்திருப்பாரென்று நம்ப முடியாது. தன் சதுகராதியிற் பிரபந்தங்கள் பற்றி எழுதுவதற்கு வீரமாமுனிவருக்கு ஏதாவது ஆதாரந் தேவைப்பட்டிருக்கும். எனவே வீரமாமுனிவர் பிரபந்த தீபிகையிலிருந்து தன் குறிப்புக்களைப் பெற்றுள்ளார் என்று கொள்வதே பொருத்தமாயிருக்கும். முத்து வேங்கட சுப்பையர் 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ அன்றி அதற்கு முன்னரோ உயிர் வாழவில்லை என்பதனை நிரூபித்தாலன்றி இக்கருத்தைத் தள்ளிவிட முடியாது.

வீரமாமுனிவர் குறுப்பிட்ட தொண்ணூற்று வகைப் பிரபந்தங்களை விடப் பாட்டியல் நூல்களில் வேறு பல பிரபந்தங்களும் கூறப்பட்டுள்ளன என்று கண்டோம். அவற்றைத் தொகுத்துப் பார்க்கையில் வேந்தன் குடைமங்கலம், ஒருபோகு, மறம், யானைத் தொழில் (யானைவஞ்சி), இன்னிசைத் தொகை, ஐம்படை, விருத்தம், இல்லற வெள்ளை, செந்தமிழ் மாலை, சீர்மெய்க் கீர்த்தி, செருக்களவழி, மறக்களவஞ்சி, யாண்டுநிலை, பறைநிலை,கலி அந்தாதி, கடாநிலை, கணக்கு, பத்துப்பாட்டு, தொடர்நிலைச் செய்யுள், புராணம், தொகை வெண்பா, வஞ்சிமாலை சித்திரச் செய்யுள், இசைச் செய்யுள், பொருள் வஞ்சி, என்பன மேலதிகப் பிரபந்தகளாகத் தெரிகின்றன. எனவே முதற் கூறப்பட்ட தொண்ணூற்றுடன் இந்த இருபத்து நான்குஞ்சேர நூற்றிருபது பிரபந்த வகைகள் பாட்டியலில் கூறப்பட்டுள்ளன எனக் காண்கிறோம். அன்றியும் தேவபாணி, மும்மதத்யதானை, அம்மானை, பாவை, கிழங்கு, நீராட்டு என்ற பிரபந்த வகைகளும் பேசப்படுகின்றன.

தொண்ணூற்றாறு என்ற வரையறைக்குள் அடங்கிய பிரபந்தங்களுள் வெற்றிக்காந்தை மஞ்சரி, புறநிலை வாழ்த்து, போர்க்கெழுவஞ்சி, வாதோரண மஞ்சரி, செவியறிவு நூல், வாயுறை வாழ்த்து, இயன்மொழி வாழ்த்து, பெருமங்கலம், முதுகாஞ்சி, பவனிக் காதல், எழுகூற்றிருக்கை, தசாங்கத்தியல், வகுக்கக் கோவை, மணிமாலை, பெருமகிழ்ச்சி மாலை, மெய்க்கீர்த்தி மாலை,

தண்டக மாலை ஆகியவற்றுக்குப் பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல் ஆகிய நூல்களில் இலக்கணம் கூறப்படவில்லை. அவற்றுள் முதன் மூன்றின் இலக்கணத்தைப் பாட்டியல் நூல்களுட் பிரபந்த தீபிகையில் மட்டுமே காணலாம். முதற் பத்தின் இலக்கணத்தை தொல்காப்பியத்தை நோக்கியும் தெரிந்து கொள்ளக்கூடியதாயிருக்கிறது. தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களின் வரையிலக்கணத்தை சதுரகராதியிலிருந்தே இப்பொழுது அனைவரும் பெற்று வருகின்றனர் எனலாம். சதுரகராதிக்குப் பின் வந்த தமிழ் அகராதிகளும் வீரமாமுனிவர் தொண்ணூற்றாறு பிரபந்தங்களுக்குத் தந்துள்ள வரையிலக்கணங்களையே பெற்றுப் பிரசுரித்திருக்கக் காண்கிறோம். அவ்வரைவிலக்கணங்களுட் சிலவற்றை ஈண்டு நோக்குவோம்.

வெற்றிக்கரந்தை மஞ்சரி என்ற பிரபந்த வகையின் வரைவிலக்கணத்தைச் சதுரகராதி, ''பகைவர் கொண்ட தந்திரை மீட்போர் கரந்தைப் பூமாலை சூடிப்போய் மீட்பதைக் கூறுவது'' என்றுரைக்கும் பிரபந்த தீபிகை அதனை.

'மாற்றவர்கள் கொண்டநிரை மீட்போர் கரந்தைப்பூ
மாலைசூ டிப்போகி மீள்வகையினை விரித்தோதன்
வெற்றிக்கரந்தை' என்று கூறும் இக் கருத்தினை தொல்காப்பியனார் புறத்திணை யியலில் வெட்சித் திணையின் துறைகளுளொன்றாக,

'ஆரம ரோட்டலு மாபெயர்த்துத் தருதலுஞ்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத் துரைத்தலுந்
தலைத்தா ணெடுமொழி தன்னோடு புணர்த்தலும்
அனைக்குரி மரபினது கரந்தை'

எனக் குறிப்பிட்டுள்ளார். 'குறுநில மன்னரும், காட்டகத்து வாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங்காண்டலும், வெட்சி மறவர் கொண்ட நிரையைக் குறுநில மன்னரா யினும், காட்டகத்து வாழும் மறவராயினும் மீட்டுத் தருதலும், வேந்தற்கு உரிய புகழமைந்த தலை மைகளை ஒருவற்கு உரியவராக அவன்றன் படையாளரும் பிறருங் கூறலும், தன்னிடத்துளதாகிய போர்த்தொழிலின் முயற்சியாலே வஞ்சினங்களைத் தன்னொரு கூட்டக் கூறலும் ஆகிய ஏழு துறைக்கும் உரிய மரபினையுடைய கரந்தை யெனவும் வழங்கிற்றெனத் தெரிகிறது. ஆகவே தொல்காப்பியர் கூறும் வெட்சித் திணையின் ஒரு துறையாகிய ஆநிரை மீட்டல் பற்றிவரும் இலக்கியமே வெற்றிக்கரந்தை மஞ்சரியாகும். கரந்தைத் துறைகள் அனைத்துமே வீரமும் வெற்றியும் பொருந்தியனவாயிருப்ப, இப் பிரபந்தம் மட்டும் வெற்றியென்ற அடைமொழியைச் சிறப்பாகப் பெறுவதற்கு காரணம் தெரியுமாறில்லை. அது வெட்சித் திணையின் கரந்தைத் துறை பற்ற வருதலால், வெட்சிக் கரந்தை மஞ்சரி என்றிருந்திருக்கலாம். வேந்துவிடு முனைஞர் வேற்றுப் புறக்களவின் ஆதந் தோம்பல் மேவற்றாகும் என்ற நூற்பா உரையில், மீட்டலை வெட்சிக் கரந்தை என்பாரும் உளர் என்று நச்சினார்க்கினியர் கூறுயிருப்பது இதனை வலியுறுத்தும்.

புறநிலை, புறநிலை வாழ்த்து என இரு பிரபந்த வகைகளை வீரமாமுனிவர் குறிப்பிட்டுள்ளார். அவர் தந்த விளக்கப்படி 'நீ வணங்குந் தெய்வம் நின்னைப் பாதுகாப்ப நின் வழி மிகுவதாக வெனக் கூறுவது' புறநிலையாம் இதனைப் பிரபந்த தீபிகை

'நீ வணங்குந் தெய்வமே நினைப்பாது காப்பநின்
வழிவழியு மிகுவதாய் நிகழ்தல் புறநிலையாகுமே'

என்று கூறும். புறநிலை வாழ்த்தாவது 'வழிபடு தெய்வநிற் புறங்காப்பப் பழிதீர் செல்வமோ டொருகாலைக் கொருகாற் சிறந்து பொலிவாயென வெண்பா ஓதலுமாசிரிய மிறுதியுமாகப்பாடு வது' என்பது வீரமாமுனிவர் தந்த விளக்கம். இவ்விரு பிரபந்த வகைகளின் வரைவிலக்கணப்படி அவ்விரண்டும் ஒரு பொருளினதாகவே தோன்றும். இக் கருத்தை,

'வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்றும் புறநிலை வாழ்த்தே
கவிநிலை வகையும் வஞ்சியும் பெறா அ'

என்ற தொல்காப்பியற் செய்யுளியல் நூற்பாவிற் காணலாம். பாடாண்டிணையின் துறைகளு ளொன்றாகத் தொல்காப்பியனார் புறநிலை வாழ்த்தைக் கூறுவர். அங்கு 'ஆவயின் வரு உம் புறநிலை வாழ்த்து என்பதனைத் தெய்வவழியாக உடைத்தாயினும் மக்கள் கண்ணதேயாகித் தோன்றும் பாட்டுடைத் தலைவன் முன்னிலையாகத் தெய்வம் படர்க்கையாக வாழ்த்தும் வாழ்த்து என விரித்துரைப்பர் நச்சினார்க்கினயர். புறநிலை, புறநிலை வாழ்த்தென வீரமாமுனிவர் இருகூறா க்கி இசைத்த பிரபந்த வகைகளின் விளக்கங்கள் இக் கருத்தினையொட்டியே கிடக்கின்றன. இவற்றிலிருந்து அவர் கூறும் அவ்விரு வகைகளும் ஒன்றையே குறிக்குமென்பது தெளிவாகிறது. அவையிரண்டும் வெவ்வேறாயின், புறநிலை வாழ்த்துக்குரிய செய்யுள் வகை கூறிய வீரமாமுனி வர் புறநிலைக்குரிய செய்யுள் வகை கூறாதொழிந்தது வியப்பே. அதற்கேதாவது காரணமிருக்க முடியுமானால், அது புறநிலை என்ற பிரபந்த வகைக்கு தனியாக ஒரு இலக்கியச் சான்றினைக் காணமுடியாமை யென்றே கொள்ள வேண்டும். புறநிலை வாழ்த்து 'வெண்பா முதலு மாசிரிய மிறுதியுமாகப் பாடுவது' என்ற நியதியை வீரமாமுனிவர் போன்றோர்,

'புறநிலை வாயுறை செவியறிவு நூ உவென்த்
திறநிலை மூன்றுந் திண்ணிற் றெரியின்
வெண்பா வியலிது மாசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின மென்ப'

என்ற தொல்காப்பியச் செய்யுளியற் சூத்திரத்தால் பெற்றிருத்தல் கூடும். அன்றியும், பன்னிரு பாட்டியலார்

'புறநிலை வாயுறை செவியறி வுறூ உவெனக்
திறமையின் மருட்பாச் செய்யுளின் வருமே'

எனப் புறநிலை வாழ்த்து மருட்பாவாகிய செய்யுளில் வருமெனக் கூறியதும் அதனையே குறிக்கும். இவ்வகை இலக்கியத்துக்கான அடி வரையறை தெரிந்து கொள்வதற்கும் தொல்காப்பியத்தையே நாட வேண்டியுள்ளது. அதன் செய்யுளில்

'கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை யென்றிவை
தொகுநிலை யளவி னடியில வென்ப'

எனச் சொல்லியிருப்பதால், அவை பெருமைக்கு எல்லை இத்துணையெனத் தொகுத்துக் கூறந் தன்மையுடைய அளவால் வரும் அடியையுடைய வல்ல' என்பர் பேராசிரியர்.

மேற்காட்டியுள்ள மூன்று நூற்பாக்களிலும் புறநிலை வாழ்த்தைப் புறநிலையெனத் தொல்காப்பியர் குறிப்பிட்டதிலிருந்து, புறநிலையென்பது புறநிலை வாழ்த்துக்குப் புறம்பான ஒரு பிரபந்த வகையென வீரமாமுனிவர் கொண்டார் போலும். அவ்வாறாயின், தொலிகாப்பியனார் புறநிலை வாழ்த்துக்கு வரைவிலக்கணங் கூறி அதன் செய்யுள் வகை, அடிவரையறை ஆகியன கூறாதொழிந்து, புறநிலைக்கு வரைவிலக்கணமின்றிச் செய்யுள் வகையும் அடிவரையுமே கூறிப் போந்தார் என்று கொள்ள வேண்டியேற்படும். அது முறையாகாது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

செவியறிவுநூ உ, இயன் மொழி வாழ்த்து என்பன தொல்காப்பியப் பிரயோகங்களாகவே அமைந்திருக்கின்றன. பாடாண்டிணைத் துறைகள் கூறுமிடத்துக்

'கொடுப்போ ரேத்திக் கொடார்ப் பழித்தலு
மதித்தூர்ந் தேத்திய லியன் - மொழி வாழ்த்துஞ்'
.........................................................
.........................................................
.........................................................
வாயுறை வாழ்த்தும், செவியறிவுநூஉ
மாவயின் வரு உம் புறநிலை வாழ்த்தும்
.........................................................
.........................................................

என அவ்விரண்டினையும் தொல்காப்பியனார் இரு வேறு துறைகளாக வகுத்துள்ளார். செவியறிவுநூஉ என்பதனைச் செவியுறை என்றும் தொல்காப்பியம் கூறும்.

'செவியுறை தானே
பொங்குத லின்னிப் புரையோர் நாப்ப
ணவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே'

என்றுரைத்த தொல்காப்பிய வரைவிலக்கணத்துக்கு பேராசிரியர், 'பெருக்கமின்றிப் பெரி யோர் நடுவண் அடங்கி வாழ்தல் கடப்பாடெனச் சொல்லிச் செவிக்கணறியுறுத்துவது செவியறிவுறூஉ என உரை கூறினார். சதுரகராதியோ செவியறிவுறூஉ' என்பதற்குப் 'பொங்குத லின்றிப் புரையோர் நாப்ப ணவிதல் கடனென அவையடக்கி அப்பொருளுற வெண்பா முதலு மாசிரியமிறுதியுமாகக் கூறுவது, என விளக்கந் தரும். வீரமாமுனிவர் போன்றோர் தம் விளக்கத்தை மேற்காட்டிய தொல்காப்பிய நூற்பாவிலிருந்தே பெற்றார்களென்பது, அவர்கள் அதை விளக்க உபயோகித்த நூற்பாச் சொற்களிலிருந்து நன்கு புலனாகிறது. ஆயினும், அவையடக்கியலை வேறா கவும் செவியறிவுறூஉவை வேறாகவும் தொல்காப்பியர் சொல்லியிருக்க, வீரமாமுனிவர் புரை யோர் நாப்ப ணவிதல் கடனென அவையடக்கி' எனச் செவியறிவுறூஉ வேயன்றி அவையடக்கன்று என்பதை அவர் விளக்கங்கோடற்குக் கொண்ட நூற்பாவே நிரூபித்து நிற்கும்.

சதுரகராதியின் பின்னெழுந்த தமிழ் அகராதிகளிளெல்லாம் வீரமாமுனிவர் செய்த இத் தவறு பிரதிபலித்துள்ளது.

செவியறிவுறூஉ இலக்கியம் வெண்பாவும் ஆசிரியமும் கலந்த மருட்பாவாற் செய்யப்படு மென்பதும், அதற்கு அடிவரையில்லையென்பதும் முற்கூறிய புறநிலைவாழ்த்துக்கெடுத்துக் காட்டிய நாற்பாக்களால் பெறப்படும்.

'அடுத்தூர்ந் தேத்திய இயன் மொழி வாழ்த்து' என்ற பாடாண்டுறைக்குப் பேராசிரியர் தரும் உரையாகிய 'தலைவன் எதிர் சென்று ஏறி அவன் செய்தியையும் அவன் குலத்தோர் செய்தியையும் அவன் மேலே ஏற்றிப் புகழ்ந்த இயன் மொழி வாழ்த்து' என்பதனைத் தொடர்ந்து அவர் தரும் விளக்கத்தில், 'என்றது இக்குடிப் பிறந்தோர்க்கெல்லாம் இக்குணங்கள் இயல்பென்றும், அவற்றை நீயும் இயல்பாக உடையை என்றும், அன்னோர் போல எமக்கு நீயும் இயல்பாக ஈயென்றும் உயர்ந்தோர் கூறி அவனை வாழ்த்துதல் இயன் மொழி வாழ்த்தாயிற்று' என உரைத்துள்ளார். சதுரகராதியில் இயன் மொழி வாழ்த்து என்பதனை, இக்குடிப் பிறந்தோர்க்கெல்லாம் மிக்குண மியல் பென்று மவற்றை நீயுமியல்பாக லீயென்று முயர்ந்தோ ரவனை வாழ்த்துவதாகக் கூறுவது என்று மேற்காட்டிய பேராசியரின் உரைவிளக்கத்தையே வீரமாமுனிவரும் அதன் வரைவிலக்கணமாகத் தந்துள்ளார். ஆயின், 'அங்கு அன்னோர் போல' என்றிருக்க, வீரமாமுனிவர் கூற்றில் 'முன்னோர் போல' என்றிருப்பது எழுத்து மாற்றத்தாலேற்பட்ட தவறாயிருக்கலாம். அத்தவற்றையே பின் வந்த அகராதிகளும் பிரதிபண்ணிப் பரப்புவதைப் பார்த்துத்தான் பிரமிக்க வேண்டியிருக்கிறது. இதற்கான பாவும் அளவும் அறியுமாறில்லை. எனினும் இதற்கெடுத்துக் காட்டாக பேராசிரியர் காட்டியுள்ள பாடல்களனைத்தும் ஆசிரியப் பாக்களாகவேயிருத்தல் நோக்கற்பாலது.

கைக்கிளை என்பது தொல்காப்பியனார் கூறியுள்ள ஏழு அகத்திணைகளுள் ஒன்று என்பதனை முன்னர் கண்டோம். (பக்கம்.1). அதனைப் பலவகையாக தொல்காப்பியம் வகுத்துக் கூறும். அகத்திணையிலுள்ள இருபாற்குங் கூறிய கைக்கிளையும், 'காமஞ்சாலா இளமையோள் வயிற்' (பொருள்50) கைக்கிளையும், 'முன்னைய நான்கும்' (பொருள்52) என்ற கைக்கிளையும், 'காமப் பகுதி' (பொருள்83) என்ற கைக்கிளையும், களவியலுள் 'முன்னைய மூன்றும்' (பொருள் 105) என்ற கைக்கிளையும்,

'கைக்கிளை வகையோ டுளப்பட்ட (பொருள் 90) என்ற கைக்கிளையுமென நிகழ்வதை, ஆண்பாற் கைக்கிளை பெண்பாற் கைக்கிளையென இருபெரும் பிரிவாகக் கூறலாம். ஆண்பாற் கைக்கிளையைத் தொல்காப்பியனார்

'காமஞ் சாலா விளமை யோள் வயி
னேமஞ் சாலா விடும்பை யெய்தி
நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற்
றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே'

என்று விளக்கினார். நச்சினார்க்கினியர், 'கைக்கிளையென்பது ஒரு மருங்கு பற்றிய கேண்மை. இஃது ஏழாவதன் தொகை. எனவே, ஒருதலைக் காமமாயிற்று' என்பர். இதனைப் பிரபந்த வகையாகக் கூறவந்த பாட்டியல் நூல்களுள் வெண்பாப் பாட்டியல்

'ஒருதலைக் காம முரைப்பவை யையைந்தாய்
வருவிருத்தங் கைக்கிளையா மன்'

என்றிசைத்துக் கைக்கிளை இருபத்தைந்து விருத்தப் பாவாகுமென்று தெரிவிக்கும். அதற்கு முன்னெழுந்த பன்னிரு பாட்டியல்,

'இயங்க வருவது மயங்கிய ஒருதலை
இயைந்த நெறியது கைக்கிளை மாலை'

என, 'ஆடவரும் மகளிரும் வருந்தும் படி வருவதாகிய அறிவு மயங்குதற்குக் காரணமான ஒருதலைக்காமமாகிய பொருள், தன் கண்ணமைந்த முறையினை உடையது கைக்கிளை மாலை யாகும்' என்ற பொருளில் கூறிக் கைக்கிளை, கைக்கிளை மாலையாகிய இரண்டும் ஒருவகைப் பிரபந்தத்தையே குறிக்குமென்பதைத் தெளிவுபடுத்திற்று.

நவநீதப் பாட்டியல்,

'நண்பா லொருதலைக் காம நவின்ற விருத்தம் வந்தாற்
பெண்பால் வரினவை கைக்கிளையாமென்று பேசுவரே'

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1963 என்றும் சிதம்பரப் பாட்டியல்,

'வருங்காம மொருதலைய கைக்கிளையதாகும்'
என்றுங் கூறும். இலக்கணவிளக்கப் பாட்டியல்,

'ஒருதலைக் காம மோரைந்து விருத்தங்
கருத வுரைத்தல் கைக்கிளையாகும்'

என்று கைக்கிளை ஐந்து விருத்தத்தால் வருமென்றோதும். நவநீதப் பாட்டியலும் அதனையே மூலப் பிரதியில் 'விருத்தம் வந்தால்' என்பதற்குப் பதிலாக 'விருத்தம் ஐந்தால்' என்று கூறியிருத்தல் கூடும். விருத்தம் வந்தால் என்றிருப்பது குறித்த பாடல் செய்யப்பட்டுள்ள கட்டளைக் கலித்துறைச் சீருக்கமையாததாலும், 'வந்தால்', 'வரின்' என ஒரு பொருட் சொல் இருமுறை ஒரே செய்யுளில் வருதல் இயையின்மையாலும், அது சாலும்.

பிரபந்த தீபிகை

'ஐவிருத்தம் வெள்ளை நாலெனிற் கைக்கிளைக்
கறையொரு தலைக்காமமே'

என்று, அது ஐந்து விருத்தத்தாலும், நாலு வெண்பாவாலும் வருமெனும். வீரமாமுனிவரோ தன் சதுரகராதியில், அது ஐந்து விருத்தத்தாலன்றி முப்பத்திரண்டு வெண்பாவாலமையுமென்றோ தினார். இக் கருத்தைப் பெறுவதற்கு மேற்காட்டிய பிரபந்த தீபிகைச் செய்யுளடியை 'ஐவிருத்தம் வெள்ளை நாலெனில்' என்று கொண்டு பொருள் கண்டாலேயன்றி யாகாது. வீரமாமுனிவர் கொண்ட இக் கருத்திற்கு வேறெங்கு மாதாரமில்லை. அவர் செய்த இத் தவற்றையும் பின் வந்த அகராதிகள் ஆய்வினைப் பிரதி செய்து வந்துள்ளன. பாட்டியல் நூல்கள் இவ்வாறு வேறுபட்ட கருத்துக்களை தெரிவித்துக் கைக்கிளை ஐந்து விருத்தத்தால் வரும் என்றும், ஐந்து விருத்தத்தாலும் நாலு வெண்பாவாலு மமையுமென்றுங் கூறத் தொல்காப்பியனார்,

'கைக்கிளை தானே வெண்பாவாகி
ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே'

என்று அது மருட் பாவால் நடக்குமென்றார். பன்னிரு பாட்டியல் நூற்பாவாய்

'புறநிலை வாயுறை செவியறி வுறூஉ வெனத்
திறமையின் மருட்பாச் செய்யுளின் வருமே'

என்றதனுரையில், மருட்பா இம்மூன்று பொருளும் கைக்கிளையும் பற்றியன்றி வராது என விளக்கினார். எனவே, தொல்காப்பியனார் காலத்தில் மருட்பாவினால் செய்யப்பட்ட கைக்கிளை இலக்கியம், பாட்டியலார் காலத்தில் விருத்தத்தாலோ அன்றி விருத்தமும் வெண்பாவுங் கலந்த செய்யுளாலோ செய்யப்பட்டதெனத் தெரிகிறது.

'கலவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்'

என்ற நூற்பா உரையிற் பேராசிரியர், ''ஈண்டோதிய கலிவெண்பாட்டு மொழிந்த கைக்கிளைப் பொருள் மேல் வாராவோவெனின், வருதுமென்பது, நாடக வழக்கினு முலகியல் வழக்கினும் (பொருள்53) என்புழிக் கொண்டோம்'' என்றோதியதனாற் சிறுபான்மை கலிவெண்பாட்டாலும் கைக்கிளைச் செய்யுள் பேராசிரியர் காலத் தியன்றதெனத் தெரிகிறது.

விருத்த விலக்கணம் என்ற பிரபந்த வகையைப் பன்னிரு பாட்டியல், 'குதிரையும், வில்லும், யானையும், வாளும், குடையும், வேலும், செங்கோலும், நாடும், ஊரும் ஆகிய ஒன்பது உறுப்புக்களுள் ஒவ்வொன்றையும் பப்பத்து ஆசிரிய விருத்தங்களாற் பாடுதல் விருத்த விகற்ப மாகும்' என்ற பொருளில்,

'பரிசிலை யானை வாள்குடை வேல்செங்
கோலொடு நாடோர் உறுப்பின் அகவல்
விருத்தம் பத்தென வேண்டினர் புலவர்'

என்றுரைக்கும் வெண்பாப் பாட்டியலும் அதே கருத்தில்,

'நிலையார் குடை செங்கோ லூர்நாடு நீள்வேல்
கொலையார் களிறு குதிரை-சிலைவாள்
இவற்றின்மேன் மன்விருத்த மீரைந்தாய் வந்தால்
அவற்றின் பேர் நாட்ட லறிவு'

என்று கூறும். நவநீதப் பாட்டியலும் அக்கருத்தினைத் தழுவி,

'ஆனை குதிரை யெழில்வேல்வில் வாள்குடை கோலிவற்றின்
ஈனமி னாடு நகரத் திறமென்பர் மேவியல்பால்
ஆன திறந்தா சிரிய விருத்திமீ ரைந்துவந்தால்
ஊனமில் வெள்ளைபத் தூர்வெண்பா வாக உரைப்பர்களே'

என ஊர் வெண்விலக்கணத்தையும் சேர்த்துரைக்கும். இங்கு 'ஊர்' என்ற அங்கத்துக்குப் பதிலாக நகர் என்பதனைச் சேர்த்தமை, ஊர் வெண்பாவெனப் பிறிதொன்று கூறுவேண்டியிருந்த மயாற் போலும். சிதம்பரப் பாட்டியலும்,

'எழிற் குடைசெங் கோனாடூர் வில்வாள் வேன்மா
அந்திதனித் தனியகவல் விருத்தம் பத்தா
லறைவிருத்த விலக்கணமாம்'

என்று மேலோர் கருத்தைத் தழுவிக் கூறும். இலக்கண விளக்கப் பாட்டியல்,

'வில்வாள் வேல்செங் கொன்மத மாபரி
நாடூர் கொடையை நயந்த பப்பத்து
விருத்த மொன்பதும் விளங்குமப் பெயரான்'

என்று கூறும். முன்னோர் மொழிந்த ஒன்பது அங்கங்களுள் இங்கு குடைக்குப் பதிலாக 'கொடை' கூறப்பட்டிருக்கிறது. இப்பிரபந்தத்திலே தசாங்கத்திற் கூறப்பட்ட பரி, களிறு, நாடு, ஊர்

ஆகியனவும், ஏனைய வில், வாள், வேல், கோல், குடை ஆகியனவும் இடம் பெறுகின்றன. ஆயினும் இலக்கண விளக்கப் பாட்டியல் ஏனையோர் கூறும் குடைக்குப் பதிலாக கொடையைக் கூறும். இங்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஒன்பது அங்கங்களுள் எட்டுப் பொருட் பெயர்ச் சொற்களுடன் ஒரு தொழிற் பெயர்ச் சொல் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பொருத்தமின்மை தெரிகிறது. இலக்கணவிளக்கப் பாட்டியலிற் குடையையே கொடையெனத் தவறாகப் பதிக்கப்பட்டிருத்தலுங் கூடும். இதற்கான பிரபந்தத் தீபிகைச் செய்யுள் கிடைத்திலது. இலக்கண விளக்கப் பாட்டியலுரையும் பிரபந்த தீபிகையும் ஒன்றையொன்று தழுவினவாகக் காணப்படுவனவால், அவற்றுளொன்றையோ இரண்டையுமோ தழுவியெழுதிய வீரமாமுனிவரும் 'கொடை' யென்று ஆய்வின்றிக் குறித்துள்ளாரென்றே கொள்ள வேண்டும். இதனையே பின் வந்த அகராதிகளும் பிரதி செய்து இப் பிரபந்தத்துக்கு தவறான வரைவிலக்கணத்தைச் செப்பி நிற்கும். பிரபந்த வரைவிலக்கணத்தில் ஏற்பட்ட இத் தவறுகள் திருத்தப்படல் வேண்டும்.

11

# தொல்காப்பிய நூற்பா முரண்பாடும் உரையாசிரியர்கள் இடர்ப்பாடும்

தொல்காப்பியனார் தன் எழுத்ததிகாரத்தில், மொழிக்கு முதலாமெழுத்து எவையெனவும், மொழிக்கு ஈறாமெழுத்து எவையெனவும் வரையறுத்துக் கூறுமிடத்து

'உ,ஊ கார நவவொடு நவிலா[1] என்று நூற்பா
செய்து, நு, நூ, வு, வூ ஆகிய எழுத்துக்கள்
மொழிக்கு ஈறாக வராவெனத்'

தெரிவித்துள்ளார். அந்நூற்பாவுக்கு இளம்பூரணர் செய்த உரை, 'உ, ஊ காரங்கள் தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் பயில்வதன்றி நகர வகரங்களோடு பயிலா என்றும், 'நவிலா என்றதனாற் சிறுபான்மை நொவ்வும், கவ்வும், என உகரம் வகரத்தோடு ஈறாதல் கொள்க' என்றும் காணப்படுகிறது. அதற்கு நச்சினார்க்கினியர் உரை, 'உகர, ஊகாரங்கள் தாமே நின்றும் பிற மெய்களோடு நின்றும் பயில்வதன்றி, நகரவொற்றோடும், வகரவொற்றோடும் பயிலா என்றவாறு' இது 'சில உயிர் சில உடலோடேறி முடியாதென விலக்கும்' பகுதியிலமைந்த நூற்பாவென அவரே கூறியிருக்கிறார்.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர்களுக்கும் ஏனையோருக்கும் இது ஒப்ப முடிந்த கருத்தென்றே கொள்ளப்பட்டு வருகிறது. நச்சினார்க்கினியர் தன்னுரையில், 'எனவே ஏனையுயிர்கள் நகர வகரங்களோடு வருமாயின' எனக் கூறி அவற்றிற்குச் சான்றாகக் காட்டியுள்ள உதாரணங்களின் இறுதியில்,

'இவ்விதியால் இனி நவிலா என்றதனானே
வகரவுகரம் கதவு, துரவு, குவவு, புணர்வு,
நுகர்வு, நொவ்வு, கவ்வு எனப் பயின்று
வருதலுங் கொள்க'

என உரையிற் கோடல் என்ற உத்தியைக் கையாண்டு, வகரவுகர ஈற்றுச் சொற்கள் சிலவற்றை மேலதிகமாகக்காட்டி, அவற்றை இவ்விதிக்குப் புறநடையாக ஏற்றுக்கொள்ளலாமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இவற்றோடு இரவு, கரவு, கனவு, நனவு, நினைவு, தினவு, நெசவு, புறவு, உறவு, நிறைவு, சுறவு, நறவு, தரவு, வரவு, செலவு, பிரிவு, மதர்வு, கவவு என்பன போன்ற சொற்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

இத்தனை சொற்கள் தொல்காப்பியனார் கால வழக்கில் இருந்தால், அவர் அவற்றைப் புறக்கணித்து வகரவுகர சொல்லினிறுதியாகாது என்று நூற்பா செய்திருக்க முடியாது. எனவே மேற்காட்டப்பட்டன போன்ற வகரவுகர ஈற்றுச் சொற்கள் தொல்காப்பியனார் காலத்திருக்கவில்லை யென்று கொள்வதே பொருத்தம் போலத் தெரிகிறது. பழந்தமிழ் நூல்களில் அத்தகைய சொற்கள் சில பயின்று வருகின்றனவேயென நாட்டினால், தொல்காப்பியர் காலம் அவற்றிற்கு முந்தியதெனச் சமாதானங் கூறுதல் கூடும். பிற்காலத்திலெழுந்த சொல்வழக்குகள் தொல்காப்பிய நூற்பாவுடன் ஒத்து நடவாமை தொல்காப்பியனார் செய்த தவறல்ல வென்று சொல்லிவிடலாம். ஆனால், அவர் செய்த சொல்லதிகாரத்தில்,

1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நாற்பா, 74, (கணேசையர் பதிப்பு)

'செலவினும் வரவினும் தரவினுங் கொடையினு
நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
'மம்மு விடத்து முரிய வென்ப'[2]

என்ற நூற்பாவில் வரும் செலவு, வரவு, தரவு, என்ற சொற்கள் வகரவுகர ஈற்றையுடையன வாயிருத்தல் நோக்கற் பாலன. இந்நூற்பாவுக்கு இளம்பூரணர் செய்த உரை, 'சொல்லும், வரும், தரும், கொடுக்கும் என நிலைபெற்றுப் புலப்பட்டு நின்ற இந்நான்கு சொல்லும் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்றிடத்திற்முரிய என்றவாறு' என்றிருக்க, சேனாவரையர் செய்த உரை, 'செலவு முதலாகிய நான்கு தொழிற்கண்ணும் நிலைபெறப் புலப்படாநின்ற அந்நான்கு சொல்லும் தன்மை, முன்னிலை, படர்க்கை யெனும் அம் மூவிடத்துக்குமுரியவாய் வரும் என்றமைகிறது. 'செலவு முதலாகிய நான்கு தொழில்' என்பது செலவு, வரவு, தரவு, கொடை என்ற சொற்களைக் குறித்து நிற்கும் என்பதைச் சேனாவரையர், 'செலவு முதலாகிய' என்று கூறுமாற்றால் ஏற்றுள்ளாரெனத் தெரிகிறது. எனவே, 'உ ஊகார நவவொடு நவிலா' என்று எழுத்ததிகாரத்திற் கூறிய தொல்காப்பியனாரோ, தன் சொல்லதிகாரத்தில் வகரவுகர ஈற்றையுடைய செலவு, வரவு, தரவு என்ற மூன்று சொற்களை உபயோகித்துள்ளாரென்பது தெளிவாகிறது. இது முன்பின் முரணாக அமைந்திருக்கிறது.

தொல்காப்பியனார் தவறிழைத்திருக்க மாட்டாரெனக்கொள்வதானால், வகரவுகர ஈற்றையு டையனவாகக் கருதப்படும் செலவு, வரவு, தரவு என்ற மூன்று சொற்களும், செவ், வரவ், தரவ் எனவகர மெய்யீற்றுச் சொற்களாகக் கொள்ளல் வேண்டும். அப்பொழுதுதான் அச்சொற்களுடன் இன் என்ற உருபு சேர, செலவின், வரவின், தரவின் என்றாயினவெனக் காட்டிடலாம். அவ்வாறு காட்டினால், அது தொல்காப்பியனார் செய்த

'வகரக் கிளவி நான்மொழி மீற்றது'[3]

எனும் நூற்பாவுடன் மாறுபடுவதாகத் தோன்றும். 'வகரக் கிளவி நான்மொழி மீற்றது' என்ற நூற்பாவுக்கு உரைகண்ட இளம்பூரணர், 'தனிமெய்களுள் மொழிக்கு ஈறாவன கூறுமிடத்து, வகரமாகிய எழுத்து நான்கு மொழி ஈற்றதாம்' என்று கூறி அவ், இவ், உவ், தெவ் என்பவற்றை உதாரணமாகக் காட்டியுள்ளார். நச்சினார்க்கினியர், 'புள்ளிகளுள் ஈறாவன இவை' யெனக் கூறுமிடத்து, வகரமாகிய எழுத்து நான்கு மொழியின் ஈற்றதாம் என்றியன்ப, அவற்றிற்கு உதாரணமாக, அவ்,இவ்,உவ், தெவ் என்ற நான்கினையும் காட்டியுள்ளார்.

எனவே, வகரக் கிளவி நான்கு என்று வரையறுத்த தொல்காப்பியனார், இந்நான்கினையும் விட மேலதிக வகர மெய்யீற்றுச் சொற்களைக் கையாண்டிருக்க முடியாது.

அவ்வாறு கையாண்டிருந்தால் உரையாசிரியர்கள் காட்டிய உதாரணங்கள் சரியானவை யெனக் கொள்ள முடியாமலிருக்கும்.

வகர மெய்யீற்றுச் சொற்களுக்கு உரையாசிரியர்கள் காட்டிய உதாரணங்களாய அவ், இவ், உவ், தெவ் என்பவற்றை ஆராய்ந்து பார்க்குமிடத்துத் 'தெவ்' ஒன்றே சொல் என்ற வகையிற் சேரக்கூடியதாயுள்ளதெனத் தெரிகிறது. ஏனைய அவ்,இவ்,உவ், என்பன சொற்களெனக் கொள்ள

2. தொல்காப்பியர் சொல்லதிகார நூற்பா சேனாவரையர் பதிப்பு
3. தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பா 81 கணேசையர் பதிப்பு

முடியாதனவாயிருக்கின்றன. அ,இ, ஊ என்ற சுட்டெழுத்துக்கள் உயிர் முதலாகுஞ் சொற்களுடனும், வகரமெய் முதலாஞ் சொற்களுடனும் புணரும் போது முறையே உடம்படு மெய்யாகவும் இரட்டத்தம் தோன்றுவனவே அச்சுட்டெழுத்துக்களின் பின்னுள்ள வகரமெய்யாகும். எனவே, முன்னைய மூன்று உதாரணங்களும் சரியானவையெனக் கொள்ளமுடியாதிருக்கிறது. அதனால் வகர மெய்யீற்றுச் சொற்களுள் 'தெவ்' என்ற ஒன்றையே உரையாசிரியர்கள் காட்டியுள்ளனர் எனக் கொள்ள வேண்டும். ஏனைய மூன்றும் தொல்காப்பியனார் சொல்லதிகார நூற்பாவில் உபயோகித்துள்ள செலவ், வரவ், தரவ் என்ற சொற்களாகக் கருத இடமேற்படுகிறது. ஏனைய வகரவுகர ஈற்றுச் சொற்கள் பிற்காலத்தனவென்று கூறுவர். அவற்றின் உண்மைக்குச் சமாதானங் காண முயன்றாலும், தொல்காப்பியனார் உபயோகித்த அம்மூன்று சொற்களும் வேறு வழியிற் சமாதானஞ் சொல்லிக் கொள்ள முடியாதிருக்கிறன்றது. செலவு, வரவு, தரவு என்ற சொற்கள் தொல்காப்பியனார் காலத்திற் செலவ், வரவ்,தரவ் என்றேயிருந்தன என்ற கருத்தை ஏற்கமுடியாதவிடத்து தொல்காப்பியனார் 'உஊகார நவவொடு நவிலா' என்றும்,

'செலவினும் வரவினும் தரவினுங் கொடையினு
நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யெனும்
மம்மூ விடத்து முரிய வென்ப'

என்றும் ஒன்றற்கொன்று முரண்பட நூற்பா செய்தாரென்றே கொள்ள வேண்டியிருக்கிறது.

செலவு, வரவு, தரவு என்பன மூலச்சொற்களல்ல என்றும், மூலச்சொற்கள் பற்றியே தொல் காப்பியனார் கூறியிருத்தல் கூடும் என்றும், செலவு, வரவு, தரவு ஆகியவற்றின் மூலச் சொற்கள் செல்,வா,தா என்பனவேயென்றும், அச்சொற்கள் வகரவுகர ஈற்றையுடையனவல்ல என்றுங் காட்டித் தொல்காப்பியனார் முரண்படக் கூறவில்லையென நாட்ட முயன்றார். தொல்காப்பியனார் மொழிக்கு முதலாமெழுத்து எவையெனவும் ஈற்றெழுத்து எவையெனவுமே இப்பகுதியிற் காட்ட முனைந்தாரேயன்றி, மூலச் சொற்களுக்கு மட்டுமே இது பொருந்துமெனக் கூறாமையானும், உரையாசிரியர்கள் உதாரணங் காட்டுமிடத்து மூலச் சொற்களோடு மட்டும் நிறுத்தாது, 'புணர்வு' நுகர்வு போன்ற சொற்களையும் காட்டி, அவற்றையுங் கொள்க என்று கூறியிருத்தலானும், அது உரையாசிரியர்களுக்கோ அன்றித் தொல்லாசிரியருக்கோ கருத்தென்றெனக் காட்டலாம்.

வகரமெய்யீற்றுச் சொற்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் வேறெவையும் பயின்று வராவிடத்துச் செலவ், வரவ், தரவ், தெவ் என்ற நான்குமே வகரமெய்யீற்றுச் சொற்களாகுமென முடிவுகட்டி விடலாம். ஆனால், வேறு வகரமெய்யீற்றுச் சொற்களும் பழந்தமிழ் இலக்கியங்களிற் பயின்று வரக் காண்பதால், செலவு, வரவு, தரவு என்பன தொல்லாசிரியர் காலத்திற் செலவ், வரவ், தரவ் என்றே நின்றன என்று கொண்டால், வகரமெய்யீற்றுச் சொற்கள் நாலுக்கு மேற்பட்டுச் செல்வனவாயிருக்கும். பதிற்றுப்பத்திற் பரணர் பாடிய ஐந்தாம் பத்திலே வரும், 'சுடர் வீ வேங்கை' என்னும் முதற் பாட்டில்,

'வெவ்வர் ஓச்சம் பெருகத் தெவ்வர்
மிளகெறி யுலக்கையி னிருந்தலை யிடித்து'

என்று வரக்காணலாம். இங்கு 'தெவ்வர்','வெவ்வர்' என்ற சொற்கள் இடம் பெறுகின்றன. வெவ் வர் ஓச்சம் என்பதற்குப் பழையவுரையில் வெம்மையின் மிகுதி என்றும், புதிய உரையில்[4]

4. **ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பதிற்றுப்பத்து உரை**

நட்பரசருடைய ஆக்கம் என்றுங் காணப்படுகின்றன. இதில் வெவ்வர் என்பது தெவ்வர் என்பதன் எதிர்ச்சொல்லாய் விளங்குகிறது. தெவ்வின் விரிவே தெவ்வர் எனின், வெவ்வின் விரிவே வெவ்வர் என்றாதல் வேண்டும். எனவே தெவ் என்பது போல வெவ் என்பதும் ஒரு சொல்லாக பரணர் காலத்தில் விளங்கியிருக்கிறதென தெரிகிறது. இதிலிருந்து தெவ், வெவ் என்ற இரண்டும் வகரமெய்யீற்றுச் சொற்களானால் செலவு, வரவு, தரவு எனும் மூன்றையும் வகரமெய்யீற்றுச் சொற்களாகக் கொள்ள முடியாதென்பது புலனாகும். 'வகரக் கிளவி நான்மொழி யீற்றது' என்பதனோடு மாறுபடுமாகையால், அவற்றுள் ஒன்றையோ இரண்டையோ அவ்வாறு கொண்டு மற்றையதைக் கொள்ளாது விட முடியாது. எனவே அம்மூன்றையும் வகரமெய்யீற்றுச் சொற்களாகக் கொள்ளாமல் விடவேண்டியிருக்கிறது. அதனால் தொல்காப்பியனார் குறித்த நூற்பாவில் உபயோகித்த சொற்கள் செலவு, வரவு, தரவு என்றே நிற்பனவாகக் கொள்ள வேண்டும். அவ்வாறானால் அந்நூற்பா 'உஊகார நவவொடு நவிலா' என்பதனோடு மாறுபடுகின்றதென்பது வலுவாகிறது. வகரமெய்யீற்றுச் சொற்களுள் 'வெவ்' என்பன இரண்டானால், ஏனைய இரண்டுமெவையெனக் காணவேண்டியிருக்கிறது. அவ்வாறு கண்டு பழந்தமிழிலக்கிய வழக்கில் நாலு வகரமெய்யீற்றுச் சொற்கள் இருப்பனவாகக் காட்டினால், செலவு,வரவு,தரவு என்பன வகரமெய்யீற்றுச் சொற்களாகக் குறித்த நூற்பாவிலே உபயோகிக்கப்படவில்லையென்பது முடிவாக நிரூபிக்கப்படும்.

குறுந்தொகையில் 356 ஆம் செய்யுளிலே 'வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கய' எனச் சொல்லப்படுகிறது. டாக்டர் உ.வே. சாமிநாதையர் பதிப்பில் அதன் கருத்து, 'மிக்க வெப்பத்தையுடைய கலங்கல் நீரைத் தவ்வென்னும் ஓசைபடக் குடிக்க' என்று காணப்படுகிறது. இங்கு 'தவ்' என்பது ஒலிக்குறிப்புச் சொல்லாகக் கையாளப்பட்டிருகிறது. பத்துப் பாட்டுள் நெடுநல் வாடையில் 'மாலைவெண் குடை தவ்வென் றசைஇ' என்று வருவதும் அச்சொல்லின் அக்கால ஆட்சியை எடுத்துக்காட்டும். எனவே, 'தவ்' என்பதும் பழந்தமிழ் இலக்கிய வழக்கிலேயுள்ள வகரமெய்யீற்றுச் சொல்லாகக் கொள்ளலாம்.

நாலாவது வகரமெய்யீற்றுச் சொல்லைப் பரணர் வாயிலாக பதிற்றுப் பத்திலே ஐந்தாம் பத்தின் இறுதிப் பாடலாகிய 'வெருவரு புனற்றா'ரிற் காணலாம் போலத் தெரிகிறது. ஆங்கு, 'கொள்களிற் றுரவுத்திரை பிறழ வவ்வில்பிசிர'[5] என்று ஒரு அடி காணப்படுகிறது. அதில் வரும் 'வவ்வில்' என்பதற்குப் பழைய உரையாசிரியர் 'அழகிய விற்கனெ' உரை கூறியுள்ளார். 'அவ்வில்' என்ற பதமே 'வவ்வில்' என புணர்ச்சி காரணமாக உருப்பெற்றிருக்கலாமென ஐயங் கொள்வதற்கு அங்கு இடமில்லை. ஏனெனின் அதற்கு முந்திய அடிகளிலே வில்லைப் பற்றிய குறிப்பெதுவும் வரவில்லை. அப்படி வந்திருந்தாற்றானே 'அவ்வில்' எனச் சுட்டி வருவதற்கு இடமேற்படும். அதனால், 'வவ்' என்பது பழந்தமிழ் இலக்கிய வழக்கிலேயுள்ள ஒரு தனிச் சொல்லென்று கொள்ளலாம் போலும். வேறு பதிப்பில்[6] அது வவ்வில் எனக் காணப்படுகிறது.

இதுவரை நாம் ஆராய்ந்ததிலிருந்து பழந்தமிழ் வழக்கிலே வகர மெய்யீற்றுச் சொற்கள் நான்குள என்றும். அவை தெவ், வெவ், தவ், வவ் என்ற நான்குமே என்றுங் கண்டோம். அதனால் 'வகரக் கிளவி நான்மொழி யீற்றது' என்ற நூற்பாவுக்கு உரையாசிரியர்கள் காட்டிய அவ்,இவ்,உவ் என்ற உதாரணங்கள் பொருந்தாதன என்பது மேலும் நிரூபிக்கப்படுகிறது. அவ்வாறு நிரூபிக்கப்படவே செலவு, வரவு,தரவு,என்பன எக்காரணங்கொண்டும் வகரமெய்யீற்றுச் சொற்களாகக் கொள்ள முடியாதன என்பது புலனாகும். எனவே தொல்காப்பியனார் தன் சொல்லதிகாரத்தில்,

---

5. பதிற்றுப்பத்து உ.வே. சாமிநாதையர் பதிப்பு
6. ஔவை, சு. துரைசாமிப்பிள்ளையின் உரையுடன் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகப் பதிப்பு 195

'செலவினும் வரவினும் தரவினும் கொடையினு
நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்து முரிய வென்ப'

என்று நூற்பா செய்தமை, அவர்தன் எழுத்ததிகாரத்தில் 'உஊகார நவவொடு நவிலா' என்றியம்பிய நூற்பாவுடன் முரண்படக் கூறியவாறாகிறதென்பது வெளிப்படையாகிறது.

தொல்காப்பியனார் தவறிழைத்திருக்க மாட்டார் என்று கொள்ள விரும்பினால், இவ்விரு நூற்பாக்களுள் ஒன்றில் ஏதோ தவறேற்பட்டிருக்க வேண்டுமென கருதவேண்டியிருக்கிறது. 'செலவினும் வரவினும்' என்ற நூற்பாவில் வரும் செலவு, வரவு ஆகிய சொற்களை வேறுவிதமாகக் கொள்ள முடியாதென கண்டோம். அன்றியும் தொல்காப்பிய செய்யுளில் 'புணர்வு', 'பிரிவு' என்ற சொற்களும்[7], பொருளதிகார மரபியலில் 'மகவு' என்ற சொல்லும்[8] நூற்பாக்களில் கையாளப்பட்டிருக்கின்றன. எனவே, 'உஊகார என்ற நூற்பாவிலேதான் ஏதோ தவறேற்பட்டிருக்க வேண்டுமெனக் கருத வேண்டியிருக்கிறது. வகரவுகரத்திலே சொல் முடிவுறாதென இந்நூற்பா அமைந்திருக்கத் தொல்காப்பியனாரும், உரையாசிரியர்களும் வகரவுகரத்தில் முடிவுறும் சொற்களைக் கையாண்டிருத்தலால், நகரவுகர ஊகாரங்களைப் பற்றியேயன்றி வகரவுகர ஊகாரங்களைப் பற்றித் தொல்காப்பியனார் கூறாதொழிந்திருத்தல் கூடும். அவ்வாறு அவர் கூறாது விட்டிருப்பின், உஊ ஆகிய எழுத்துக்கள் 'நவவொடு நவிலா' என்று சொல்லியிருக்கமாட்டாரே என்ற ஐயமெழலாம். இவ்விடத்திலேதான் தவறேற்பட்டிருக்கிறதென எண்ணத் தோன்றுகிறது. உண்மையிலே தொல்காப்பியனார் அந்நூற்பாவினை

'உஊகார நவவொடு நவிலா' என்றே செய்திருப்பாரென்று கருதவேண்டியிருக்கிறது. அப்பொழுதுதான் இந்த இடர்ப்பாடுகளிலிருந்து தொல்காப்பியனாரை விடுவிக்கலாம். 'நவ்வொடு' என்பதனைப் பிரதி செய்தவர்கள் தவறாக 'நவவொடு' என எழுதியிருத்தல் கூடும். ஆனால், உரையாசிரியர்கள் அனைவரும் 'உஊகார நவவொடு நவிலா' என்றே அந்நூற்பாவைக் கொண்டு உரைசெய்திருப்பதால், அவர்கள் அதிலே தவறேதுங் காணவில்லையென்றும், அதுவே சரியான பாடமென்றுங் கருதியிருப்பார்களென்றும் தெரிகிறது. எனினும், வகரவுகர வீற்றுச் சொற்கள் வழக்கிலிருந்தமை அவர்களைச் சற்று மலைக்க வைத்திருக்கிறதென்பது, அவர்கள் அதற்குக் கூறமுனைந்த சமாதானத்திலிருந்து புலனாகிறது. எனினும், குறித்த நூற்பாவில் ஏதாவது தவறிருக்கலாமென அவர்கள் எண்ணத் துணியவில்லை. அவ்வாறு தொல்லாசிரியர் மேல் தவற்றையேற்றாது விடுவதற்கு உரையாசிரியர்கள் அந்நூற்பாவை 'உஊகார நவ்வொடு நவிலா' என்று பாடங்கொண்டு வகரவுகர ஈறுபற்றிய பேச்சுக்கே இடமில்லாமற் செய்தாலன்றி, இது சம்பந்தமாயெழுந்த இடர்ப்பாடுகளுக்குத் தீர்வு காண முடியாமலிருக்கும். இவ்வாறு பாடங் கொள்வதால், நகரவுகர ஊகாரங்களிற் சொல் முடிவுறும் என்பதனை மட்டுமே தொல்காப்பியனார் சொல்ல விளைந்தாரென முடியும். அப்பொழுதுதான் குறித்த நூற்பாவுக்கு முரணாக உரையாசிரியர்கள் வகரவுகர விறுதிச் சொற்கள் சிலவற்றைக் காட்டிப் பட்ட இடரையும், தொல்லாசிரியர் மேல் வரத்தக்க பழியையும் போக்கலாம்.

7. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா 520
8. தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல் நூற்பா 556

# குற்றியலிகரமும் குற்றியலுகரமும்

குற்றியலுகரம் 'நெட்டெழுத்தம்பரும் தொடர்மொழியீற்றும் வல்லூர்ந்தே' நிற்குமென்றார் தொல்காப்பியனார். எனவே கு,சு,டு,து,பு,று என்ற எழுத்துக்கள் தனிக் குற்றெழுத்தல்லாத எழுத்தைத் தொடர்ந்து சொல்லின் இறுதியாக வரினே அவை முற்றியலுகரங் கொண்டவையாகக் கருதப்படும். இவ்விலக்கணத்தின்படி கதவு, செலவு, வரவு, மகவு என வரும் வகரவுகர ஈற்றனவும், அது,இது, உது எனத் தனிக் குற்றெழுத்தைத் தொடர்ந்து வரும் தகரவுகரமும் முற்றியலுகரங்களேயாம். இந்த முற்றயலுகரங்களைத் தொடர்ந்து உயிரெழுத்து வரும்போது, அவையும் குற்றியலுகரங்களைப் போலவே உகரங்கெட்டுப் புணர்கின்றன. உதாரணமாக, கதவு+அழகு= கதவழகு, செலவு+இனம்= செலவினம், வரவு+உண்டு = வரவுண்டு, மகவு+ எங்கே = மகவெங்கே, நீரறவு+அறியா = நீரறவறியா (புறநானூறு 1,271) எனவும், அது+அன்+ஐ = அதனை, இது+அன்+ஐ = இதனை, உது+அன்+ஐ = உதனை எனவும் வரும். இதனைத் தொல்காப்பியனார் எடுத்துக் காட்டாது விட, நன்னூலார்

'உயிர் வரின் னுக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றோரோவழி'

என்ற நூற்பாவில், 'முற்றுமற்றோரோ வழி' என்று கூறித், தொல்காப்பியனார் கூறாதொழிந்ததனையும் அடக்கியுள்ளார். முற்றியலுகரம் ஒரேவழிக் குற்றியலுகரம் போலியலும் என்றவற்றால் கதவு,வரவு,செலவு,என்பன போன்ற வகரவுகரவீற்று முற்றுகரச் சொற்களும் உயிர்வர இறுதி உகரங்கெட்டுப் புணருமென அதன் உரையாசிரியர் காட்டியுள்ளார். அதன்படி, அது+அவன் = அதவன், அது+இல்லை = அதில்லை, அது+உண்டு = அதுண்டு, அது+எது = அதெது, அது+ஒரு = அதொரு, இது+அன்று = இதன்று, இது+இது = இதிது, இது+உன் = இதுன், இது+எது = இதெது, இது+ஒன்று = இதொன்று, உது+அரிது = உதரிது, உது+இல்லை = உதில்லை, உது+ஏன் = உதேன், உது+ஒரு = உதொரு என்று புணர்வனவும் இலக்கண அமைதி பெற்றனவென்றே கொள்ள வேண்டும்.

மேலும், நுந்தை என்ற சொல்லிலுள்ள உகரம் மொழிமுதற் குற்றியலுகரமென தொல்காப்பியனார் கூற, நன்னூலார் அதனை ஏற்றுக் கொள்ளாது விட்டனர். இவற்றிலிருந்து குற்றியலுகரங்களை எவ்விடத்தனவெனப் பொதுவாகக் கூறலாமே தவிர அறுதியிட்டுக் கூறிவிட முடியாது போலத் தோன்றுகிறது.

முற்றியலுகரம் உயிர்வர மெய்விட்டோடுவது போல, நிலைமொழியீற்றகரமும், வருமொழியில் அகரம் முதலெழுத்தாய் வருமிடத்து மெய்விட்டோடுவதை சில சந்தர்ப்பங்களில் காண்கிறோம். உதாரணமாகப் புறநானூற்றில்

'வருந்த வேண்டா வாழ்கவன் றாளே' - (101 ஆம் செய்யுள்)
'புரத்தல் வல்லன் வாழ்கவன் றாளே' - (103 ஆம் செய்யுள்)

என்ற அடிகளில் வாழ்க+அவன்+தாள் = வாழ்கவன்றாள் எனப் புணர்ந்து வருதலை காட்டலாம். வாழ்க+அவன் = வாழ்கவன் எனவரும் புணர்ச்சிக்கு தமிழிலக்கணத்தில் விதியில்லை என்பது தெரிந்ததே. இப்புணர்ச்சி ஏற்புடைத்தாயின், மூத்த+அண்ணன் = மூத்தண்ணன், சிதற+அடி = சிதறடி, சின்ன+அத்தான் = சின்னத்தான், எனப்புணர்வனவும் ஏற்றனவாகவே கொள்ள வேண்டும்.அத்து என்ற சாரியை அகரத்திலிறும் சொல்லொடு புணரும்போது அத்தன்

அகரம் கெடும் (அத்தி னகரம் அகரமுனையில்லை) எனத் தொல்காப்பியமும், நன்னூலும் காட்டியுள்ளன. அதற்கு உதாரணமாக, மர+அத்து = மரத்து என உரைகாரர் காட்டியுள்ளார். அத்து என்ற சாரியைக்கு மட்டும் ஏற்புடைய விதியாக அது கூறப்பட்டிருக்கிறதே தவிர பொதுவாக அத்தகைய புணர்ச்சி ஏனைய இடங்களுக்கும் ஏற்குமெனக் குறிக்கப்படவில்லை. 'அத்து' வரும்வழி நிலைமொழியீற்றகரங் கெடும் எனக் கூறியிருந்தால், அதனைப் பொதுவிதியாக ஒருவாற்றாற் கொள்ளல் கூடும். அவ்வாறின்மையின், 'நிலைமொழி யீற்றகரம் வருமொழி அகரத்தின் முன் கெடுதலுமுண்டு' என இதற்கு புதுவிதியொன்று ஆக்க வேண்டும். இல்லையேற் சில உயிர் வரும்வழிக் கெடும் நிலைமொழியீற்றகரம் குற்றியலிகரத் தன்மை கொண்டுள்ளதோ வென ஐயுற நேரும்.

இனி, 'உறங்குகின்றது', 'அள்ளுகின்றது' என்பன போன்ற சொற்களிலுள்ள 'கின்ற' எனும் இடை நிலையிலமைந்துள்ள 'னகர' ஒற்றுக் குறைந்து, அவை, 'உறங்குகிறது', 'அள்ளுகிறது' என வரினும் தவறில்லையெனவே கொள்ளப்படுகிறது. உண்மையில் 'கின்ற' என்ற இடைநிலை முற்றாகக் கெட்டு, 'உறங்குது', 'அள்ளுது' எனவரின் அவை தவறாக முடியா எனக் கொள்ள வேண்டும். ஏனெனில் 'கின்ற' என்பது காலங்காட்டும் இடைநிலையாகவே அங்கு அமைகிறது. மேற்காட்டிய சொற்களிலே விகுதியாக உள்ள தகரவுகரமும் (து) காலங்காட்டுவதாகவேயுள்ளது. ஒரு சொல்லிலே காலங்காட்டும் அம்சங்கள் இரண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அதனால், 'உறங்குது', 'அள்ளுது' என்பன போன்ற பிரயோகங்கள் இலக்கண வழுவானவையெனத் தள்ளிவிட முடியுமா?

'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ ணல்லார்க் கணியும் போல்'

எனவரும் செய்யுளில், மாடத்துக்கு என்பது மாடக்கு என அத்து சாரியை முற்றாக இன்றி வருவது ஏற்புடைத்தாயின், இவையும் ஏற்புடையனவென்றே கொள்ள வேண்டும். அவ்வாறே, 'ஆகின்றது', 'கேட்கின்றது' என்பன 'ஆகிறது', 'கேட்கிறது' எனவாகிப் பின் 'ஆகிது', 'கேட்கிது' என்றாகும். இவற்றிலுள்ள ககரவிகரம் (கி) குற்றியலிகரம் போல ஒலிப்பதைக் கவனிக்கலாம். அவ்வொலி 'கி' என்ற ஒலிக்கும் 'கு' என்ற ஒலிக்கும் இடைப்பட்ட ஓசை கொண்டிருக்கிறது. அதனால், 'ஆகிது', 'கேட்கிது' என்ற சொற்கள், 'ஆகுது', 'கேட்குது' என்று மயங்கி ஒலித்து வருகின்றன. நாகு என்ற சொல்லிலுள்ள குற்றுகரம்,'யகரம் வருவழி இகர ஒலி தருவது போல, 'ஆகிது', 'கேட்கிது', என்பனவற்றில் வரும் ககரவிகரம் (கி), ககரவுகர (கு) ஒலியைத் தருகிறது 'கு' என்பது 'கி' யாக மாறி ஒலிக்குமானால், 'கி' என்பது 'கு' ஆக மாறி ஒலிப்பது வியப்பல்லவே! அதனால், 'ஆகுது', 'கேட்குது' என்பன போன்ற பிரயோகங்கள் இலக்கணவிதிக்கு முரணானவையெனக் கொள்ள முடியா.

முற்றியலிகரம் எதுவெனக் கூறவந்த தொல்காப்பியனார்
'யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக
காவயின் வரூஉ மகரமூர்ந்தே'

முற்றியலிகரம் நிற்குமென்றார். 'உரையசைக்கிளவி' என்பதற்கு உரையசைச் சொல்லாகிய 'மியா' என்று இளம்பூரணர் உரைகண்டார். நன்னூலாரும்,

'அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய'

என்று கூறி, 'மியா' என்பதே உரையசைக்கிளவி எனக் காட்டனார். நச்சினார்க்கியரோ தான்

கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர் முகமாக்குஞ் சொல்லே உரையசைக்கிளவி என்று கூறி, அது 'கேள்' என்ற சொல்லாகுமென உதாரணமுங் காட்டினார். 'செல்' என்ற சொல்லையும், அதற்கு உதாரணமாக அவர் காட்டியது பொருத்தமாயில்லை, அது ஒருவனை எதிர்முகமாக்க உதவுவதால் அதற்குப் பதிலாகப் 'பார்' என்ற சொல்லை உதாரணங் காட்டியிருக்கலாம். அது உரையசைக்கிளவியாந் தன்மை பெற்றுள்ளமையால், கேள் எனும் சொல்லின்மேல் 'யா' எனும் சினை வருமிடத்து, அங்கு மகரம் வருமெனத் தொல்காப்பியனார் கூறியதனால், கேள்+யா = கேள்ம்யா என வருமெனத் துணியலாம். கேள்ம்யா என்பதிலுள்ள லகர ஒற்று ணகர ஒற்றாக மாறிக் கேண்ம்யா எனவும் வரலாம். கேணம்யா அல்லது கேண, ம்யா என ஒலிக்கும் போது, அவற்றி லுள்ள மகர ஒற்றுக் குறுகிய மகரவிகரமாக (வி) ஒலித்துக் கேள்மியா அல்லது கேண்மியா எனத் தொனிப்பதனை அவதானிக்கலாம். அந்த இகரமே குற்றியலிகரமாகும். இவ்விடத்தில் 'மியா' எனும் இடைச்சொல்லோ, அசைச்சொல்லோ இருக்கிறதெனக் கருதுவதற்கிடமில்லை 'போன்ம்' என்ற சொல்லுடன் 'யார்' என்ற சொல்லைப் புணர்த்துமிடத்தும் போன்மியார் என்றே ஒலிக்கும். அதில் 'மியா' என்றொரு பாகத்தைப் புறம்பாகப் பிரித்தெடுக்க முடியாதவாறே கேண்மியா என்பதி லும் 'மியா' வென்றொன்றில்லை. தொல்காப்பியனார் கூறிய யாவென்சினை கேண்ம்யா என்ற சொல்லின் ஒரு பகுதியாகையால் அதனைச் சினையென்றார். இக்காலத்தும் 'வா', 'போ' என்ற சொற்களோடும் 'யா' என்ற சினையைச் சேர்த்து வாயா,போயா எனச் சிலர் பேசக் கேட்கலாம். அங்கு மகர ஒற்று வருவதில்லை.

'மியா' என்றொரு இடைச் சொல்லோ அசைச்சொல்லோ தமிழில் உண்டென்பதற்கு வேறெங் குமே ஆதாரமில்லை. அப்படியொன்றுன்டெனக் கருதுவது, அவ், இவ், உவ் என்பன வகரவீற்றுச் சுட்டுப் பெயர் (சூ 235,250) என நன்னூலார் காட்டும் தவற்றுக்கு நேரானதே. அவை சுட்டுப் பெய ரானால், வருமொழி முதல் உயிரல்லனவோடு புணர்தல் கூடுமா? அவ்+கழுதை, இவ்+மரம், உவ்+குடம் எனப் புணர்தலாகாமையாலும், வகரம் வருவழி வகர ஒற்று மிகுந்தும், உயிரெழுத்து வருவழி உடம்படுமெய்யாக வகர ஒற்றுத் தோன்றியும் அகரச்சுட்டுப் புணர்வது போலப் புணர்வன வேயன்றி, அவை அவ், இவ், உவ் என நின்று பயன்படுவன அல்ல. சுட்டெழுத்துக்களின் மேல் வரும் வகர ஒற்றுக்கள் உடம்படு மெய்யாக வருவனவேயன்றி வேறில்லை. அதனால், அவ், இவ், உவ் என்பன வகரவீற்றுச் சுட்டுப் பெயராதல் எங்ஙனம்?

உற்று நோக்கின் குற்றியலிகரமென்று ஒன்றை விதந்து கூறியிருக்க வேண்டிய அவசியமி ல்லை. ஏனெனில் குற்றியலுகரமே யகரம் வருவழிக் குற்றியலிகரமாகவே ஒலிக்கிறது என்பதைத் தவிர வேறொன்றில்லை. மேலும் அக் குற்றியலுகரம் குற்றியலிகரமாகத் திரிகிறதெனக் காட்டினா லென்ன காட்டாது விட்டாலென்ன ஒன்றுதான். உதாரணமாக, நாகு+யாது = நாகுயாது என்று புணர்ந்து குற்றியலுகரமாக ஒலிக்கும் என்று கூறியிருந்தாலும் வழுவாகாது. குற்றியலிகரம் தோன்றுவது போலிருக்கும் புணர்ச்சி குற்றியலுகரத்தின் மேல் யகரம் வரும் ஒரே வழியன்றிவேறு வகைகளிலுமுளவெனில், அதை விதந்து கூறியதில் நியாயமுண்டெனலாம். அதனை விதந்து கூறிய பின், அக்குற்றியலிகரம் எதுவென்று காட்டுவதற்கு 'கேண்மியா' என்ற அருவழக்குச் சொல்லொன்றைத் தேடிக் காட்டி, கேள்+யா=கேள்யா என்றே புணர வேண்டிய ஒன்றற்கு, மகரஒற்றைச் சேர்த் தொலிக்க வைத்துக் கேள்+ம்+யா=கேள்ம்யா என வருமிடத்து மகரஒற்று மகரவிகரமாக ஒலிக்க, அவ்விடத்து நிற்கும் இகரமே குற்றியலிகரமென வலிந்து நூலாசிரியர் காட்டுவதிலிருந்து, அது ஒரு வல்லுக்கு வாதாகும் முயற்சியெனத் தெரிகிறது. அவ்விதம் செய்யாவிட்டாற் குற்றியலிகரத்துக்குப் பிந்திய குற்றியலுகரத்தை முற்கூறிய பின்னரே அதன்வழி குற்றியலிகரம் எதுவெனக் காட்ட வேண்டியிருக்கும். அதனாற்றான் நூலாசிரியர் அவ்வாறு மாய்ந்திருக்கிறார் என்று கருதவேண்டியிருக்கிறது.

குற்றியலுகரத்தைக்கூட இயல்பான உகரத்திலிருந்து அவ்வாறு வேறுபடுத்திக் கூறியிருக்க வேண்டியது அவசியந்தானா என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழ் எழுத்துக்கள் பல இருவித ஒலியைக் கொண்டிருக்கும் போது, உகரத்தின் ஒலியைமட்டும் இருவகைப்படுத்திக் காட்ட வேண்டியதன் அவசியம், அக்குற்றியலுகர முற்றியலுகரப் புணர்ச்சி வேறுபாட்டை எடுத்துக்காட்டு வதற்காகவே நேர்ந்தது எனச் சமாதானங் கூறலாம். ஆனால் அப்புணர்ச்சி வேறுபாட்டை அவ்வாறு குற்றியலுகரமெனப் பகுத்தோதாது காட்டியிருக்க முடியாதா? அவ்வாறு பகுத்தோதியும் அவ்வேறு பாட்டைப் பூரணமாக வகுத்துக்காட்ட முடியாதா? நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீற்றும் வல்லாறூர்ந்தீவரும் உகரம் உயிர்வரக் கெடும் என்று சொன்னாலும் போதுமானதாயிருக்கும். செய்யுளியலிலும் அதனை அவ்வாறே நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீற்றும் வரும் வல்லொற்றுக்கரமென்றும், முற்றியலுகரத்தை ஏனைய உகரமென்றும் கூறி முடித்திருக்கலாம். அப்படியானால் முற்றியலுகரமெனப் பிரித்தோத வேண்டி நேர்ந்திராது. அப்படிப் பிரித்தோதியும், கதவு,வரவு செலவு,அது, இது, உது என்பன போன்ற முற்றுகரங்களும் குற்றுகரங்கள் போல உயிருடன் புணரும் போது காட்டும் மாற்றத்தை உள்ளடக்கிக் கொள்ள முடியவில்லை. அப்படிப் பிரித்தோதியமையாற்றான் வரிவடிவற்ற குற்றியலுகரம் குற்றியலிகரங்களும் ‘எழுத்தெனப்படுப’ எனத் தொடக்கத்திலேயே சொல்லிவைக்கவேண்டிய நிர்ப்பந்தம் தொல்காப்பியனாருக்கு ஏற்பட்டது. எழுதப்படுவதே எழுத்தாகும். எழுதப்படாத குற்றியலுகரமும் குற்றியலிகரமும் எழுத்தாதல் எங்ஙனம்? அதனாற்றான் குற்றியலிகரக் குற்றியலுகரப் பகுப்புத் தமிழ் இலக்கணத் துக்கு அவசியந்தானா என்று கேட்க வேண்டியிருக்கிறது.

# சார்பெழுத்துக்கள்

தொல்காப்பியத்து முதல் நூற்பாவிலே 'சார்ந்துவரன் மரபின் மூன்று' என்ற தொல்காப்பியனார் கூற்றே 'சார்பெழுத்துக்கள்' என்ற தொடரின் பிரயோகத்திற்கு ஏதுவாயிற்று. 'எழுத்தெனப் படுப அகர'முதல னகர விறுவாய் முப்பதென்ப' என்று அவர் கூறியதிலிருந்து, சார்ந்து வரும் மூன்றையும் அவர் அந்தமுப்பது எழுத்துக்களுடன் சேர்த்தெண்ணத்தக்க மூன்று எழுத்துக்களாக கொள்ள விரும்பவில்லை என்பது தெரிகிறது. ஆனால், அந்த மூன்றும் இல்லாதவிடத்துத்தான் எழுத்துக்கள் முப்பது என்றதிலிருந்து, அந்த மூன்றும் எழுத்தாகக் கொள்ளத்தக்கன என்ற குறிப்பையும் அவர் தருகிறார். இவற்றிலிருந்து சார்ந்துவரும் மூன்றும் முப்பது என்ற எழுத்தது வரிசையிற் சேர்த்தெண் ணப்படத் தக்கனவுமல்ல, அந்த எழுத்துவரிசையினின்று முற்றாக ஒதுக்கிவிடக்கூடியனவுமல்ல என்ற கருத்துப் பெறப்படுகிறது.

இரண்டாவது நூற்பாவிலே குற்றியலிகரம், முற்றியலிகரம் ஆய்தம் ஆகியனவே 'சார்ந்து வரும் மரபின் மூன்று' என்றும், அவை எழுத்தோரன்ன என்றும் தொல்காப்பியனார் கூறியிருப் பதிலிருந்து, அவற்றை அவர் எழுத்துக்கள் என முற்றாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிகிறது. 'எழுத்தோரன்ன' என்றால் எழுத்துக்களைப் போன்றன என்பதுவே கருத்தாகும். எனவே, குற்றிய லிகரக், குற்றியலுகரங்களும் ஆய்தமும், எழுத்துப்போலிகள் என்றே ஆசிரியர் கருதியிருக்கிறார் என்பது புலனாகிறது.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புறம்பான எழுத்துக்கள் அல்ல என்பதும், அவை இயல் பான இகர உகரங்களின் போலி என்பதும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவே. ஆனால், ஆய்தம் அப்படி யானதொன்றன்று. அது ஒரு தனி எழுத்தாகவே இயங்கிவருகிறது. தொல்காப்பிய முதல் நூற்பாவிலே அவ்வெழுத்தை 'முப்பஃதென்ப' என்ற தொடரிலே தொல்காப்பியனார் உபயோகிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்கையில் ஆய்தம் எழுத்தன்று என்றும், அது எழுத்தைப் போன்ற ஒன்று என்றும் எவ்வாறு கொள்ளலாம், என்பது புலனாகவில்லை. பழந்தமிழ்ச் செய்யுட்களுக்கு ஆய்தம் முக்கியமான ஒரு எழுத்தாக காணப்படுவதை பழைய தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். சங்க, சங்கமருவிய கால நூல்களிலே, பஃது,எஃது, அஃகு, கஃசு, அஃது, இஃது, உஃது, அஃகம்,வெஃகு, கஃடு, கஃது, கஃபு, கஃறு அஃகான், மஃகான், வஃகான், ணஃகான், லளஃகான், யஃகான், முஃடீது, அஃகடிய, கஃறீது, அஃறிணை, பஃறொடை, 'வெஃஃகு வார்க்கில்லை வீடு', 'இலஃஃகு முத்தினினம்', 'வில்ஃஃகி வீங்கிருளோட்டும்', 'கஃஃஃறெனுங் கல்லதரத்தம்', 'சுஃஃஃஃறென்னுந் தண்டோட்டுப் பெண்ணை' என்ற பிரயோகங்கள் காணப்படுகின்றன. அவை ஆய்த எழுத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுவதற்குப் போதிய சான்றாக அமைகின்றன. அதனால், ஆய்தம் தனிப்பட்டதொரு எழுத்தாகவே கணிக்கவேண்டியதாயிருக்கிறது. குற்றியலிகர உகரங்களுக்கு இயல்பான இகர உகர எழுத்து வடிவங்களை விட வேறு எழுத்து வடிவங்கள் இல்லையாதலின் அவை தனிப்பட்ட எழுத் துக்கள் எனக் கொள்ள முடியா என்பது விளங்கிக் கொள்ளக் கூடியதே. ஆனால் ஆய்தத்துக்கு தொல்காப்பியனாரே 'முப்பாற் புள்ளி' என்று எழுத்துவடிவங் கூறியிருக்கையில், அது ஒரு எழுத்தன்றெனக் கருதியிருப்பாரென கொள்ளமுடியாதிருக்கிறது. எழுதப்படுதலே எழுத்தா தலால், எழுதப்படும் எழுத்தாகவே கொள்ளப்படல் வேண்டும். தனக்கெனப் புறம்பான எழுத்து வடிவங்களற்ற குற்றியலிகரக் குற்றியலுகரங்கள் எழுத்துக்கள் எனக் கொள்ள முடியாமைக்கு, ஓசை வேறுபாட்டாலன்றி எழுத்து வேறுபாட்டால் அறியத்தர முடியாமையே காரணமாகக் காட்டலாம்.

எழுத்ததிகார இரண்டாம் நூற்பாவிலே, 'குற்றியலிகரம் குற்றியலுகரம்' என்பனவற்றை ஒரு பகுப்பாகவும், ''ஆய்தமென்ற முப்பாற் புள்ளியும்'' என்று ஆய்தத்தை அவற்றினின்று பிரித்தோ தியும் தொல்காப்பியனார் காட்டியுள்ளமை, அவற்றிற்கிடையே ஒரு வேறுபாடு உண்டென்ற உண்

மையை நிலைநாட்டுவதற்காயிருத்தல் கூடும். முன்னைய இரண்டிற்கும் எழுத்து வடிவங் கூறாது பின்னைய ஆய்தத்துக்கு எழுத்து வடிவங்கள் கூறியதிலிருந்தே, முன்னைய குற்றியலிகரக் குற்றியலுகரங்கள் எழுத்தாந்தன்மை பெற்றனவல்ல என்பதும், பின்னைய ஆய்தம் எழுத்தாந் தன்மை பெற்றது என்பதும் அவர் கருத்தாதல் பெறப்படும்.

மேற்கூறிய நூற்பாவுக்கு பேராசிரியர், சிவஞான முனிவர் போன்றோர், 'குற்றியலிகரமும் ஆய்தமும் என்ற முப்பாற் புள்ளி எழுத்துக்கள்' எனக் கூறிய உரையை ஏற்போர், குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆகியன புள்ளிபெறும் வகையால் இயல்பான இகர உகரங்களிலிருந்து வேறுபட்ட எழுத்துக்கள் ஆகலாம் எனக் கருதக்கூடும். அதனை ஆதரித்துச் சங்க யாப்பு நூற்பா ஒன்று, குற்றியலிகரமுங் குற்றியலுகரமுமற்றவை தாமே புள்ளி பெறுமே' (யாப் விருத்தி 27 ஆம் பக்கம்) என்று சொல்லிவைத்திருக்கிறது. குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளிபெறுதல் உண்மையா யின், அக்குறுகிய ஓசையையுடைய இகர உகரங்களுக்கு எவ்விடத்தே புள்ளிகள் அமைதல் பொருந்தும் என்பதைச் சிந்தித்துப்பார்த்தல் நன்று. பாக்கு என்ற குற்றியலுகரச் சொல்லின் இறுதியிலுள்ள 'கு' என்ற எழுத்தின்மேல் ஒரு புள்ளி இட்டுக்காட்டினால் அது குற்றியலுகரம் எனத் தெரியும் என்பதுதான் அவ்வாசிரியர்களின் கருத்தாயிருத்தல் வேண்டும். அவ்வாறே நாகியாது என்ற குற்றியலுகரப் புணர்ச்சியிலுள்ள 'கி' என்ற எழுத்தின் மேல் ஒரு புள்ளியிட்டுக் காட்டினால் அது குற்றியலிகரம் எனத் தெரியும் என்பதும் அவர்கள் கருத்தாதல் கூடும். வேறெவ் வகையில் அவைகள் புள்ளிபெறலாம் என்பதை எண்ணிப்பார்க்கவே முடியவில்லை. 'கு' என்பதற்கும், 'கி' என்பதற்கும் மேற்புள்ளியிட்டுத்தான் அவை குற்றியலுகரம் என்றும், குற்றியலிகரம் என்றும் காட்டவேண்டு மென்றால், அது ஒரு வியர்த்தமான முயற்சியென்று யாருக்கும் புரிந்துவிடும். ஏனெனில் புள்ளி பெறாமலே எவை குற்றியலிகரமென்றும் எவை குற்றியலுகரமென்றும் இப்பொழுது நாங்கள் தெரிந்துகொள்ளக் கூடியனவாயிருக்கையில், அவற்றிற்கு மேல் ஒரு புள்ளியை இட்டாற்றான் குற்றியலிகரம் எவையென்றும் குற்றியலுகரம் எவையென்றும் தெரியுமென எண்ணுதல் முயல் பிடிப்பதற்கு முயலின் தலையிலே நெய்யை வைத்துவிட்டு நிழலில் நின்றால், நெய்யுருகி அதன் கண்ணை மறைக்கும் போது முயலின் அருகே சென்று அதனைப் பிடித்துவிடலாம் என்று சொல்வதைப் போலவேயிருக்கிறது. அதனாற் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளிபெறும் எழுத்துக்கள் என்பது ஒரு கட்டுக் கதைக்குப் பொருந்துமே தவிர தர்க்க நியாயத்துக்குப் பொருந்து மாறில்லை.

சார்பெழுத்து என்ற பதப் பிரயோகத்தை நன்னூலார் கையாண்டு மேலும் வரித்தோதியமை யால், அது நின்று நிலைபெறலாயிற்று. அவர் 'அகர முதல னகர இறுவாய் முப்பது' எழுத்துக்களை யும் விட, ஏனைய எழுத்துக்கள் எல்லாம் சார்பெழுத்துக்கள் என்று கூறிப் போந்தார்.

'உயிர்மெய் யாய்த முயிரள பொற்றன
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்'

என்பது அவர் கோட்பாடாகும். குற்றியலிகரமும் குற்றியலுகரமும் இயல்பான இகர உகரங் களை விட வேறு எழுத்தாதல் பொருந்தாவென மேலே கண்டோம். அவை நலிந்த ஓசை பெற்று வருவனவே தவிர வேறு எழுத்துப்பெற்று வருவனவல்ல. அவ்வாறே தமிழில் வேறு எழுத்துக்க ளும் இடத்துக்கேற்ப ஓசை பெற்று வருதலுண்டு. உதாரணமாக தொல்காப்பிய முதல் நூற்பாவின் முதலடியில் 'எழுத்தெனப் படுப' என்ற தொடரில் உள்ள இறுதிப் பகரம், அதற்கு முந்திய பகரத்தை விட நலிந்த ஓசை பெற்று வருதலைக் கவனிக்கலாம். அப் பகரத்திலுள்ள அகரம் குற்றியல் அகரம் போல ஒலித்து நிறகிறது ஆயின், அக் குற்றியல் அகரமோ, அது ஏறி நிற்கும் பகரமோ வேறான எழுத்துக்களென யாரும் எஞ்ஞான்றும் கொண்டதில்லை. அவ்வாறே 'வாழ்க', 'வருக' என்ற சொற்களிலுள்ள ககரங்களும் குற்றில் அகர ஒலியைக் கொண்டு நிற்கின்றன. எனின் அவை

வேறெழுத்தாதலில்லை. அவை போலவே நலிந்த ஓசை பெற்று வரும் இகர உகரங்களை வெறெழுத்தாகக் கொள்ளல் சாலா என்பது மேலும் வலுவாகிறது.

ஆய்தம் முப்பாற் புள்ளி பெற்ற எழுத்தென்றும், அது எதனையும் சார்ந்து நிற்கவில்லை என்றும் மேலே காட்டினோம். அதனால் அதனைச் சார்பெழுத்தாகக் கொள்வது எங்ஙனம்? அது போலவே உயிரளவு ஒற்றளவு ஆகியவற்றையும் சார்பெழுத்து என்று கொள்வது எவ்விதத்திலும் பொருத்தமாகத் தெரியவில்லை. அவை 'அகர முதல னகர இறுவா' யான முப்பது எழுத்துக்களுள் அடங்குவனவேயன்றி வேறல்லவே! நீட்டம் வேண்டிக் கூட்டி எழுதப்படும் அளபெடை எழுத்துக்கள் மேலதிக எழுத்துக்களெனப் புறம்பாக எண்ணப்படுமேல், வினாவைக் குறித்துச் சொல்லின் இறுதியில் வரும் ஆ,ஓ,ஏ என்ற எழுத்துக்களும் மேலதிக எழுத்துக்களாக அல்லவா கொள்ளப் படல் வேண்டும்! அவ்வாறு கொள்ளப்படுதல் இல்லையாதலால், அளபெடை எழுத்துக்களும் வேறாக எண்ணப்படல் ஆகாது என்பது போதரும். எனவே, அவை சார்பெழுத்துக்களெனக் கணித்தற்கில்லை.

உயிர்மெய் எழுத்துக்கள் கூட்டெழுத்துக்களாம்.'க்இ' என்ற கூட்டே 'கி' என்றாகிறது. அவ்வொலியை இரு எழுத்துக்களாற் குறிப்பதை தவிர்ப்பதற்குப் பதிலாக இரண்டையும் இணைத்து ஒரு எழுத்தாக வகுத்திருப்பது ஆன்றோரின் ஒரு பெரும் சாதனை என்றே கொள்ள வேண்டும். அவ்வாறு அமைத்திருக்காவிட்டாற் கிணறு என்ற மூன்றெழுத்துச் சொல்லை ஆங்கிலத்தில் **Kinaru** என்று ஆறெழுத்தால் எழுதிக் காட்டுவது போலத் தமிழிலும் 'க்இண்அற்உ' என்றல்லவா எழுதவேண்டியேற்பட்டிருக்கும்! அதனால், உயிர்மெய் எழுத்துக்கள் கூட்டெழுத் துக்களேயன்றி வேறில்லை, அதனாற்றான் தொல்காப்பியனார். அவற்றையெல்லாம் சார்பெழுத் துக்களெனக் கொள்ளவில்லை.

ஐகார, ஔகார, மகர, ஆய்த எழுத்துக்கள் சில சந்தர்ப்பங்களில் குறுகி ஒலிக்கின்றன என்றமை யால், அவற்றை இயல்பான எழுத்துக்களிலிருந்து வேறானவை என்று கருத முடியாது. ஐகாரக் குறுக்கத்துக்கு நன்னூல் காட்டும் உதாரணமாய, 'ஐப்பசி', 'மைப்புறம்' என்ற சொற்களை 'ஐ' என்ற எழுத்துக்கு இயல்பாக உள்ள ஓசையுடன் சொல்லும் போது, அவை பலர் வாயிற் குறுகாமலே ஒலிக்கின்றன. அவ்வாறே ஔகாரக் குறுக்கத்துக்கு காட்டப்படும் உதாரணமாய, 'மௌவல்' என்ற சொல்லும் 'ஔ' என்ற எழுத்துக்கு இயல்பாக உள்ள ஓசையுடன் சொல்லும் போது குறுகாமல் ஒலிக்கின்றது. அவை போலவே மகர ஒற்றெழுத்தும், ஆய்த எழுத்தும் சொல்லும் முறையைப் பொறுத்து ஒலிப்பனவே தவிர்ப் 'போன்ம்', 'மருண்ம்' என்ற சொற்களிலும், 'கஃறீது', 'முடஃடீது' என்ற சொற்களிலும் அவை எப்பொழுதும் குறுகியே ஒலிக்கும் என்று அறுதியிட்டு சொல்லிவிட முடியாது. செய்யுளிலே சீருக்கேற்றவாறு அவற்றைக் குறைத்தும் ஒலிக்கச் செய்யலாம், நிறைத்தும் ஒலிக்கச் செய்யலாம். ஆனால் அவை குற்றியலிகர குற்றியலுகரங்கள் போல இலக்கண விகாரங் காட்டுவனவல்ல. அதனால் அவற்றை சார்பெழுத்துக்கள் என விதந்தோத வேண்டிய தேவை இலக் கணத்துக்கு இன்றியமையாததொன்று.

தொல்காப்பியனார் மகரக் குறுக்கத்தைப்பற்றிக் கூறியிருக்கிறாரேயென்றால், அவர், 'அரை யளவு குறுகன் மகரமுடைத்தே' எனப் பிரிநிலை ஏகாரஞ் சேர்த்து, அது அரையளவு குறுகுதலும், உண்டு என்ற கருத்திற் கூறி, 'இசையிட னருகுந் தெரியுங் காலை' என விசேடத்துரைத்தமையால் அது இசையின் கண்ணே வருவதென்றும், அவ்விடத்தும் அது அருகியே வருமென்றும், அதனை நுட்பமாக ஆராய்ந்து பார்க்குமிடத்துத்தான் அது தெரியுமென்றுங் காட்டியிருக்கிறார். எனவே மகரக் குறுக்கம் அருவருக்கானது என்பது தெரிகிறது. ஆனால், அது 'சார்ந்து வரும் மரபின் மூன்ற'ற் குப் புறம்பானதென்று தொல்காப்பியனார் கருதியதனாலேயே அதனை அவற்றுடன் சேர்த்தோதாது விட்டார். அதனாற் குறுகிய ஓசை பெற்றுவரும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்களென தொல்காப்பி யனார் கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது. பின் ஆய்தத்தை எதற்காக சார்ந்து வரும் இயல்பினையுடைய குற்றியலுகரக் குற்றியலிகரங்களோடு சேர்த்தோதினாரெனின், அது

குற்றியலி கரம் குற்றியலுகரத்தை தழுவியே நிற்குமாதலானும், குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே நிழல் போல ஆய்தமும் வல்லினம் தொடரவே நிற்குமாதலானும், அது நலிந்த ஓசையுடை யதாதலானும், அதனைத் தொடரும் வல்லினத்தை குற்றியற்றன்மை பெறச் செய்து நிற்றலானும், அது குற்றியலிகரக் குற்றியலுகரங்களோடு ஒரே வழி ஒற்றுமை காட்டுவதாகக் கொண்டு அவற்றுடன் சேர்த் தோதி வைத்தாரெனலாம்.

நன்னூலார் கணிப்பின்படி, சார்பெழுத்துக்கள் உயிர்மெய் 216, குறுகாத ஆய்தம் 8, உயிரள பெடை 21, ஒற்றளபெடை 42, குற்றியலிகரம் 37, குற்றியலுகரம் 36, ஐகாரக் குறுக்கம் 3, ஔகாரக் குறுக்கம் 1, மகரக்குறுக்கம் 3, ஆய்தக்குறுக்கம் 2 ஆக மொத்தம் 369 என்பர். 'எழுத்தெனப் படுப அகர முதல னகர விறுவாய் முப்பஃது என்றோதிய தொல்காப்பியனாருடன் ஒத்து 'உயிரு முடம்புமா முப்பது முதலே' என்றோதிய நனினூலார், அத் தொகையை விடச் சார்பெழுத்துக்களின் தொகை பன்னிருமடங்கு மேற்பட்டதாகக் காட்டுதல் வேடிக்கையாவதாகவே தோன்றுகிறது. குறுகிய ஓசை பெற்றன போல வரும் ஐ, ஔ, ஃம், ஆகிய எழுத்துக்களையெல்லாம் சார்பெழுத் துக்களைப் பகுத் தோதிய நன்னூலார், 'படுப', 'வாழ்க', 'வருக' என்பன போன்ற சொற்களிலுள்ள அகரக்குறக்க ஒலியை எவ்வாறு கவனிக்காது விட்டார் என்பது வியப்பே! அதனை அவதானித்திருந்தால் அகரக் குறுக்கத்தையும் வேறெழுத்தாகக் கொண்டு அதனையும் சார்பெழுத்தாக எண்ணி சார்பெழுத்தின் தொகையை 'ஒன்றொழி முந்நூற் / றெழுபான்' என்றோதி ஊன்படுத்தாது, 'என்றியல் முந்நூற்றெழு'பான் என்றோதி நிறைவு கண்டிருப்பார் போலும்.

நலிந்த ஓசை கொண்டமையாற் குற்றியலிகர, உகரங்களையும், ஆய்தக் குறுக்கத்தையும், ஐகார, ஔகார, மகரக் குறுக்கங்களையும் அவ்வவ் எழுத்துக்களின் இயல்பான ஓசை வடிவங்க ளைச் சார்ந்து வரும் மரபை உடையன என்று கொண்டால், நலியாத ஓசையுடன் வரும் அளபெடை களையும், உயிர்மெய் எழுத்துக்களையும் அவற்றின் வரிசையிற் சேர்த்து சார்பெழுத்துக்களென எவ்வாறு கொள்ளலாம்? தொல்காப்பியனார் கூறிய சார்ந்துவரும் மரபையுடைய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஓசையளவிலன்றி எழுத்தளவிலே தமக்கென புறம்பான வடிவமற்றவை. அவ்வாறே ஆய்தக் குறுக்கமும், ஐகார, ஔகார, மகரக் குறுக்கங்களும் ஆகலாம். ஆனால் அள பெடைகளும் உயிர்மெய் எழுத்துக்களும் தமக்கென உரிய எழுத்து வடிவங்களைக் கொண்டியங்கு வனவாம். அதனாலும் அவை சார்பெழுத்தெனல் சாலா.

தமக்கெனத் தனி எழுத்துப் பெற்றுத் தனித்தியங்க முடியாமல், எழுத்துப்பெற்ற இன எழுத்தைச் சார்ந்து நின்று இயங்கும் நலிந்த ஒலிகளே சார்பெழுத்துக்கள் எனத் தொல்காப்பியனார் கருத்தாதல் வேண்டும் என்பது, அவர் திட்டவட்டமாக எழுத்துக்கள் முப்பத்து மூன்றென்று கூறாமல், 'சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடை' எழுத்துக்கள் முப்பது என்றும், சார்ந்து வரும் அவையும் எழுத்தேயென்னாது 'எழுத்தோரன்ன' என்றும் கூறி, மகரக்குறுக்கத்தை வேறாக்கியமை யாற் பெறப்படும். நன்னூலார் அவ்வாறு கொள்ளாது, முப்பது முதலெழுத்துக்களுக்கு மேலாக எழுத்துருப்பெற்றோ பெறாமலோ வரும் அத்தனையும் சார்பெழுத்துக்கள் என்று கொண்டமை இடர்பாட்டுக்குக் காரணமாயிற்று. அப்படிக் கொண்டமையால் ஒரு பலன் விளைந்தது எனக் காட்ட முடிந்தால், அது பயனுள்ள முயற்சியென வியக்கலாம். ஆனால், 369 எழுத்துக்கள் சார்பெழுத் துக்கள் என்று அவர் காட்டியதால் எவ்வித விசேட பயனும் பெறப்படவில்லை. தொல்காப்பியனார் காட்டிய 'சார்ந்து வரும் மரபின்' இலக்கண விகாரங்களை ஏற்படுத்துவனவால், அவற்றை முதலிலேயே புறம்பாக எடுத்துக் காட்டி வைத்தாரெனக் காரணங்காட்டலாம். ஆனால், நன்னூலார் மேலதிகமாக எடுத்துக்காட்டிய 369 சார்பெழுத்துக்கள் எதற்காகக் காட்டப்பட்டன என்பதற்கு தக்க காரணமெதுவும் சொல்வதற்கில்லை. அதனாற் சார்பெழுத்துக்கள் என்ற பகுப்பு இலக்கணத்துக்குத் தேவையில்லை என்றே தோன்றுகிறது.

# தமிழ் எழுத்துக்கள் சிலவற்றின் இருவகை ஒலி வடிவங்கள்

எழுத்தின் இலக்கணத்தைச் சொல்லத் தொடங்கிய தொல்காப்பியனார், தன் முதலாவது நூற்பாவிலே 'எழுத்தெனப்படுப அகர முதல னகர விறுவாய் முப்பஃதென்ப' என்று கூறியதோடு, சார்ந்து வரும் ஒலி வடிவங்களாய குற்றியலிகரமும், குற்றியலுகரமும் எழுத்தோரன்ன என்றும் சொல்லிவைத்தார். அதனால், இகரத்திற்கு இரு ஒலி வடிவங்களும், உகரத்திற்கு இரு ஒலி வடிவங்களும் உள என்பதனை நிறுவினார். இகர உகரங்களுக்குத் தனித்தனியே உள்ள இரு வேறு ஒலி வடிவங்களுள், ஒன்று மற்றையதைவிடக் குறைவான ஒலிபெற்ற வடிவம் என்பது, 'குற்றியல்' என்ற அடையிட்டு அதனைக் குறிப்பிடுவதனாற் புலனாகும். எனவே, மற்றையது நிறைவான - முற்றான - ஒலிபெற்ற வடிவமென்பது பெறப்படும்.

முற்றியல் இகர உகரங்களுக்கும், குற்றியல் இகர உகரங்களுக்கும் உள்ள வேறுபாடு, முன்னையவை இயல்பான ஒலி கொண்டிருக்கப் பின்னையவை நலிவான ஒலி கொண்டிருத்தலேயாம். குடம் என்ற சொல்லிலுள்ள 'கு' என்ற எழுத்தின் ஒலி ஆங்கில எழுத்தில் hu என்று தொனிக்க, நாகு என்ற சொல்லில் உள்ள கு என்ற எழுத்தின் ஒலி hu என்றொலிப்பதைக் கவனிக்கலாம். முன்னைய கு கரத்திலுள்ள முற்றியலுகரம் இயல்பான வல்லின ஓசையுடனமையப் பின்னையகு கரத்திலுள்ள குற்றியலுகரத்தின் ஒலியைத் தரும் 'கி' என்ற எழுத்து அதற்கியல் பான Ki என்ற வல்லின ஒலியைத் தராது, hi என்ற நலிந்த ஒலியைத் தருவதைக் கவனிக்கலாம். சொல்லிப் பார்க்கும் போது, குடம் என்பதிலுள்ள குகரத்துக்கும் நாகு என்பதிலுள்ள குகரத்துக்கும் மாத்திரையளவில்- ஒலி நீள அளவில் வேறுபாடு தென்படுவதை விட, ஒலி வலிவு நலிவிலேயே வேறுபாடு தென்படுகின்றது. அவ்வாறே hu என்ற சொல்லையும், நாகியாது என்ற சொல்லையும் சொல்லிப் பார்க்கையில் முன்னையதிலுள்ள முற்றியலிகரத்துக்கும் பின்னையதிலுள்ள குற்றியலுகரத்துக்கும் வேறுபாடு அவற்றின் ஒலி வலிவு நலிவிலேயே நன்கு தெரிகிறது. எனவே, முற்றியலிகரம் குற்றியலிகரம் ஆகியவற்றிற்கிடையிலும், முற்றியலுகரம் குற்றியலுகரம் ஆகியவற்றிற்கிடையிலும் உள்ள வேறுபாடு, மாத்திரையளவில் என்று கொள்வதைவிட, ஒலி வலிவு நலிவிலேயே உள்ளது என்று கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது.

பொதுவாகக் குற்றியலுகரம் நெட்டெழுத்தின் இறுதியிலும் தொடர்மொழியீற்றிலும் வல்லெழுத்துக்களை ஊர்ந்தே வரும் என்றாலும், சில வேளைகளிற் புணர்மொழியின் இடையிலும் குற்றியலுகர ஓசை தோன்றும் என்பதை 'இடைப்படிற் குறுகு மிடனுமாருண்டே' என்ற நூற்பாவினால் ஆசிரியர் எடுத்துக் காட்டினார். இவ்வாறு மொழியின் கண்ணே இடம் பெற்று வரும் பொது ஒலி வேறுபாடுகளைக் காட்டும் எழுத்துக்கள் இகர உகரங்களைத் தவிரத் தமிழில் வேறில்லையா? இருப்பின் அவற்றைத் தொல்காப்பியனார் எடுத்துக் காட்டாதொழிந்தமை ஏன் என்ற வினாக்களுக்கிடமுண்டாகிறது. உயிர் எழுத்துக்களுள் எகரத்துக்கும் ஏகாரத்துக்கும் தனித்தனி இருவேறு ஒலிகள் அமைந்து வருதலைச் சில சொற்கள் மூலம் காட்டலாம்.

எகர ஏகாரங்களின் இருவகை ஒலிகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எச்சம் | எஞ்சு | எத்தனை | எந்த | எய்த | எரு | எலி | என |
| ஏச்சு | ---- | ஏத்த | ஏந்து | ஏய | ஏர் | ஏலம் | ஏன் |

என்ற சொற்களில் எகரமும் ஏகாரமும் aim என்ற ஆங்கிலச் சொல்லில் a என்ற எழுத்தின் தொனியது குறிலும் நெடிலும் போல ஒலிப்பதையும்,

எக்கு எங்கு எட்டு எண்ணம் எப்படி எமது எவ்வாறு எழிய எள்ளி எறி

ஏகு ஏங்கு ஏடு ஏணி ஏப்பம் ஏமம் ஏவாது ஏழு ஏளனம் ஏறு

என்ற சொற்களில் எகர ஏகாரங்கள் அமை என்ற ஆங்கிலச் சொல்லில் அ என்ற எழுத்தின் தொனியது குறிலும் நெடிலும் போல ஒலிப்பதையும் அவதானிக்கலாம்.

அவ்வாறே உயிர் எழுத்துக்களுள் இகரத்துக்கு குற்றியலிகர ஒலி தவிர்ந்த இருவேறு ஒலி வடிவங்கள் அமைந்திருப்பதனையும், ஈகாரத்துக்குத் தனியே இருவேறு ஒலிகள் அமைந்திருப்ப தனையுங் காணலாம்.

இகர ஈகாரங்களின் இருவகை ஒலிகள்

இகல் இங்கு இச்சி இஞ்சி இதம் இந்த இப்பி இம்மி இயல் இரவு

ஈகை ஈங்கே ஈசல் ஈஞ்சு ஈது ஈந்து ஈப்புலி ஈமம் ஈய ஈரம்

இல்லை இவள் இனம்

------- ஈவு ஈனம்

என்ற சொற்களில் இகரமும் ஈகாரமும் க,ங,ச,ஞ,த,ந,ப,ம,ய,ர,ல,வ,ன என்ற எழுத்துக்களின் முன் வருகையில், கஓர என்ற ஆங்கிலச் சொல்லில் 'க' என்ற எழுத்து தொனியின் குறிலும் நெடிலும் போல ஒலிப்பதையும்,

இட்ட இணர் இழவு இளம் இறங்கு

ஈகு ஈண்டு ஈழம் ஈளம் ஈறு

என்ற சொற்களில் இகரமும் ஈகாரமும் ட,ண,ழ,ள,ற என்ற எழுத்துகளின் முன் வருகையிற் சற்று வேறுபட்டுத் தாழ்ந்து, 'சமழ' என ஆங்கிலத்தில் சொல்லும் போது 'ச' என்ற எழுத்துத் தொனியின் குறிலும் நெடிலும் போல ஒலிப்பதையும் உணரலாம்.

இதுவரை கூறியவற்றை இலக்கண விதிகளாக அமைத்துக் கூறுவதானால்,

(1) ட,ண,ழ,ள,ற என்ற எழுத்துக்களின் முன் வரும் இகரமும் ஈகாரமும் 'சமழ' என ஆங்கிலத்தில் சொல்லும் போது 'ச' என்ற எழுத்துத் தரும் தொனியின் குறிலும் நெடிலும் போல ஒலிக்கும். ஏனைய எழுத்துக்களின் முன் வரும் இகரமும் ஈகாரமும் 'கஓர' என்ற ஆங்கிலச் சொல்லி 'க' என்ற எழுத்துத் தொனியின் குறிலாகவும் நெடிலாகவும் ஒலிக்கும்.

(2) க, ங, ட, ண, ம, ழ, ள, ற என்ற எழுத்துக்களின் முன் வரும் எகர ஏகாரங்கள் 'சரய' என்ற ஆங்கிலச் சொல்லில் 'ச' என்ற எழுத்துத்தொனியின் குறிலாகவும் நெடிலாகவும் ஒலிக்கும். ஏனைய எழுத்துக்களின் முன்வரும் ஏகாரங்கள் அமை என்ற ஆங்கிலச் சொல்லில் அ என்ற எழுத்துத் தொனியின் குறிலாகவும் நெடிலாகவும் ஒலிக்கும் என்று வகுத்துச் சொல்லலாம்.

உகல வழக்கோடு ஒத்துப் பார்க்கும் போது இந்த வேறுபாட்டினை அவதானிக்க முடிகிறதே தவிர, அதனை இலக்கண நூல்கள் எடுத்துக்காட்டி வைக்கவில்லை. பிறப்பியல் இ,ஈ,எ,ஏ,ஐ எனும் ஐந்தெழுத்தும், அகர ஆகாரங்கள் போல அங்காந்து கூறும் முயற்சியோடு அண்பல்லும் அடிநாவிளிம்புமுறப் பிறக்குமென்றே தொல்லாசிரியர் பலருங் கூறினர். அவற்றிலிருந்து இ,ஈ,எ,ஏ,ஐ என்னும் எழுத்துக்களின் ஒலி வேறுபாடு தெளிவாகப் பெறப்படவில்லை. அவற்றிற்கிடையே சிறிது வேறுபாடுகள் உள என்பதை 'தத்தந் திரிபே சிறிய வென்ப' (தொல் எழு 88) என்ற நூற்பாவால் ஆசிரியர் உணர்த்தி வைத்தார். அந்த வேறுபாடுகளுக்கு எவரும் சரிவர இலக்கணம் கூறி வைத்திலர். அதனாலே தான் சில எழுத்துக்களின் ஒலி வடிவங்கள் காலத்துக்குக் காலம் இடத்துக்கிடமும் சிறிது வேறுபட்டு வருகின்றன. அந்த வேறுபாடுகள் ஒலிவடிவின்றி எழுத்து வடிவிலோ இலக்கண அமைப்பிலோ மாற்றமெதனையும் ஏற்படுத்தாமையால், இலக்கண நூலாசிரியர்கள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை போலும்.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும் சொற்புணர்ச்சிக் கண்ணும் செய்யுட் சீரமைப்பிலும் மாற்றங்களைக் காட்டி நின்றமையால் அவற்றைப் புறம்பாக எடுத்துக்காட்ட வேண்டிய நிலை தொல்லாசிரியர்களுக்கு ஏற்பட்டிருந்தது எனலாம். தமிழிலே செய்யுள், வசன அமைப்புக்களுக்கு இலக்கண வரம்பு வகுத்திருப்பது போல, உச்சரிப்புக்கான இலக்கண வகுப்புச் சரிவர அமையாததாற் பேச்சு வழக்கில் மொழி வேறுபட்டுச் சொல்வதைத் தவிர்க்க முடியவில்லை. அவ்வாறு வேறுபட்டு நடக்கும் வேறு சில தமிழ் எழுத்துக்களின் ஒலி வழக்கினையும் ஈண்டு நோக்குவோம்.

## ககரத்தின் இருவகை ஒலிகள்

மெய்யெழுத்துக்களுட் ககரம் வல்லினத்தைச் சேர்ந்தது என்று வகுக்கப்பட்டிருக்கிறது. அது அடி நாவும் அடி அண்ணமும் உறப்பிறக்கும் என்பது இலக்கணம். அதனால் க என்ற உயிர் மெய் ஆங்கில எழுத்திலே கஅ என்ற தொனியைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் ககரவரி உயிர்மெய் எழுத்துக்கள் எல்லாம் எல்லா இடத்தும் அவ்விதம் வல்லினமாக ஒலிக்கின்றனவா? உதாரணமாக, க என்ற உயிர் மெய் எழுத்தை இடையிலோ கடையிலோ பெற்றுவரும் ஆகம், தேகம், பெருக என்ற சொற்களை இயல்பாக சொல்லும் போது, அவற்றிலுள்ள க என்ற எழுத்து அதற்குரிய **Ka** என்ற தொனியிலிருந்து வழுகி **ha** என்று ஒலிப்பதை அவதானிக்கலாம். அவ்வாறு **ha** என்று ககரத்தை ஒலிப்பது தவறு என்றும் ஆகம், தேகம், பெருக என்ற சொற்களிலும் ககரம் க என்ற உச்சரிக்கப்பட வேண்டும் என்றால், அச் சொற்கள் முறையே ஆக்கம், தேக்கம், பெருக்கம் என்ற சொற்களைப் போல் ஒலித்துக் கருத்திலே மலைப்பைத் தருதல் இயல்பே. அன்றியும், சாதாரண உலக வழக்கிலே அச்சொற்களில் வரும் ககரம் **ha** என்ற ஓசையைக் கொண்டிருத் தலையே காண்கிறோம்.

இனி, கா என்ற எழுத்தை இடையிலோ கடையிலோ பெற்றுவரும் ஆகாது, போகாது, வேகா என்ற சொற்களிலே வரும் கா என்ற எழுத்து, அதற்கு இயல்பாக உரிய ha என்ற வல்லின ஓசையி லிருந்து விலகி ha என்ற ஒலியுடன் இயல்வதையும் காணலாம். இவ்விடத்தும் கா என்ற எழுத்து **ha** என்று ஒலிக்கப்பட வேண்டும் என்றால், அது பேச்சு வழக்கோடு முரண்பட்டு அச் சொற்கள் முறையே ஆக்காது, போக்காது, வேக்கா என்ற சொற்களைப் போலத் தொனித்து வேறு பொருளைச் சுட்டவுங் கூடும்.

அடுத்து கி என்ற எழுத்தை இடையிலோ உற்றுவரும் நோகின்ற, போகின்ற, ஆகி என்ற சொற்களிலும் கி என்ற எழுத்து **Ki** என்று தொனிக்காது **hi** என்று தொனிப்பதையும், அதனை வலிந்து **Ki** என்று ஒலித்தால், அவை முறையே நோக்கின்ற, மாய்க்கின்ற, ஆக்கி என்ற சொற்க

ளோடு தடுமாறத்தக்கனவாய் ஒலிப்பதையும் அவதானிக்கலாம். அவ்வாறே கீ, கு, கூ, கெ, கே, கை, கொ, கோ ஆகிய எழுத்துக்களை இடையிலோ கடையிலோ பெற்றுவரும் சொற்களுக்கு உதாரணமாய் பெருகீடு, ஆகுலம்,போகூழ், பருகென்று, அருகே, வருகை, நீகொல், முருகோ என்ற சொற்களையும் பேச்சு வழக்கை அனுசரித்து உச்சரித்துப் பார்த்தால், அவ்வெழுத்துக்களும் முறையே hi, hu, hu, he, he, hai, ho, ho என்றே ஒலித்தல் தெரியும். ஆனால் ககரவரி உயிர்மெய் எழுத்துக்கள் தனித்தனியே சொல்லின் முதலெழுத்தாக வரும்போது வல்லினமாக **ஒலிக்கின்றன**. உதாரணமாக, கண், காது, கிளி, கீழ், குடம், கூடு, கெடு, கேடு, கை, கொடை, கோடை, கௌளி என்பனவற்றை உச்சரித்துத் தெரிந்து கொள்ளலாம். அவைபோலவே ககரவரி உயிர்மெய் எழுத்துக்கள், க், ங், ட், ண், ற், ன் எனும் ஒற்றெழுத்துக்களைத் தொடர்ந்து வருமிடத்தும் வல்லினமாக ஒலிப்பதைக் காணலாம். உதாரணமாக, தாக்கம், அங்காந்து, வெட்சி, கண்கூடு, கற்க, வன்கை என்ற சொற்களை உச்சரித்துத் தெரியலாம். இவற்றை இலக்கண விதியாக அமைத்துக் **கூறுவதானால்,**

(3) ககரவரி உயிர்மெய் எழுத்துக்கள் தனி எழுத்தாக வருமிடத்தும், சொல்லின் முதலெழுத்தாக வருமிடத்தும் சொல்லின் இடையிலும் கடையிலும் க், ங், ட், ண், ற்,ன் எனும் மெய் எழுத்துக் களுள் ஒன்றைத்தொடர்ந்து வருமிடத்துமே வல்லினமாக ஒலிக்கும். **ஏனைய இடங்களில்** அவை ஹ (ha) என்ற ஒலியைத் தரும் என்று வகுத்துச் சொல்லலாம்.

## *சகரத்தின் இருவகை ஒலிகள்*

இனி சகரத்தின் ஒலிவடிவைக் கவனிப்போம். சகரம் வல்லின எழுத்துக்களுள் ஒன்று. அது இடைநாவும், இடை அண்ணமும் உறப்பிறக்கும் என்பர். அதனால் ச என்ற உயிர்மெய், ஆங்கிலத்தில் Charity என்ற சொல்லின் Cha என்ற தொனியை கொண்டிருக்குமெனலாம். ஆனால், சகர உயிர்மெய் எழுத்துக்கள் எல்லாம் எல்லா இடத்தும் அவ்விதம் வல்லினமாக ஒலிக்கின்றனவா? உதாரணமாக வீச, பாசி, காசு, இசை என்பன போன்ற சொற்களைச் சொல்லும் போது, ச என்ற எழுத்து வடமொழி ஸ அல்லது ஆங்கில sa என்ற தொனியை ஒத்து ஒலிப்பதையும், சி, சு, சை ஆகிய எழுத்துக்கள் முறையே si, su, sai என்ற வல்லினமற்ற ஒலிகளைத் தருதலையும் உணரலாம். அவ்வெழுத்துக்கள் cha, chi, chu, chai என அவ்விடத்தும் வல்லினமாகவே உச்சரிக்கப்பட வேண்டுமென்றால், அவை முறையே வீச்ச, பாச்சி, காச்சு என்ற சொற்களைப் போல ஒலித்துப் பொருள் மயக்கத்தை தருதலோடு, சாதாரண பேச்சுவழக்கோடு ஒத்து நடவாதனவாயுமிருக்கும். கற்றறிந்தோர் வாயிலாக அச்சொற்களைக் கேட்டால் இவ்வுண்மை புலனாகும். ஆனால், சகரவரி எழுத்து எதுவானாலும் தன்னின மெய்களாய் ச், ஞ் என்பவற்றையும் ட், ற் என்னும் மெய்யெழுத்துக்களையும் தொடர்ந்து வரும்போது, வல்லினமாகவே ஒலிக்கும் என்பதை கூச்சம், கஞ்சி, ஆட்சி, பாற்சோறு ஆகிய சொற்களை உச்சரித்தறியலாம். மேலும் சகரவரி உயிர்மெய்யெழுத்துக்கள் அனைத்தும் தனியெழுத்தாக வருமிடத்தும், சொல்லின் முதலெழுத்தாக வருமிடத்தும் வல்லினமாகவே ஒலிக்க வேண்டும். ஆனால் ச. சை. சௌ என்பன சொல்லின் முதலெழுத்தாகா என்பது தொல்காப்பியனார் கருத்து. நன்னூலார் அவையும் சொல்லின் முதலெழுத்தாகலாம் என வேறுபட்டுக் கூறினார். இக்கருத்து வேறுபாடு தொல்காப்பியனார் காலத்திலில்லாத சில சகர சௌகார முதற் சொற்கள் நன்னூலார் காலத்தில் உபயோகத்திலே வந்துவிட்டன என்பதைக் காட்டுமெனக் கொள்வதை விட அவ்வெழுத்துக்களிலே தொடங்கும் சொற்கள் அவற்றிற்கியல்பாக அமைந்திருக்க வேண்டிய வல்லின ஓசை கொண்டிரா எனத் தொல்காப்பியனார் கருதியிருக்க வேண்டுமெனக் கொள்வது பொருத்தமாயிருக்கும் போலத் தோன்றுகிறது. இக்கருத்துக்கு ஆதாரமாக ச,சை,சௌ ஆகிய எழுத்துக்களிலே தொடங்கும் சொற்கள் பெரும்பாலும் வடமொழிச் சொற்களின் தமிழ் உருவங்களாகவே இருக்கக் காணலாம். **வடமொழியிலுள்ள ஸ என்ற எழுத்தின் தொனி ச (Cha) என்ற வல்லெழுத்துத் தொனியின்**

போலியாய் வருதலை சங்காரம், சைவம், சௌந்தரம் என்ற சொற்களை உச்சரித்து தெரிந்து கொள்ளலாம். இவைபோ லவே சகரவரி உயிர்மெய் எழுத்துக்களை முதலாகக் கொண்டிருக்கும் ஏனைய பல சொற்களும் ச (ஸஹஅ) போல வல்லினமாகவும், ஸ போல வடமொழி ஓசையுடனும் விரவி வருதலை, சாலம், சிலர், சீலம், சுவர், சூலம், செறி, சேர, சொட்டு, சோறு என்பன போன்ற சொற்களைப் பலர் வாய்க்கேட்டுத் தெரியலாம். எனினும் வல்லினமாகவே உச்சரிப்பதிற் பொருள் மயக்கமோ வேறு இடர்ப்பாடோ எதுவும் இல்லாமையால், அவற்றின் வல்லின ஓசை குன்றாமலே அவை உச்சரிக்கப்பட வேண்டுமென வற்புறுத்தலாம். இவற்றை இலக்கண விதியாக அமைத்துக் கூறுவதானால்,

(4) சகரவரி உயிர்மெய் எழுத்துக்கள் தனி எழுத்தாக வருமிடத்தும், சொல்லின் இடையிலும் கடையிலும் ச், ஞ், ட், ற் எனும் மெய்யெழுத்துக்களைத் தொடர்ந்து வருமிடத்தும் வல்லினமாக ஒலிக்கும். ஏனைய இடங்களில் அவை ஸ (sa) என்ற ஒலியைக் கொண்டிருக்கும் என்று வகுத்து சொல்லலாம்.

## மாறுபடும் ஒலிகள்

அடுத்து ரகர, றகர ஒலி வேறுபாடுகளைக் கவனிப்போம். சிலர் ரகரத்தை றகரமாகவும், றகரத்தை ரகரமாகவும் உச்சரிக்கிறார்கள். அரம் என்ற சொல்லை aram என்றும்., அறம் என்ற சொல்லை atam m என்றும் அறிஞர் பலர் உச்சரிக்கக் கேட்டிருக்கிறோம். மேலும் பலர் அரம் என்பதை atam என்றும், அறம் என்பதை aram என்றும் உச்சரிக்கிறார்கள். இந்த உச்சரிப்பு வேறு பாடு எதனால் ஏற்பட்டது? எது சரியான உச்சரிப்பு? இவற்றை ஆராய்வதற்கு தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இலக்கண நூல்கள் எழுத்துக்களின் பிறப்புப் பற்றி சொல்லப்பட்டிருக்கும் நூற்பாக்களைப் பார்க்கவேண் டியிருக்கும். தொல்காப்பியத்தில் ரகரத்தின் பிறப்புப் பற்றிக் கூறுகையில்,

(1) 'நுனிநா அணரி அண்ணம் வருட' ரகாரம் பிறக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு உரைகாரர்,

(2) 'நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவரகாரம் பிறக்கும்' என்றார். தொல்காப்பினார் றகாரத்தின் பிறப்புப் பற்றிக் கூறுகையில்,

(3) 'அணிர நுனிநா அண்ணம் ஒற்ற' றகாரம் பிறக்கும் என்றார். அதற்கு உரைகாரர்,

(4) நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ றகாரம் பிறக்கும் என்றார்.

மேற்கூறப்பட்ட நான்கும் ஒரே கருத்தினையே தருகின்றன. இரு நூற்பாக்களிலும் வருட, ஒற்ற என்ற பதங்களே வேறாக இருக்கின்றன. அவ்விரு பதங்களுக்கும் உரைகாரர் 'தடவ' என்ற ஒரே கருத்தையே தருகிறார்.

நன்னூலார் ரகாரத்தின் பிறப்புக் கூறுகையில், 'அண்ண நுனிநா வருட' ரகாரம் பிறக்கும் என்று தொல்காப்பியனார் வழி கூறினார். இதன் உரையசிரியரும் 'வருட' என்பதற்கு 'தடவ' என்றே பொருள் தந்தார். நன்னூலாசிரியர் றகாரத்தின் பிறப்புப் பற்றிக் கூறுகையில் 'அண்ண நுனிநா நனியுறில்' றகாரம் பிறக்கும் என்றார். தொல்காப்பினார் ஒற்ற என்பதற்குப் பதிலாக, நன்னூலார் உறில் என்று கூறிய ஒன்றே வேறுபாடாகத் தோன்றுகிறது. எனினும் அவ்விரு பதங்களுக்கு மிடையே கருத்தில் வேறுபாடு தோன்றவில்லை. அதனால் தொல்காப்பியனாரும், நன்னூலாரும் ரகாரத்துக்கும், றகாரத்துக்கும் பிறப்பில் உற்ற வேற்றுமையைத் தெளிவாக வரையறுக்கவில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. அத [illegible] மும், றகாரமும் இடத்துக்கிடம் ஒலிவடிவில் வேறுபடுகின்றன என்று சொல்லலாம். அவை மேலும் வேறுபட்டுச் செல்வதைத் தடுத்து நிறுத்துவ தானால், அவ்விரு எழுத்துக்களின் ஒலிக்குச் சமமான ஆங்கில எழுத்தொலிகளாகிய ta, ra என்பவற்றை அவற்றின் அயலே இட்டுக்காட்டி அறிமுகப்படுத்தி வைக்கலாம். ஆனால் இப்பொழுது எது ta, எது ra என்ற ஐயப்பா டு எழுந்துள்ளது போலத் தோன்றுகிறது. இதனை முதலிலே தீர்த்துவைக்க வேண்டும்.

றகாரம் வல்லினமென்றும், ரகாரம் இடையினமென்றும் சொல்லிவைத்திருக்கிறார்கள். வல்லினத்தின் ஒலி வன்மையானதாக இருக்க வேண்டும். இடையினத்தின் ஒலி வன்மைக்கும் மென்மைக்கும் இடைப்பட்டதாயிருக்க வேண்டும். ta, ra என்ற இரு ஒலிகளுள் ra என்பது ta என்பதை விட வலிதாக ஒலிப்பதால் ரஅ என்பது ரகாரத்துக்கு சமமான ஒலியாதல் வேண்டும். எனவே ta என்பது ரகாரத்துக்குச் சமமான ஒலியாகும். அதனால் ர என்ற எழுத்து தஅ என்ற ஒலியையும், ற என்ற எழுத்து ra என்ற ஒலியையும் தருமெனக் குறித்து அவற்றின் வேறுபாட்டை உணர்த்தி வைக்கலாம்.

## வேறுபடும் ஒலிகள்

ஒலியில் இடத்துக்கிடம் வேறுபாடு காணப்படும் எழுத்துக்களுள் டகரமும் ஒன்றாகும். சில பிரதேசங்களில் ட என்ற எழுத்து ஆங்கிலத்தில் vitamin என்ற சொல்லில் ta என்ற பகுதியின் தொனியைக் கொண்டதாக ஒலிக்கப்படுகிறது. வேறு சில பகுதிகளில் அது madam என்ற ஆங்கிலச் சொல்லில் டஅ என்ற பகுதியின் தொனியைக் கொண்டதாக ஒலிக்கப்படுகிறது. இந்த இருவகை ஒலிகளுள் ட என்ற எழுத்துக்கு இயல்பாக இருக்க வேண்டிய - இலக்கண முறைப்படி சரியான - ஒலி எது என்பதை ஆராய்ந்து பார்த்தல் நன்றாகும்.

தொல்காப்பியம் 'டகார ணகார நுனிநா அண்ணம்' என்ற நூற்பா மூலம் நுனிநாவும், நுனி அண்ணமும் உற டரே ணகரம் பிறக்கும் என்று கூறுகிறது. நன்னூலும் 'கஙவும்,சஞவும் டணவு முதலிடை நுனிநா வண்ணம் முறமுறை வருமே' என்ற நூற்பா மூலம் நுனிநா நுனியண்ணத்தைப் பொருந்த டவ்வும் ணவ்வும் பிறக்கும் என்று தொல்காப்பியத்தை ஒட்டியே கூறும். ணகரம் எல்லாத் தமிழ்ப் பிரதேசங்களிலும் ஒரே விதமாகவே ஒலிக்கப்படுகிறது. அதனால் ணகரத்தை ஒலிக்கும் போது நுனிநா எவ்விடத்தில் அண்ணத்தைப் பொருந்துகிறது என்று அவதானித்து, அவ்விடத்தில் நுனிநாவையும், நுனி அண்ணத்தையும் உற வைத்து, டகரத்தை ஒலிக்கும் போது பிறக்கும் ஒலியே அதன் இயல்பான ஒலியாதல் வேண்டும். அப்படி ஒலித்துப் பார்க்கையில் டகரம் da என்ற ஆங்கில எழுத்துகள் தரும் ஒலியைப் பிறப்பிக்கக் காணலாம் இல்லை, அப்படி ஒலிக்கும் போது டகரம் ta என்ற ஆங்கில எழுத்துக்கள் தரும் ஒலியையே பிறப்பிக்கிறது என்று சிலர் வாதாடக் கூடும். அப்படி வாதாடுபவர்க்கு தக்க பதில் தமிழ் எழுத்தாய ரகரத்தில் உண்டெனக் காட்டலாம்.

ரகரம் ஆங்கில எழுத்துக்களாய தஅ என்ற தொடர் தரும் ஒலி பொருந்தியதாய், தமிழ் எழுத்துக்களுள் ஒன்றாய் இருக்கையில், டகரமும் தஅ என்ற ஒலி கொண்டதாய் அமைந்திருக்க வேண்டிய தேவை ஆன்றோருக்கேற்பட்டிராது. அன்றியும் பட்டம்,ஆட்டம், ஓட்டம், கூட்டம் என்பன போன்ற சொற்களை உச்சரிக்கும் போது தமிழ் கூறு நல்லுல்கமனைத்தும் அச்சொற்களில் வரும் டகரத்தை madam என்ற ஆங்கிலச் சொல்லில் வரும் da என்ற தொடர்தரும் தொனிபிறக் குமாறு ஒலிப்பதைக் காணலாம். அப்படியானால்,டகரம் da என்ற ஆங்கில எழுத்து தொடரின் ஒலியைக் குறிப்புதாகவே அமைக்கப்பட்டிருக்கிறது என்றே கொள்ள வேண்டும். எனவே டகரவரியில் வரும் பன்னிரு உயிர்மெய் எழுத்துக்களும் அதற்கிணங்க ட (da), டா (da), டி (di), டு (du), டூ (du)....... என ஒலித்தலே பொருத்தமாகும்.

வடமொழியில் 'ட' என்பது நாலுவகை ஒலியைக் கொண்டிருத்தலால், அதில் ஒருவகை ஒலியாய தஅ என்பதனைத் தமிழ் எழுத்தாய ட என்பதை ஒலியோடு தடுமாறித் தமிழ் நாட்டில் ஒலிக்கத் தொடங்கியமையே டகரத்தின் ஒலிவேறுபாட்டுக்குக் காரணமாகச் சொல்லலாம். வடமொழித்தாக்கம் அதிகமாக ஏற்படாத தமிழர் மத்தியில் டகர ஒலித் தடுமாற்றம் ஏற்படவில்லை. 'ண' என்பதற்கு வடமொழியில் வேறு இன ஒலிகள் இன்மையால், அது தமிழில் உள்ள ணகர ஒலியை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கதாகும். ரகர,றகர ஒலித்தடுமாற்றமும், வடமொழியிலுள்ள 'ர' என்ற ஒலியின் தாக்கத்தினால் ஏற்பட்டிருத்தல் கூடும்.

## அகரத்தின் இருவகை ஒலிகள்

ஏனைய தமிழ் எழுத்துக்கள் சிலவற்றுக்கும் இருவகை ஒலிவடிவங்கள் ஆங்காங்கு காணப்படுகின்றன என்பதை, வெவ்வேறு பகுதிகளில் தமிழ் அறிஞர்கள் பேசுந் தமிழைக்கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக, 'அகரம் அங்காந்தியலும்' என்றே சொல்லப்பட்டிருக்கிறது அவ்வாறு அகரத்தை அங்காந்து ஒலிக்கும்போது, பல சொற்களில் அகரம் umbrella என்ற ஆங்கிலச் சொல்லில் u என்ற எழுத்து தொனிப்பது போல ஒலிப்பதையும், சில சொற்களில் ஒயமு என்ற ஆங்கிலச் சொல்லில் ஒ என்ற எழுத்து தொனிப்பது போல ஒலிப்பதையும் உற்றுக்கேட்டு உணரலாம். எடுத்துக்காட்டாக ர, ல, ன என்ற எழுத்துக்களின் முன் வரும் அகரம் ஒயமு என்ற ஆங்கிலச் சொல்லிலுள்ள ஒ என்ற எழுத்தின் தொனிபோல ஒலிப்பதைப் பலர் கேட்டிருக்கலாம். அரன், அலை, அன்னை, என்ற சொற்களில் வரும் அகரத்தின் ஒலிக்கும், அக்கா, அச்சம், அஞ்சு, அடம், அணி, அதன், அந்த, அப்பா, அம்மா என ஏனைய எழுத்துக்களின் முன்வரும் அகரத்தின் ஒலிக்குமுள்ள வித்தியாசத்தை ஒலித்துப்பார்க்கையில் அறியக்கூடும். அதுபோலவே ககரம், தகரம், பகரம் ஆகியன ர, ல, ன என்ற எழுத்தினங்களின் முன் வரும் போது, அவ்வல்லினங்களிலுள்ள அகரமும் அனட என்ற ஆங்கிலச் சொல்லில் அ என்ற எழுத்தின் தொனிபோல ஒலிப்பதையும் அவதானிக்கலாம்.

இந்த ஒலி வேறுபாடு ஆங்காங்கு மட்டுமே காணப்படுவதால் அதனை ஒரு பொது விதியாகக் கொள்வது சாலாது போலும்.

தமிழ் எழுத்துக்களின் ஒலிவடிவத்தைச் செவ்வனே சொல்லி வைக்க இலக்கண ஆசிரியர்களுக்கு முடியாமற் போனமையால், எழுத்துக்களின் ஒலி இடத்துக்கிடமும், காலத்துக்குக் காலமும் வேறுபட்டியங்குதல் தவிர்க்கமுடியாத தொன்றாகி விட்டது என்றே கொள்ளவேண்டியிருக்கிறது.

# இலக்கிய ஆய்வுகள்
## புற நானூற்றிற் சில அகத்திணைப் பாடல்கள்

புறநானூறு என்ற சங்க இலக்கியத் தொகை நூல், புறத்திணைப் பாடல்கள் நானூறு கொண்டதாகத் தொகுக்கப்பட்டுள்ளதென்பர். புறத்திணை என்பது அகத்திணைக்குப் புறம்பானதாகும். அகம்பற்றி விளக்குகையில், 'ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் தம்முட் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்' என்பர் நச்சினார்க்கினியர். அது 'கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய் எழுதிணை' களை உடையதென்பர் தொல்காப்பியனார். புறம் பற்றி விளக்குகையில், 'ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்கும் துய்த்துணரப் படுதலானும், இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும், அவை புறமெனப்படும். இன்பமேயன்றித் துன்பமும் அகத்தே நிகழுமாலெனின், அதுவுங் காமங் கண்ணிற்றேல் இன்பத்துள் அடங்கும். ஒழிந்த துன்பம் புறத்தார்க்குப் புலனாகாமை மறைக்கப்படாமையிற் புறத்திணைப் பாலதாம்' என்றார் நச்சினார்க்கினியர். காம நிலை யின்மையான் வருந்துன்பம் தாபத நிலை தபுதார நிலை, என வோரும்' என்பர் அவர்.

புறமாவது வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என எழுதிணைகளை யுடையதென்பர் தொல்காப்பியனார். அதில் ஒருவகைக் கைக்கிளையும் அடங்கும். 'கைக்கிளை யென்பது ஒருமருங்கு பற்றிய கேண்மை. இஃது ஏழாவதன் தொகை. எனவே ஒருதலைக்காமமா யிற்று என்பர் நச்சினார்க்கினியர். அதனால் இது அகத்திணைகளுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டது. புறத்திணையுள் வருங் கைக்கிளை 'கைக்கிளை வகையோ டுளப்படத் தொகை இ' என்ற நூற்பாப் பகுதியாற் பெறப்படும் அதன் உரையில் நச்சினார்க்கினியர், 'அகத்திணையிலுள்ள இருபாற்குங் கூறிய கைக்கிளையும், காமஞ் சாலா இளமையோள் வயிற் கைக்கிளையும், 'முன்னைய நான்கும்'[1] என்ற கைக்கிளையும் 'காமப் பகுதி'[2] என்ற கைக்கிளையும், களவியலுள் 'முன்னைய மூன்றும்'[3] என்ற கைக்கிளையும் போலாது, 'எஞ்ஞான்றும் பெண்பாலார் கூறுதலின்றி இடை நின்ற சான்றோ ராயினும் பிறராயினும் கூறுதற்கு உரித்தாய் முற்காலத்து ஒத்த அன்பினராகிக் கடை நிலைக் காலத்து ஒருவன் ஒருத்தியைத் துறந்ததனால் துறந்த பெண்பாற் கைக்கிளையாதலின் திரிபுடைத் தாயிற்று. இது முதனிலைக் காலத்துத் தான் குறித்தது முடித்துப் பின்னர் அவளை வருத்தஞ் செய்து இன்பமின்றி ஒழிதலான் ஒருதலைக்காமமாயிற்று' என்பர். இதனாற் புறத்திணையுள் வரும் கைக்கிளை அகத்திணையுள் வரும் கைக்கிளை போலல்லாது, 'கடைநிலைக்காலத்து ஒருவன் ஒருத் தியைத் துறந்ததனால் வருந் துன்பத்தை இடை நின்றோர் கூறுவதாக அமைதல் வேண்டும் என்பது பெறப்படும்.

புறநானூற்றுத் தொகுதியில் உள்ள 83 ஆம் பாடலாய,

''அடிபுனை தொடுகழன் மையணற் காளைக்கென்
தொடிகழிந் திடுதல்யான் யாயஞ் சுவலே
அடுதோண் முயங்க லவைநா ணுவலே
என்போற் பெருவிதுப் புறுக வென்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்டவிம் மைய லூரே''

---

தொல் பொருள் 90
1. தொல் பொருள். 52

தொல் பொருள் 50
2. தொல் பொருள். 83

3. தொல். பொருள். 105

என்ற ஆசிரியப்பா, சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி முக்காவனாட்டு ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்றானைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியதாகவும், அதன் திணை கைக்கிளை, துறை பழிச்சுதல் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இப்பாடல் ஒரு தலைக் காமத்தை உணர்த்தி நிற்பதாற் கைக்கிளையாகிறது என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதே. ஆனால் மேற்காட்டிய இலக்கண விதியின்படி, புறத்திணையில் வரத்தக்க கைக்கிளையாக இது அமையவில்லை. எல்லாவகையாலும் இது அகத்திணைக் கைக்கிளை இலக்கணத்துக்கமைந்த செய்யுளாகவே காணப்படுகிறது. இப்பாடலிற் சுட்டி யொருவர் பெயர் எதுவுமில்லை. அதனால் இது பெருநற்கிள்ளியை நோக்கியே சொல்லப்பட்டது என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. அன்றியும் புறத்திணைக் குரித்தாய கொடை, வீரம்,நாடு, அரசு, ஆட்சி, வளம்... போன்ற எதுவும் குறிப்பாகக் கூடக் கூறப்படவில்லை. அதனால் இதனைப் புறத்திணைப்பாற்பட்ட கைக்கிளை எனல் எவ்வாறு பொருந்தும்.

தொல்காப்பியப் பொருளதிகார 83 ஆம் நூற்பாவாய 'காமப் பகுதி கடவுளும் வரையார்' என்பதன் உரையில், மேற் குறித்த புறநானூற்றுப்பாடலை உதாரணங்காட்டி, இது பெருங்கோழி நாய்கன் மகள் ஒருத்தி ஒத்த அன்பினாற் காம முருதவழியுங் குணச்சிறப்பின்றித் தானே காமமுற்றுக் கூறியது, இதனானடக்குக என்பர் நச்சினார்க்கினியர். குணச்சிறப்பின்றித் தானே காமமுற்றுப் பெண்ணொருத்தி கூறியதால் அது பெண்பாற் கைகிளையாகுமே தவிரப் புறத்திணைப் பொருள் எதுவுமின்றி அது புறத்திணைப் பாடலாதல் எங்ஙனம்? இந்த இடத்தில் நச்சினார்க்கியர் கூறும் சமாதானம் ஏற்புடையதாகத் தெரியவில்லை. ஏனெனில் 'கைக்கிளை வகையோடுளப்படத் தொகை இ' என்ற சூத்திரத்துக்கு அவர் கூறும் உரையாக 'எஞ்ஞான்றும் பெண்பாலார் கூறுதலின்றி இடை நின்ற சான்றோராயினும் பிறராயினும் கூறுதற்கு உரித்தாய்....! என்பதனோடு அது முரண்படுவதால்

கைக்கிளைக்குப் பாவகை கூறுமிடத்துத் தொல்காப்பியனார்

'கைக்கிளை தானே வெண்பா வாகி
ஆசிரிய வியலான் முடியவும் பெறுமே'[1]

என்று கூறியதனால் கைக்கிளைப்பாடல் வெண்பா யாப்பினாற் தொடங்குதல் வேண்டும். என்பது தெரிகிறது. அன்றியும்,

'நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளோ
டொத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின'[2]

என்ற நூற்பா அதனை வலியுறுத்தும். 'கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்'[3] என்பதன் உரையிற் பேராசிரியர்,'என்னை, புற்கை யுண்டும் பெருந்தோளன்னே'[4] என்று ஆசிரியத்தான் நக்கண்ணையாரது புறநானூற்று மற்றொரு கைக்கிளைப் பாடலைச் சான்று காட்டிக் கைக்கிளைச் செய்யுள் மருட்பாவாலன்றிச் சிறுபான்மை ஆசிரியத்தானும் வரும் என்று ஆசிரியத்தால் வரும் கைக்கிளைப் பாடலுக்குச் சமாதானங் கூறினார். ஆனால் அதற்குத் தொல்காப்பியர் நூற்பா எதுவும் இடந்தரவில்லை. உரையிற்கோடலென்னும் உத்தியால் அது ஒரேவழி ஏற்கப்பட்டதே தவிர, இலக்கணத்தின்படி கைக்கிளை தனித்து ஆசிரியப்பாவான் வருதலில்லை. அதனாற் புறநானூற்று 83 ஆம் செய்யுள் புறத்திணைக் கைக்கிளைக் குரிய இலக்கண மெதுவும் பொருந்தியதா யமையவில்லை என்றே கொள்ள வேண்டும். ஆசிரியப்பாவால் அமைந்த தென்பதைத் தவிர, அது அகத்திணைக் கைக்கிளை இலக்கணத் துக்கமைவதால், 'அடிபுனை தொடுகழன் மையணற் காளைக் கென்' என்று தொடங்கும் புறநானூற்று 83 ஆம் செய்யுள் அகத்திணைக் கமைவான தெனக் கொள்வதே பொருத்தமுடையதாகும்.

---

*1. தொல்காப்பியச் செய்யுள் 119*
*2. தொல்காப்பியச் செய்யுள் 119*
*3. தொல்காப்பியச் செய்யுள் 160*
*4. புறநானூறு 84*

அதே போலவே சோழன் போர்வைக்கோப் பெரு நற்கிள்ளியை இதே நக்கண்ணையார் பாடியதாகக் கொள்ளப்படும் புறநானூற்று 85 ஆம் செய்யுளாய,

'என்னைக் கூரிஃ தன்மை யானும்
என்னைக்கு நாடிஃ தன்மை யானும்
ஆடா டென்ப வொருசா ரோரே
ஆடன் றென்ப வொருசா ரோரே
நல்ல பல்லோ ரிருநன் மொழியே
அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்
முழாவரைப் போந்தை பொருந்திநின்
றியான்கண் டனவை னாடா குதலே'

என்பதும் கைக்கிளைத் திணைக்குரியது என்றே குறிக்கப்பட்டுள்ளது. அது கருத்தளவில் அகத்திணைப்பாற்பட்ட கைக்கிளைச் செய்யுளாகவே அமைந்துள்ள தென்பது உண்மைதான். ஆனாற் புறத்திணைக்குரிய குறிப்பெதுவும் அதிலில்லை. அதில் வரும் மரப்பெயர் கூடப்போந்தை' (பனை) என்றே பொறிக்கப்பட்டுள்ளது. அது சோழனுக்குப் புகழாகக் கொள்ளத்தக்க தன்று. தலைவி சேர நாட்டவள் என்பதை அது குறித்தல் கூடுமே தவிர வேறில்லை. தலைவன் வேற்றூரவன், வேற்றுநாட்டவன் என்னும் பொருளே முதல் இரண்டு அடிகளாற் பெறப்படுகிறது. அதனால் இவ்வாசரியப் பாவும் சோழன் ஒருவனைக் குறித்ததென்றோ, புறத்திணைக் கைக்கிளை இலக்கணம் பொருந்திய தென்றோ கொள்ள முடியாதிருக்கிறது. எனவே இதுவும் புறநானூற்றுத் தொகுதிக்கு ஏற்புடையதாகக் கருத முடியாததொன்றென்றே கூற வேண்டியுள்ளது.

மேற்குறித்த புற நானூற்று 83 ஆம்,85 ஆம் பாடல்கள் இரண்டும் முறையே ஆறு அடிகளும் எட்டு அடிகளும் கொண்ட செய்யுள்களாக அமைந்துள்ளன. நாலு முதல் எட்டு அடிகள் கொண்ட அகத்திணைச் செய்யுள்கள் குறுந்தொகையிற் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, இவ்விரு அகத்திணைச் செய்யுள்களும் குறுந்தொகைத் தொகுதிக்கே பொருந்துவனவாகும்.

புறநானூற்றில் நக்கண்ணையார் பாடியதாகச் சொல்லப்பட்ட 84 ஆம் செய்யுளாய,

'என்னை புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே
யாமே, புறஞ்சிறை யிருந்தும் பொன்னன் னம்மே
போரெதிர்ந் தென்னை போர்க்களம் புகினே
கல்லென் பேரூர் விழவுடை யாங்கண்
ஏமுற்றுக் கழிந்த மள்ளர்க்
குமணர் வெரூஉந் துறையன் னன்னே'

என்பதிலும் தலைவன் பேரோ, ஊரோ கூறப்படவில்லை. ஆனால், தலைவனின் வீரம், போர்த்திறன் ஆகியன தெரிவிக்கப்பட்டுள்ளன. அதனால் இச் செய்யுளிற் புறத்திணைப் பொருள் செறிந்திருக்கிறதெனக் கொள்ளலாம். இதன் துறை கைக்கிளை என்று குறிக்கப்பட்டுள்ளமைக்கு, 'யாமே, புறஞ்சிறை யிருந்தும் பொன்னன் னம்மே' என்ற அடியே காரண மாகலாம் எனினும், இச்செய்யுள் கைக்கிளைக்குரிய பாவகை கொண்டதாயில்லை யென்பதாலும், புறத்திணைக் கைக்கிளை இலக்கணத்துக் கமைவு பெறாமையாலும் இச்செய்யுள் கைக்கிளைத் திணை கொண்ட புறத்திணைப் பாடலெனக் கொள்ள முடியாமலிருக்கிறது. ஆயின், இது கைக்கிளைத் திணை கொண்டது என்று கொள்ளாதவிடத்துப் புறநானூற்றுத் தொகுதியில் இடம் பெறத் தக்கதே. எனவே இதனைக் கைக்கிளைத் திணைப் பாடலெனக் கொண்டதே தவறாகத் தெரிகிறது. இப்பாடல் பாடாண்திணைக்குரிய தெனக் கொள்வதே அது புறநாநூற்றுத் தொகுதிக்குப் பொருத்தமுடையதெனக் காட்ட ஏற்ற உபாயமாகும்.

# அரிச்சுவடி அமைப்பில் ஆன்மஞான வைப்பு

அரிச்சுவடி என்பது, அரியின் சுவட்டை உடையது எனப் பொருள்படும். அரி என்பது காக்கும் இறைவனை - இறைவனின் பண்பைக் குறிக்கும். எனவே, அரிச்சுவடி என்ற பதம் இறைவனின் சுவட்டை உடையதாக அமைக்கப்பட்ட ஒன்று என்ற பொருளைக் காட்டி நிற்கும். அந்தச் சுவட்டின் வழியே சென்றால், இறைவனை அறியலாம் என்பது ஆன்றோர் கருத்தாகும். அரிச்சுவடி கற்றால் இறை இலக்கியங்களையும், ஆன்மஞான நூல்களையும் கற்று ஈடேற்றம் பெற வழி காணலாம் என்ற பொருள் அரிச்சுவடி என்ற பதத்தில் அடங்கியுள்ளது. அன்றியும் அரிச்சுவடி அமைப்பிலே அந்தத் தத்துவத்தைப் புகுத்தியிருப்பது ஆன்றோர் அறிவின் திறனை எடுத்துக்காட்டுவதாகும்.

உயிர் எழுத்தும், மெய்யெழுத்துமென வகுத்து, உயிரும் மெய்யும் ஒன்று சேருகிற இடத்திலேயே இயக்கம் ஏற்படுகிறது என்றும், உயிர் தனித்து இயங்கினாலும், மெய் தனித்து இயங்குவதில்லை என்றும், உயிரின் முன்னேற்றம் உடலின் சேர்க்கையினால் விருத்தியாகிறது என்றும், மெய் நீங்கியவிடத்தும் உயிரின் இயக்கம் நீங்குவ தில்லையென்றும், உயிரே ஆய்தம் என்ற இறைவனை நோக்கிச் சென்றுகொண்டிருக்றது என்றும் தமிழ் மக்கள் கொண்டிருந்த ஆன்ம தத்துவத்தை அரிச்சுவடி அமைப்பிலே அடக்கி வைத்திருக்கிறார்கள். அகர முதல எழுத்தெல்லாம் என்பது, எழுத்தெல்லாம் என்பது, எழுத்துக்கள் எல்லாவற்றுக்கும் அகரம் முன்னாக உள்ளது என்பது மட்டுமன்றி, அகரமே எழுத்துக்களின் முதலாக - மூலமாக உள்ளது என்பதும் பொருளாகும். ஆதிபகவன் உலகுக்கு மூலப் பொருளாயிருத்தல் போல, அகரமே எழுத்துக்களின் உயிர். எல்லா எழுத்துக்களிலும் அகர ஒலி செறிந்திருக்கிறது. அகர உயிரே எழுத்துக்களுக்கு இயக்கத்தைக் கொடுக்கிறது. அந்த அகர உயிர் ஒலியாகும். ஆ! என்ற வியப்பொலி ஆசையால் ஏற்படும் ஒன்று தானே! அந்த ஆசை நிலையில் உயிர் இன்பத்தை நாடுகிறது என்ற தத்துவத்தை இகர ஒலிகுறித்து நிற்கும். இன்பத்தின் விருத்தி நிலையை ஈகார ஒலி காட்டும். இன்பத்தை நாடி நிற்கும் பற்றுள்ள உயிரைத் துன்பம் வந்து உறுத்துவதுமுண்டு என்ற உலகியல் உண்மையை அறிவுறுத்தி நிற்பது உகர ஒலியாகும். இ, ஈ என்பன இன்பத்தைக் குறிக்கும் சிரிப்பொலி போல, உ, ஊ என்பன நோவை அல்லது துன்பத்தைக் குறிக்கும் ஒலிகளாம். ஊகார ஒலி மிக்கக் குறிப்பதாகும். ஆசை அண்மிய நிலையிலே நின்ற உயிர், இன்பத்தை நாடி ஏகும் போது, துன்பம் வந்து சேர்ந்ததும் என்ன காரணத்தால் இன்ப நிலையிலே துன்பம் வந்து சூழ்கிறது என எண்ணத் தொடங்குகிறது என்ற தத்துவத்தை குறிப்பது எகர ஒலியாகும். ஏகாரம், முதிர்ந்த விசார நிலையைக் குறித்து நிற்கும் ஒலி, எகர ஏகார ஒலிகள் வினாக்குறிப்பை உடையன என்பது தெளிவு. அடுத்துள்ள ஐகார ஒலி அகர இகர ஒலிகளின் இணைவேயாகும். விசார நிலையை அடைந்த உயிர் ஆசையின் அரவணைப்பை விட்டகன்றால், இன்ப நிலையோடு இணைந்திருக்கலாம். என்ற தத்துவத்தை விளக்குவது ஐகார ஒலியாகும். ஒ,ஓ என்பன தேற்றப் பொருளை உடையன. தத்துவ விசாரத்தினால் உயிருக்கு தெளிவு பிறக்கும் நிலையைக் குறிப்பன ஒ, ஓ என்ற ஒலிகளாம். ஓ என்பது தெளிவு நிலையின் முதிர்வைக் குறிக்கும். தேற்றம் பெற்ற உயிர் (அ), பற்றற்ற நிலையிலே துன்பத்துடன் (உ) இணைத்துத் துயருராதிருக்கலாம் என்ற உண்மையை விளக்க ஔகார ஒலி வகுக்கப்பட்டது. அ, உ என்ற ஒலிகளின் சேர்க்கையே ஔ என்ற ஒலியாகும். ஐகார ஔகார எழுத்துக்களின்றியே அவ்வொலிகளை பிறப்பிக்கத்தக்க வாய்ப்பிருந்தும், அவற்றை ஆக்கியதன் காரணம், அவை சுட்டும் தத்துவப் பொருளைக் காட்டுவதற்கே எனலாம்.

ஆசை அணைந்ததால் இன்ப துன்பங்களை அனுபவித்து இளைத்த உயிர், ஆசையினின்று நீங்கினால் இன்ப துன்பங்களினாற் பாதிக்கப்படாமல் அவற்றுடன் இணைந்து வாழலாம் என்று ஞானத்தைப் பெற்று இறைவனை அணுகிச் செல்லும் என்ற விளக்கத்தை ஊட்ட, உயிரின் முதிர்ச்சி நிலையைக் குறிக்கும் ஔகாரத்தை அடுத்து ஆய்தம் வைக்கப்பட்டுள்ளது. அந்த ஆய்தம் இறையின் தன்மையைக் குறிக்க, உயிருக்கும் மெய்யுக்கும் அப்பாற்பட்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அது உயிருமன்று, மெய்யுமன்று. இறைவனின் அருவுருவான வடிவத்தைக் குறிக்க அதற்குப்

புள்ளியுருவங் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியம் என்ற ஆதித் தமிழ் இலக்கண நூலில் எழுத்துக்களின் ஒலி வடிவங்கள் கூறிய தொல்காப்பியனார், ஆய்தம் ஒன்றினுக்கே ஒலிவடிவங் கூறாது வரிவடிவங் கூறியிருக்கிறார். 'ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி' என்று அவர் கூறுவதிலிருந்து, அது ஒலி வடிவு காட்டி உணர்த்த முடியாததொன்று என்று தெரிகிறது. படைத்தல், காத்தல், மறைத்தல் ஆகிய முத்தொழில் கொண்ட ஒரு பொருள் இறை என்ற உண்மையை விளக்க முப்பாற் புள்ளி உருக்கொண்ட ஓரெழுத்தாய் அதனை அமைத்திருக்கிறார்கள். அது ஆய்ந்துணர்ந்து அறியப்பட வேண்டிய ஒன்று. அதுவும் தம்முள்ளே தாம் ஆய்ந்து காணவேண்டிய ஒன்றாகும் என்ற தத்துவத்தைக் குறிக்கவே அதற்கு ஆய்தம் எனப் பெயரிட்டுள்ளனர். அது 'கடவுள்' என்ற சொல்லை ஒக்கும். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருள் என்றும், எல்லா வற்றிலும் உள் உறைந்து நிற்கும் பொருள் என்றும் கருத்தமையக் கடவுள் என்ற சொல் அமைந்திருத்தல் போலவே ஆய்தம் என்ற சொல்லும் அமைந் துள்ளது. உயிருக்கும் மெய்க்கும் புறம்பாகவும், அவற்றுக்கு அன்னியமாகவன்றியும், உயிரின் இன்ப துன்பம் அனுபவ முதிர்வில் ஞானத்தால் காணப்படத்தக்கதாகவும் அமைந்திருப்பதே இறைத்தத்துவம் காட்டி நிற்கும் ஆய்தம் என்ற எழுத்தாகும்.

'அ' என்ற ஒன்றே மூல உயிரைக் குறிக்கும் எழுத்தாக அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய உயிர் எழுத்துக்களென கூறப்படுவன, அம் மூல உயிரின் வெவ்வேறு வளர்ச்சி நிலைகளைக் குறிப்பன வாகும். உயிர் அனைத்தும் ஒன்றின் விரிவே என்ற தத்துவம் இதனாற் பெறப்படும். உயிரின் இலக்கு இறையினை அண்டுதல் என்பதையும், இறை பலவாகத் தோன்றினும் உண்மையில் ஒன்றே என்பதையும், ஆய்தம் அமைக்கப்பட்டிருக்கும் இடமும் முறையும் குறிப்பாகக் காட்டுவனவாம். உயிரின் விருத்தியினை தமிழ் எழுத்தமைப்பிற் காட்டிய முறை, தமிழ் மக்கள் கொண்டிருந்த ஆன்ம ஞானக் கருத்தினை ஒட்டியதாக இருப்பதனைக் கண்டு வியப்பெய்தலாம்.

தமிழ் மெய்யெழுத்துக்களின் அமைப்பு முறையிலும் இதனையொத்த தத்துவ நெறி விளங்கக் காணலாம். க், ச், ட், த், ப் என்ற ஐந்து வல்லெழுத்துக்களையடுத்து ங், ஞ், ண், ந், ம் என்ற ஐந்து மெல்லெழுத்துக்களை முறையே சேர்த்தும், அவற்றின் பின் ய், ர், ல், வ், ழ் என்ற ஐந்து இடையெழுத் துக்களைப் புறம்பாக அமைத்தும் காட்டியிருத்தல் உலகியல் ஞானத்தை ஒட்டியதாகும். குறித்த வல்லெழுத்தைந்தும் ஆணினத்தைக் குறிப்பனவாகவும், அவற்றின் இனமாய மெல்லெழுத் தைந்தும் மெல்லியர் இனத்தைக் குறிப்பனவாயும், இடையெழுத்தைந்தும் ஆணும் பெண்ணுமற்று அவ்விருபாற்கும் இடையாய அலியினத்தைக் குறிப்பானவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மக்களுக்காகவே எழுத்தாகையால் உலகிலுள்ள முப்பாலின மக்களைக் குறிக்கும் பகுப்பினை மெய்யெழுத்துக்களின் அமைப்பிலே காட்டியிருக்கிறார்கள். ஆணும் பெண்ணும் இணையும் இனமாகையால் மெல்லெழுத்தைந்தையும் அவற்றின் இனமாய வல்லெழுத்தைந்தின் அயலே முறையாக அமைத்தும், அலியினம் அவற்றுடன் இணையாததாகையால் அதனைச் சுட்டும் இடையினத்தை வேறாக அமைத்தும் உலகியல் நெறி புலப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இனத்திலும் முதலில் ஐந்தைந்து எழுத்துக்களை அடுக்கி, இறுதியில் இனத்துக்கு ஒன்றாத ள், ற், ன் என்ற எழுத்துக்களை அமைத்திருக்கும் முறையும், பழந்தமிழ் மக்கள் கொண்டிருந்த தத்துவ ஞானக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதேயாகும். மக்கள் மெய் பஞ்சபூதங்களின் சேர்க்கையாலாகிப் புலப்படத்தக்க ஐந்து புலன் உறுப்புக்களைக் கொண்டுள்ளது என்ற தத்துவத்தை ஒட்டி ஒவ்வொரு இனத்திலும் ஐந்து எழுத்துக்கள் வகுக்கப்பட்டுள்ளன. தெற்றெனப் புலப்படாது, ஓர்ந்துரை வேண்டிய ஆறாவது அறிவாய பகுத்தறிவுக்குக் காரணமான மனம் (புத்தி), ஆண், பெண், அலியாய ஒவ்வொரு இனத்துக்குமுண்டு என்பதைக் குறிக்க, 'ள்' என்ற ஆறாவது இடையின எழுத்தையும், 'ற்' என்ற ஆறாவது வல்லின எழுத்தையும், 'ன்' என்ற ஆறாவது மெல்லின எழுத்தையும் இறுதியில் சேர்த்திருக்கிறார்கள். எனவே ஆறாவது அறிவு ஒன்று மக்களுக்கு உண்டு என்பதும், அது அவர்களுக்குள்ள ஐயறிவுக்கு அப்பாற்பட்டதென்பதும், அது ஐயறிவின் வெளிப்பாட்டின் இறுதியிலே தோன்றுவதென்பது ம், ள், ற், ன் என்ற

மெய்யெழுத்துக்களின் அமைப்பிலுள்ள தத்துவப் பொருளாம். இத்தகைய மெய்கள் மீது உயிர் ஏறி ஆசை பற்ற, இன்பம், உபத்திரவம், என் எனும் விசாரம் ஆகிய நிலைகளையடைந்து ஐ எனும் ஆசையினகன்ற இன்ப இணைவு, ஒ எனும் தனிப்பொருளை அடையும் என்ற தத்துவம் உயிர்மெய் எழுத்துக்களின் அமைப்பிலே பொதிந்து கிடப்பதை உணரலாம். அதனாலேதான் உயிர்மெய் எழுத்துக்களின் வரிசைகளிலே ஆய்தம் இணைக்கப்படவில்லை. அன்றேல், கெஃ,நுஃ,சஃ--- என்ற எழுத்துக்களை அடுத்துகஃ,ஙஃ, சஃ---என்று அமைந்திருக்க வேண்டுமல்லவா?

ந், ர், ழ் என்ற ஒலிகள் முன்னரேயிருக்க, அவற்றை ஓரளவு ஒத்த ள், ற், ன் என்ற ஒலி பெற்ற எழுத்துக்களை அரிச்சுவடியின் இறுதியிலே சேர்த்தமைக்கு மற்றோர் காரணமுண்டு. ஒவ்வோர் இனத்திலும் ஆறாவது அறிவைக் குறிக்கும் ள், ற், ன் என்ற எழுத்துக்கள் அவ்வவ் இனங்களின் ஐயறிவைக் குறிக்கும் மெய்யெழுத்துக்களுக்குப் புறம்பாக அமைந்திருப்பினும் ஒலியில் ஓரளவு ஒற்றுமை காட்டி நிற்றல், மக்களது ஆறாவது அறிவு அவரது ஐயறிவுக்கு முற்றிலும் அப்பாற் பட்டதுமன்று என்பதைக் காட்டுவதாகும். மெய்யெழுத்துக்களை முதலில் ஐந்தைந்தாக வகுத்தி ருப்பதற்கு மற்றோர் காரணம், மக்கள் மெய் முக்கியமாக ஐந்து பூதங்களையும், ஐந்து பொறிக ளையும், ஐந்து புலன்களையும் கொண்ட சேர்க்கையே என்பதை உணர்த்துவதற்காகுமெனலாம். மக்கள் உடலையும் உயிரையும் அடிப்படையாகக் கொண்டெழுந்ததே தமிழ் மக்கள் கொண்ட சமய தத்துவக் கோட்பாடாகும். தமிழ் நாட்டிலெழுந்த கோயில் அமைப்பு முறையும் அக்கொள்கையை ஒட்டியே மனித உடல் வடிவத்தில் ஆக்கப்பட்டுள்ளதாகும். கோபுர வாயில் பாதமாகவும், கொடித் தம்பம் பாற்குறியாகவும், பலிபீடம் வயிறாகவும், நந்தி ஆன்மாவாகவும் மகாமண்டபம் மார்பாகவும், அர்த்த மண்டபம் கழுத்தாகவும் ஆதிமூலம் தலையாகவும், இருவீதிகள் கரங்களா கவும் அமைந்த ஆலயத்திலே, இறைவனை ஆதிமூலமாய தலைத்தானத்திலிருத்தல், உடல்தோறும் இறைவன் சித்தாக உள்ளான் என்ற தத்துவத்தை விளக்குவதாகும். தமிழ் எழுத்தமைப்பிலும் இத் தத்துவத்தை விளக்குவதற்காகவே, இறையம்சமுற்ற உயிர் மெய்தோறுமேறி உயிர் மெய்யாய் விளங்குவதாய் காட்டியிருக்கிறார்கள்.

தமிழ்மக்கள் கொண்டிருந்த சித்தாந்த சமய சாரத்தினை அவர்கள் வகுத்த எழுத்தமைப்பிலே புகுத்தி மறைபொருளாக வைத்திருப்பது, அவர்களது சமயக்கிரியை முறைகளுக்கு இணைந்த தாகவே அமைந்திருக்கிறது. ஆதிதொட்டே தமிழர் சமுதாயத்திலிருந்து வந்த இலிங்க அமைப்பு, முருக தத்துவம், நடராசவடிவம், திருநீறு, நிறைகுடம் போன்றவை ஆழ்ந்த கருத்தினை உள்ள டக்கி, விசாரத்தினாலன்றி வெளிப்படுத்தாதன போலவே தமிழ் அரிச்சுவடி அமைப்பும் அமைந்தி ருக்கிறது. அருவுருவான இறைவனை வடிவும் வடிவுமற்றதுமான இலிங்க அமைப்பிற் காட்டி யுள்ளவாறு, அப்பரம் பொருளை அரிச்சுவடியிலே வடிவும் வடிவுமற்றதுமான முப்பொருளின் கூட்டான தனிப்பொருளாய் காட்டப்பட்டுள்ளது. அது உயிராகவும் மெய்யாகவும் வெளிப்படாது மறைபொருளாயிருக்கும் இலிங்கத்தின் ஆவுடையார் உட்புதைந்த மறுபாதியை ஒக்கும். அப்பாதி யிலே நாம் ஆய்ந்துணர்ந்து அறிய வேண்டிய ஆய்தம் ஆய பொருளாம். புலப்படத் தோன்றும் இலிங்கத்தின் மேற்பகுதியே உயிராகவும் மெய்யாகவும் இறையம்சத்தைக் குறிப்பதாயுள்ளது. அப் பகுதியே அரிச்சுவடியில் உயிர் எழுத்தாகவும், மெய்யெழுத்தாகவும், உயிர்மெய்யெழுத்தாகவும் மலர்ந்திருக்கிறது. அது இம்மைக்குரியது, ஆய்தம் குறிக்கும் பக்தி மறுமைக்குரியது.

அண்ட சராசரமனைத்தும் அணுக்களின் ஈட்டத்தினால் ஆனவையே. அணு ஒவ்வொன்றும் நியூற்றொன் (Newtron) களின் ஈடாகும். நியூற்றொன் ஒவ்வொன்றும் புறோற்றன் (Proton), இலெக்றொன் (Electron) ஆகியவற்றின் சேர்க்கையாம். எனவே நியூற்றொன்,புறோற்றொன், இலக்றொன் ஆகியவற்றின் தொகுப்பே அண்டசராசரத்து ஆதி அணு எனலாம். அந்த ஆதி அணு வைக்குறிக்கும் அடையாளமே ஆய்தம(ஃ) என்ற முப்பாற்புள்ளி வடிவாம். ஒரு நியூற்றொனில், புறோற்றொனானது இலிங்க வடிவில் மேல்கீழாக இயங்கிக் கொண்டிருக்கும். இலெக்றொனானது இலிங்கத்தை தாங்கி நிற்கும் ஆவுடையாரின் வட்ட வடிவத்தில் புறோற்றனைச் சுற்றி வந்து கொண

டிருக்கும். எனவே ஆதித் தமிழ் மக்கள் வகுத்து வணங்கிவந்த இலிங்க வடிவமானது, அண்டத்து மூல அணுவைக்குறிக்கும் அமைப்பெனலாம். அந்த மூல அணுவின் விரிவே அண்ட சராசரமாம்.

பழந்தமிழ் மக்களின் பரம்பரைத் தெய்வமாய முருகன் வழிபாட்டில் மலர்ந்த கந்தன் கதையிலும் இவ்வாறே பெருந்தத்துவப் பொருள் புதைந்திருக்கக் காணலாம். அங்கு முருகன் பரமாத்மாவைக் குறித்து நிற்க, வள்ளி சீவாத்மாவைக் குறித்து நிற்கும். சீவாத்மா ஐம்புல வேடரின் அவத்தையில் நீங்கி, அகங்காரமாகிய சூரனை ஒழிக்க வல்ல பரமாத்மாவை அடைய ஆற்றும் முயற்சியே கந்தபுராணக் கதையாம். அரிச்சுவடியிலே அகரம் சீவாத்மா-வள்ளி, ஆய்தம் பரமாத்மா- முருகன். உயிர் மெய்யிலேறி உலக அனுபவங்களைப் பெறுதலே உயிர்மெய் எழுத்துக்களின் குறிப்பு.

அனுபவ முதிர்வில், மெய்யும் பொய்யாமென உணர்ந்து, மெய்யை விட்டகன்று உயிரானது எய்த முயலும் நிரந்தர மெய்ப்பதமே ஆய்தம். உடல் நிரந்தரமற்ற பொய்யான மெய், மெய்போலத் தற்காலிகமாக மெய்ஞானம் மலரும் வரை தோன்றுவது. அதனாலேதான் மெய்யெழுத்துக்கு ஒரு புள்ளி. நிரந்தர மெய்யான பரமாத்மாவாய ஆய்தத்துக்கு மூன்று புள்ளி. பொய்யாகும் உடலும் மெய்யின் இயல்பைக் காட்டி நிற்பதால் மெய் யெனப்பட்டது. உண்மை ஞானம் உதயமாகும்போது, ஒரு புள்ளியோடு அமைவது உண்மையான மெய்யென்றும். முப்பாற்புள்ளி பெற்ற பரமாத்மாவே நிரந்தர மெய்யெனும் தெளிவு பிறக்கும். உடலிலும் பரமாத்மாவின் அம்சம் ஓரளவுண்டு என்பதைக் குறிப்பதற்காகவே, ஆய்தத்திற்குரிய முப்பாற்புள்ளிகளில் ஒரு புள்ளி மெய்யெழுத்துக்கு அளிக்கப்பட்டது. பழந்தமிழ் எழுத்துக்களில் எகரமும், ஒகரமும் புள்ளிபெற்றிருந்தன எனத் தொல்காப்பியம் கூறும். உயிரானது விசார நிலையை எய்தும் போது, அதனைத் தெய்வாம்சம் கூடுகிறது என்பது அதன் குறிப்பாகும். உயிரானது மெய்யிலேறி மெய்யெழுத்துக்குரிய புள்ளி மறைந்து விடுகிறது. அது உயிர் உடலிலே சேர்ந்து வரும் போது, அவ்வுடலிலுள்ள தெய்வாம்சம் வெளிப்படையாக இல்லாது மறைபொருளாகி விடுகிறது என்பதைக் காட்டி நிற்கும். உயிர் உடல்மேல் செறியும் போது, உயிரம்சம் கரந்தும் மெய்யம்சம் பரந்தும் தோன்றுவதையொத்து, உயிரெழுத்து மெய்யெழுத்திலேறிவரும் போது மெய்யெழுத்தின் பகுதி மிகுந்தும் உயிர் எழுத்தின் பகுதி சுருங்கியும் அமைவதை அவதானிக்கலாம். அது வெளிப்படையாக மெய்போலத் தோன்றும் உடல் என்பதையும், அனுமானத்தாலன்றிக் கண்டு தெளிய முடியாதிருப்பது உயிர் என்பதையும் விளக்குவதாம். அதனாலேதான் உடலை மெய்யென்று கூறும் வழக்கமும் ஏற்பட்டிருக்கலாம்.

தமிழ்ச் சான்றோர் வகுத்த தாண்டவக் கோன் (நடராச) வடிவ அமைப்பிலும் இதனையொத்த தத்துவப் பொருள் பொதிந்து கிடக்கக் காணலாம். அப்பொருளின் பஞ்ச கிருத்தியங்களை உருவகித்துக் காட்டும் அவ்வடிவில், ஊன்றியகால் மாயாசக்தியாகவும், தூக்கியகால் அருட்சக்தி யாகவும் உணர்ந்து, ஆன்ம ஞானமடைய மாயாசக்திக்கால் தூக்கப்பட்டு (மாயையகன்று), அருட்சக்திக்கால் (தெய்வ அருள்) சீவாத்மாமீது பதியத்தக்கதாக கால்மாறி ஆடும் நடனங் காண முயலும் முயலகன் தவிப்பு, சீவாத்மா பரமாத்மாவை நாடியேகும் முயற்சியைச் சித்தரித்துக் காட்டுவதாகும். அதே கருத்து அரிச்சுவடி அமைப்பிலும் காட்டப்பட்டுள்ளது. அகரம் சீவாத்மா, ஆய்தம் பரமாத்மா. அந்தச் சீவாத்மா ஆய்தமாகிய பரமாத்மாவையடைய முயன்று பெறும் அனுபவங்களே உயிர்மெய் வடிவங்கள்.

பசுவின் கரிய மலத்தினை அக்கினியினால் சுட்டு வெண்ணீறாக்கிய திருநீறு, ஆன்மாவாகிய பசுவின் ஆணவம், கன்மம், மாயையாகிய மலங்களைத் திருவருள் ஞான அக்கினியினால் சுட்டு நீறாக்க வேண்டுமென்ற உட்கருத்தினை மக்களுக்குத் தினமும் அறிவுறுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக அணிந்து கொள்ளும் தத்துவத்தின் உட்கிடந்தை அரிச்சுவடி அமைப்பிலு முண்டு. அதில் அகரம் பசுவாகிய ஆன்மாவாகவும், ஆய்தம் திருவருட் பிளம்பாகவும், வல்லினம், மெல்லினம், இடையினமாக வகுக்கப்பட்ட மெய்யெழுத்துக்கள் ஆணவம், கன்மம், மாயையா கிய மும்மலங்களாகவும், உயிர்மெய்யெழுத்துக்கள் ஆன்மாவாகிய பசு ஆணவம், கன்மம், மாயையை மும்மலங்கள் வசப்பட்டுப் பெறும் உலகியல் அனுபவமாகவும் அமையும்.

குடம் உடலாகவும், தேங்காய் தலையாகவும், ஐந்து மாவிலே ஐம்பொறிகளாகவும், குடத்தக நீர் உடலுறை உயிராகவும், குடத்தைச் சுற்றிக் கட்டப்படும் நூல்பந்த பாசமாகவுங் கருதி, மனித உடலமைப்பில் ஆக்கப்படும் கும்பத்து நீரைப் பலவித பூசையின் பின் இறையுரு மீது சேர்த்து, உயிரானது உலக அனுபவங்களிலே தேறி ஆன்ம அனுபவம் பெற்று இறையோடு கலக்கும் என்ற உண்மையை கும்பாபிஷேக வைபவத்திற் பாவனை செய்து காட்டும் முறைக்கும், அகரம் உயிராகவும், மெய்யெழுத்துக்கள் ஐம்பொறியும் அறிவுங் கொண்ட உடலாகவும், உயிர்மெய் யெழுத்துக்கள் பந்தபாசங்களாகவும், ஆய்தம் இறையாகவுங் கருதிச் செய்யப்பட்ட அரிச்சுவடி அமைப்பு முறைக்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமையை உற்று நோக்கி உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாறே பண்டைத் தமிழர் மேற்கொண்டிருந்த சமயக் கிரியை முறைகள் பலவற்றுக்கும், அவர்கள் வகுத்த அரிச்சுவடி அமைப்புக்கும் நெருங்கிய தொடர்பும் ஒற்றுமையும் இருப்பதைக் காணலாம். உண்மையில் அவர்கள் கொண்டிருந்த சமய ஞானக் கருத்தினை உள்ளடக்கியே அரிச்சுவடி எழுத்து முறையை வகுத்துக் கற்போருக்கு ஆத்ம ஞான தத்துவத்தைக் குறிப்பாக உணர்த்த முயன்றிருக்கிறார்கள். உயர்ந்த தத்துவ ஞானக் கொள்கைகளை மறைபொருளாக உரைப்பதே ஆன்றோர் மரபாகும். அதற்கிணையவே அரிச்சுவடி அமைப்பில் ஆத்ம ஞான வைப்புச் சூக்குமமாக இடம் பெற்றிருக்கிறது. தமிழ் எழுத்துக்கள் இறை தத்துவத்தை உணர்த்துவ னவாகையாற்றான், 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்ற வாய்மொழியெழ ஏதுவாயிற்றெ னலாம்.

இதே ஆத்ம ஞான தத்துவம் வடமொழி எழுத்துக்கும் இயைவதோ எனில், இல்லையென்றே சொல்ல வேண்டும். வடமொழியிலே உயிரெழுத்திலும் மெய்யெழுத்திலும் எழுத்துக்கள் தமிழ் மொழியை விடப்பல மேலதிகமாய் இருந்தாலும், உயிர் எழுத்துக்களிற் சில குறிலற்றனவாயிருந் தாலும், ஆய்தம் என்றொன்றில்லை யாதலாலும்,அதற்குச் சமனான விசர்க்கத்தின் வடிவு முப்பாற் புள்ளியில்லாது இருபாற் புள்ளியாயிருத்தலாலும், விசர்க்கத்துக்குரிய புள்ளி மெய்யெழுத்துக்கில் லாததாலும், தமிழ் அரிச்சுவடி அமைப்புக் காட்டும் ஆத்ம ஞான தத்துவம் வடமொழி எழுத்தாக்கத் துக்கு அமையாதென்று திடமாகக் கூறலாம். வடமொழி எழுத்தமைப்பு ஆரியரின் தனியாக்கமா அல்லது பிறிதொன்றைத் தழுவிச் செய்யப்பட்டதொன்றா என்ற சந்தேகத்தை அதன் பெயராய 'சமஸ்கிருதம்' (சம்-நான்குஸ்கிருதம்-செய்யப்பட்டது) என்ற சொல்லே தூண்டி நிற்கிறது, வட மொழி எழுத்தமைப்பு ஆரியரின் தனியாக்கமென்றால், அவர்கள் வாழ்ந்த புகுந்த பிரதேசங்களி லெல்லாம் ஆரியரின் சொந்தபந்தங்கள் செறிந்திருத்தல் போல வடமொழி எழுத்தமைப்பும் பரந்திருக்க வேண்டும். அவ்வாறன்றி வடமொழியாகிய சமஸ்கிருதம் இந்திய கண்டத்துக்கே உரியதாகையால், அதன் எழுத்தமைப்பும் ஆரியர் வருகைக்கு முன் இந்திய தேசத்திருந்த பிறமொழி எழுத்தமைப்பை ஒட்டியே ஆக்கப்பட்டிருக்க வேண்டும். அன்றியும் சமஸ்கிருத எழுத்தின் பெயர் தேவநாகரி என்றிருத்தலால் அது ஆதியில் இந்திய கண்டத்துப் பரந்திருந்த நாகரின் மொழி எழுத்துக்களைத் தழுவிச் செய்யப்பட்டுத் 'தேவ' என்ற அடையிட்டு நாகர் மொழி எழுத்திலிருந்து பிரித்தறியப்பட்ட தாகத் தோன்றுகிறது. ஆரியர் இந்திய கண்டத்துட் புகுமுன், வட இலங்கை முதல் நேபாளம் வரை வாழ்ந்தவர்கள் நாகர் குலத்தவர். ஆகையால் வடமொழி எழுத்த மைப்பு ஆரியரின் தனியாக்கம் எனல் பொருந்துவதாயில்லை. எனவே, தமிழ் மொழி எழுத்த மைப்புப் பிரதிபலிக்கும் ஆன்ம ஞான தத்துவம், வடநாட்டாருக்கன்றித் தமிழ் நாட்டாருக்கே முன்னுரிமை உடையதாகும்.

39

# வேதாந்தக் குயில்

சுப்பிரமணிய பாரதியின் தேசியப் பாடல்கள் அவனை ஜனரஞ்சகமான கவிஞனெனக் காட்டி நின்றாலும், அவனது இலக்கியநயச் செய்யுள்களும், தத்துவப் பொருட் பாடல்களுமே அவனைப் பெரும் புலவர் வரிசையிலே சேர்த்து வைக்க உதவுகின்றன. அத்தகைய பாடல்களுள், குயிற் பாட்டு ஒன்றைத் தவிர, ஏனைய அனைத்தும் வெளிப்படையான பொருளைக் காட்டி நிற்பனவாம். குயிற் பாட்டு ஒன்று மட்டும், உருவகக் கருத்துக் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கிறது. அப்பாட்டில் ஒரு குயிலுக்கும், குரங்குக்கும், மாட்டுக்கும், மனிதன் ஒருவனுக்குமிடையே நிகழ்ந்த காதற் சம்பவம் சித்தரிக்கப்படுகிறது. பாட்டின் இறுதியில், அதனை வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்குமாறு புலவன் வேண்டிக் கொள்கிறான். அதனால், அப்பாடல் தத்துவப் பொருள் கொண்டதாகச் செய்யப்பட்டிருக்கிறது என்று கருதவேண்டியிருக்கிறது. அன்றேல், குயிலொன்று குரங்கிலும், மாட்டிலும், மனிதனிலும் காதல் கொண்டு தவிப்பதாகச் சொல்லப்படுவதில் அர்த்தமில்லாமற் போய்விடும்.

இந்தப் பாட்டிற் கூறப்படும் குயிலைப் பாரதி செந்தமிழ்த் தென்புதுவை யென்னுந் திருநகரின் மேற்கே சிறு தொலையில் மேவுமொரு மாஞ்சோலையிலேதான் சந்திக்கிறான். அதனால், இப்பாடலைப் பாரதி தன் புதுவை வாசத்தின் போதோ அல்லது அதன் பின்னரோ தான் செய்திருக்க வேண்டுமென ஊகிக்கலாம். அவன் புதுவையிலே வாழ்ந்தது அவனது வாழ்க்கையின் பிற்பகுதியிலேதான். அந்தக் காலத்திலேயே பாரதிக்கு யாழ்ப்பாணத்து சுவாமி கோவிந்த சுவாமி ஆகிய துறவிகளின் தொடர்பு அங்கே ஏற்பட்டது. அதனால் அவனது பிற்காலக் கவிதைகள் தத்துவப் பொருள் கொண்டனவாக மலர்ந்தன. பாரதி அறுபத்தாறு என்ற பாடற் றொகுதியிலே புதுவை நகரிற் குள்ளச் சாமியை பாரதி சந்தித்த சம்பவம் சொல்லப்படுகிறது. எனவே, அப்பாடற் றொகுதியும் பாரதி புதுவை சார்ந்த பின்னரே எழுதப்பட்டவை என்று கொள்ளலாம். அதில், முன்னோர்கள் எவ்வுயிரும் கடவுள் என்றார், முடிவாக அவ்வுரையே நான் மேற் கொண்டேன் என்றும், அத்வைத நிலை கண்டால் மரணமுண்டோ என்றும் மானுடர்க்கே நலிவுமில்லை சாவுமில்லை என்றும் அதுவே நீ யென்பது முன் வேதவோத்தாம்....நீயும் அதுவன்றிப் பிறிதில்லை என்றும் பல வோதாந்தக் கொள்கைகளைப் பாரதி சொல்லி வைத்திருக்கிறான்.

இத்தகைய வேதாந்தக் கருத்துக்கள் தவிர்ந்த, வேறு தத்துவக் கருத்துக்களைக் கூறுவதற்காகவே குயிற் பாட்டைப் பாரதி எழுதியிருக்க வேண்டும். மேலே எடுத்துக் காட்டப்பட்டன போன்ற வாக்கியங்களோ கருத்துக்களோ குயிற் பாட்டில் வரவில்லை. அதில் வருவனவெல்லாம், குயில் தனது முற்பிறப்பில் வேடர்குலத் தலைவன் மகளாகப் பிறந்ததும், மாமன் மகனாக மாடன் அவளை மணக்க விரும்பியதும், மற்றொரு வேடர் கோன் தன் மகனாகிய குரங்கனுக்கு அவளை மணம் பேசிவர அவள் தந்தை அதற்கு உடன்பட்டதும், அதுகேட்டு மாடன் சினக்க, குரங்கனை மணமுடித்து வைத்தாலும், மீண்டும் எப்படியோ மாடனிடம் விரைவில் வந்து சேர்ந்து விடவே அவள் கூறியதும், பின்னர் அவள் தோழியருடன் காட்டில் விளையாடி நிற்கையில் வேட்டைக்கென வந்த சேரமன்னன் மைந்தன் அவளைத் தனிமையிலே கண்டு காதல் கொண்டு கூடியதும், அவளை வீட்டுப் புறத்திற் காணாது மாடனும் குரங்கனும் தனித்தனியே தேடிச் சென்று அவள் சேரன் மகனோடு கூடி நிற்கும் காட்சி கண்டு இருவரும் சினந்து அம்மன்னன் மகளைத் தாக்க அவன் அவ்விருவரையும் வெட்டி வீழ்த்தி விட்டு அடுத்த பிறப்பிலும் அவளையே காமுறுவன் எனக் கூறி அவள் முன் உயிர் துறந்ததும், பின்னர் இப்பிறப்பில் அவள் விந்தகிரிச் சார்பினிலோர் வேடனுக்குக் கன்னியெனப் பிறந் ததும், கர்ம வசத்தினால் மாடன் குரங்கனிருவருமே வன்பேயாய்க் காடுமலை சுற்றித்திரிவதும், அவள் பழமைபோல் மன்னனையே சேர்வாளென்று எண்ணிமாயத்தால்

அவளைக் குயிலாக்கி அது செல்லும் திக்கிலெல்லாம் சுற்றிவருவதும் அதன் பிறப்பை மறப்புறுத்தி வாதைப்படுத்தி விடுவதும், குயில் அக் காதலனை ஐயமுறச் செய்வதும், குயிலின் விடாப்பிடியான வேண்டுதலினால் அதன் காதலன் அதனை அணைய அக் குயில் தனது காதலனைச் சேர நேர்கையிலே பேயிரண்டும் முழுமாயச் செய்கை பல செய்து உருவம் மாறிப் பெண் உருவம் கொண்டு தன் காதலனைக் கூடி மகிழ்ந்ததும் பற்றிய சம்பவங்களே.

குயில் தனது இரு பிறப்பிலும், வேடர் குல மத்தியிலே கன்னியாகப் பிறந்து வாழ்ந்து வந்ததாகக் காட்டப்படுகிறது. கந்த புராணக் கதையிலே வேடர் மத்தியில் வாழந்த வள்ளியைக் கந்தன் ஆட்கொண்ட சம்பவத்தின் தத்துவத்தை விளக்குகையில், புலன்களாய வேடர் மத்தியில் வாழும் ஆன்மா, தன் தலைவனை ஒரே முனைப்பாக நாடி நிற்கையில், இறைவன் அந்த ஆன் மாவை ஆட்கொள்ளுகிறான் என்ற கருத்தையே அறிஞர் வழங்குவர். அதே தத்துவக் கருத்தினை இவ்விடத்திலும் அமைக்கக் கூடியதாகவே பாரதி தன் குயிற் பாட்டினைச் செய்திருக்கிறான். வேடர் குலத்திடையே பிறந்த பெண் என்பது, புலன்கள் மத்தியிலே சிக்குண்ட ஆன்மாவாகவும் அப்பெண்ணின் மாமன் மகனான மாடன் என்பது, ஆன்மாவின் முன்னைய தொடர்புகளால் ஏற்பட்ட கர்மவினை எனவும், புதிதாகப் பேசி மணமுடிக்க வந்த குரங்கன் என்பது, இப்பிறப்பிலே தேடிக்கொண்ட வினை எனவும், சேர மன்னன் மைந்தன் என்று சொல்லப்பட்டது, ஆன்மா இயல்பா கவே நாடிநிற்கும் அதன் தலைவனாய இறைவனை என்றும், அவள் கூடிக்களித்த இளவரசனை மாடனும் குரங்கனும் தாக்கிப் பிரித்தார் என்று சொல்லப்பட்டது, ஆன்மா இறைவனைச் சேர விடாது கர்ம வினைகள் தாக்கித் தடுப்பதனை என்றும் மறு பிறப்பிலும் மாடனும் குரங்கனும் பேயாக அவளைத் தொடர்ந்து அவளது மனித உருவத்தை மாற்றி குயிலுருவம் ஏற்படுத்தின வெனக் கூறப்பட்டது, ஆன்மாவைக் கர்மவினைகள் நிழல்போலத் தொடர்ந்து அதற்கு மயக்கத்தை ஊட்டித் தான் யார் என்பதை உணரவிடாது மாயையைக் கூட்டி நிற்கும் என்பதையும், குயிலின் விடாப்பிடியான வேண்டுதலினாற் காதலன் அதனை அணைய அதன் குயில் உருவம் மாறிப் பெண் ணுருவம் வந்ததென்பது, ஆன்மாவின் தளராத பக்தியினால், அதன் தலைவன் அதனை வந்து சேர்ந்து ஆட்கொள்ளும்போது, ஆன்மா தன்னைத்தான் உணரும் நிலை பெற்றுக் களிக்கிறது என்பதனையும் குறிப்பனவாகக் கொள்ளலாம். அவ்வாறு கொண்டாற்றான், பாரதி விரும்பியவாறு குயிற் பாட்டை வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்கக் கூடியதாயிருக்கும்.

இவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு பாட்டை ஒரு முறை படித்துப் பாருங்கள். அப்பொழுது அதன் உருவகத்தன்மை தானாகவே வெளிப்பட்டு நிற்கும். குயில் தன் பாடலாகப் பாடும் காதல் காதல் காதல், காதல் போயிற் காதற் போயிற் சாதல் சாதல் சாதல் என்ற தொடக்கப் பாடல்களுக்கும் இதே வகையில் விளக்கம் கண்டு கொள்ளலாம். குயிலை ஆன்மா என்று கொண்டால், அந்த ஆன்மா ஒரு பற்றுக்கோடு வேண்டி நிற்குந்தன்மை உடையது என்றும், அது தன் தலைவனாய இறைனை அவாவி நிற்கும் என்றும், அந்தக் காதல் கைகூடும் வரை ஆன்மாவுக்கு விமோசனம் ஏற்படுவதில்லை என்றும் அப்பாடலின் பல்லவிக்குப் பொருள் கூறலாம். அருளே யாயநல் ஒளியே, ஒளிபோமாயின் ஒளிபோமாயின் இருளே இருளே இருளே என்ற சரணத்துக்கு, இறைவனின் அருளாய ஒளி ஆன்மாவுக்குக் கிட்டாத இடத்து அது மலங்களிலே சிக்குண்டு மாய வேண்டியது தான் என்று பொருள் காணலாம். பாடலின் இரண்டாவது சரணமாய இன்பம் இன்பம் இன்பம், இன்பத்திற்கோர் எல்லை காணில் துன்பம் துன்பம் துன்பம், என்பதன் பொருள், ஆன்மா உலக இன்பங்களிலே அளவு கடந்து ஈடுபட்டால், அது ஆன்மா ஈடேற்றத்தைக் கொடுக்காது அதனைப் பெரும் மாயையிலே புதைத்துவிடும் என்பதாகக் கொள்ளலாம். அடுத்து வரும் நாதம் 'தாளம்', பண் என்பன பற்றிய சரணங்களெல்லாம் ஆன்மாவுக்கும் இறைவனுக்குமிடையே இருக்கும் சுருதிபேதமற்ற லயத்தை உணர்ந்து அதில் லயிக்கத் தெரியாது கெடுதி ஏற்படுத்தி

விட்டால், ஆன்மாவின் முன்னேற்றம் தடைப்படும் என்பதை விளக்குவனவாம். குயிலை, மாயையினாற் பீடிக்கப்பட்ட ஆன்மாவாகவும், மனிதனைத் தெய்வ சக்தியாகவும் கொள்வதோடு மாடு, குரங்கு ஆகியவற்றை முறையே ஆணவம் கர்மம் ஆகிய மலங்களாகக் கொண்டும் பாரதியின் குயிற் பாடலுக்கான உட்கருத்தை விளக்குதல் கூடும்.

பாரதி 1917 ஆம் ஆண்டிலே தன் மனைவி மக்களுடன் எடுத்த ஒளிப்படம் ஒன்று, சில ஆண்டுகளுக்கு முன் சென்னை இந்துப் பத்திரிகையில் வெளிவந்திருந்தது. அதிலே பாரதி தன் நெற்றியில் நாமம் தீட்டிக் கொண்டு நிற்பது தெளிவாகத் தெரிகிறது. அதிலிருந்து, அவன் தன் இறுதிக் காலம் வரை வைஷ்ணவக் கொள்கையைக் கடைப்பிடித் தொழுகியவன் என்று கருதலாம். அதனாற்றான் கண்ணனை எப்படி யெப்படியெல்லாம் பார்க்கலாமோ, அப்படியப்படி யெல்லாம் பாவித்துப் பாடியிருக்கிறான். எனவேதான், அவன் குயிற் பாட்டில் உருவகமாகக் காட்டியுள்ள கருத்துக்களை, அவனது வைஷ்ணவ, வேதாந்தக் கொள்கைகளுக்கு ஒத்துப் போகத்தக்க வகையில் விரித்துப் பார்க்க வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

# திருக்குறட் பாடபேதங்கள்

தமிழ் மறையென நாம் போற்றிப் புகழும் திருக்குறள் நூல் தோன்றி ஏறக்குறைய இரண்டா யிரம் ஆண்டுகள் ஆகின்றன. இதில் இறுதி இருநூறு ஆண்டுகளை விட, ஏனைய ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகள் வரை அது ஏட்டுப் பிரதிகளாகவே இருந்திருக்கிறது. அத்தனை காலம் ஏடுகளிலே பிரதி செய்யப்பட்டுப் பரவிவந்த நூலில் எத்தனை பிரதிபேதங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால், திருக்குறட் பதிப்புக்களிலே குறட்பாக்களின் பாடபேதங்களைக் காட்டி வெளிவந்துள்ள வற்றைக் காணமுடியவில்லை. ஏனைய பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தோர் அவற்றின் செய்யுட் பிரதிபேதங்களையெல்லாம் அடிக்குறிப்பாகக் காட்டியிருக்கையில், எமக்குக் கிடைத்துள்ள திருக்குறள் அச்சுப் பதிப்புகளில் மட்டும் குறட்பா வேறுபாடுகளை எடுத்துக் காட்டிப் பதிக்க முடியா மற் போனது ஏன்?

திருக்குறள் ஏட்டுப் பிரதிகள் அனைத்தும் 1800 ஆண்டு காலமாக வழுக்கள், மாற்றங்கள், பேதங்களின்றியே பிரதி செய்யப்பட்டு வந்திருக்குமென்று எண்ணிவிட முடியாது. எனவே, எமக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் அச்சேறிய திருக்குறளுக்கும், திருவள்ளுவர் செய்த குறட்பாக்களும் சிற்சில அடிகள் அல்லது சொற்களிலாவது வேறுபாடுகள் இருக்கலாம். ஏடுகளைப் பிரதி செய்தோரும், உரையெழுதியோரும், தத்தம் கருத்துக்களுக்கு ஒத்த மாற்றங்களைச் செய்திருத்தலுங் கூடும். அதனாற்றான், பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கிப் பரிசோதித்து பாடபேதங்களைக் காட்டிச் செய்யப்படும் பதிப்பு அவசியமாகிறது. அத்தகைய ஒரு பதிப்பே உண்மையான திருவள்ளுவர் உள்ளத்தைக் காட்டி நிற்கும். ஏட்டுக்கேடு, பிரதிக்குப் பிரதி காணத்தக்க வேறுபாடுகளைக் குறிக்காத பதிப்புக்கள் ஆய்வுக்குகந்தனவல்ல.

திருக்குறள் நூல் மூலத்தை முதலில் அம்பலவாணக் கவிராயர் 1811 ஆம் ஆண்டு பதிப்பித் தார். அது அச்சிலே வரத்தொடங்கி நூற்றெண்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆறுமுகநாவ லர் 1861 ஆம் ஆண்டு பரிமேலழகர் உரையுடன் முதலில் வெளியிட்ட பதிப்பினைத் தொடர்ந்து எத்தனையோ அச்சுப்பதிப்புக்கள் வெளிவந்துவிட்டன. இப்போது எல்லோர் கையிலும் இருப்பன அச்சுப் பிரதிகளே. திருக்குறள் ஏட்டுப் பிரதிகளை நூதனசாலைகளிலும், பழஞ்சுவடிக் கூடங்களி லுமே இக்காலத்தில் காணலாம். அதனால், வருங்காலத்திலே பாடபேதங்களை எடுத்துக் காட்டும் பதிப்பினை மேற்கொள்வது ஒரு பெரும் சாதனையாகவேயிருக்கும். தாம் தக்கனவெனக் கண்ட பாடங்களை அம்பலவாணக் கவிராயரும், நாவலரும் முதலில் பதிப்பித்தனர். அவற்றைத் தொடர்ந்து திருக்குறளைப் பதிப்பித்தோர், பிற பிரதிகளோடு ஒப்புநோக்காது, நாவலர் பதிப்பினையே பின்பற்றினார் போலும்.

பழைய திருக்குறள் ஏடுகளிலே பிரதி பேதங்கள் இல்லாமலில்லை என்பதற்கான உதாரணம் ஒன்றினை இங்கு எடுத்துக் காட்டுதல் பொருத்தமாயிருக்கும். ஒல்லாந்தர் எம்மை ஆண்ட காலத்திலே, தமிழகத்திலிருந்து எடுத்துச் சென்ற ஏட்டுப் பிரதிகளுள்ளே திருக்குறட் பிரதிகளும் இடம் பெற்றன. அவற்றுள் ஒன்று, ஒல்லாந்திலுள்ள லெய்டன் பல்கலைக்கழக நூல்நிலையத்தில் இடம் பெற்றிருக்கிறது. பனையோலைச் சட்டங்களால் அமைந்துள்ள அவ்வேட்டிலே பக்கத்துக் கொன்றாகத் திருக்குறட்பாக்கள் எழுதப் பட்டிருக்கின்றன. அவ்வேட்டினைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கையிற் பண்புடைமை என்ற அதிகாரத்திலே ஒரு குறள் சற்று வித்தியாசமாக புலப்பட் டது. அதனை அச்சுப் பிரதிகளிலுள்ள குளோடு ஒத்துப் பார்த்த போது, அவ்விரண்டிற்கு முள்ள வேறுபாடு துலக்கமாகத் தெரிந்தது. நாவலர் பதிப்பு முதல் ஏனைய பதிப்புகளிலெல்லாம் காணப்படும்,

'பண்புடையார்ப்பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்'

என்ற குறட்பா மேற்குறித்த ஏட்டுப் பிரதியிலே,

'பண்புடை யார்ப்பட் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மெனல்'

என்றிருக்கக் காணப்பட்டது. இத்தகைய பாட பேதங்கள் எவையும் அச்சான பதிப்புக்களிலே குறிப்பிட்டுக் காட்டப்படவில்லை. செய்யுள் இலக்கண அமைப்பைப் பொறுத்தவரையில் இரு குறட்பாக்களும் ஏற்புடையனவாகவே அமைந்திருக்கின்றன. பொருளைப் பொறுத்த அளவில் ஏட்டுச் சுவடியிற் காணப்பட்ட புதிய குறட்பாவடிவம் புதிய கருத்துக்கு இடமளித்து நிற்கிறது. அச்சுப்பிரதிகளிற் காணப்படும் முன்னைய குறட்பாவுக்குப் பரிமேழகர் சொல்லும் உரையாவது, பண்புடையார் கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றும் உண்டாய்வாரா நின்றது; ஆண்டுப் பதல் இல்லையாயின் அது மண்ணின் கண் புக்கு மாய்ந்து போவதாம் என்பதாம். அது என்பது இங்கு உலகியல் என்பதைக்சுட்டி நிற்கிறது. எனவே, பண்புடைமை இல்லையாயின் உலகியல் மண் ணிற் புக்கு மாய்ந்து போகும் என்பது அதன் பொருளாகிறது. மண்ணிலே உள்ள உலகியல் மண்ணிற் புக்கு மாய்ந்து போகும் என்பது அதன் பொருளாகிறது. மண்ணிலே உள்ள உலகியல் மண்ணிற்புக்கு மாய்ந்து போகும் என்பது எவ்வளவு பொருத்தமானதாகக் கொள்ளத்தக்க உரை என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. புதிய வடிவிலுள்ள குறட்பா மற்றிரு பொருளுக்கிடமளிக் கிறது. பண்புடையார் இருப்பதனாலேதான் இவ்வுலகம் பண்புடையதாக இயங்குகிறது. பண்பு டமை இல்லாவிட்டால், உலகியல் பண்பின்மையின் கண்ணே புகுந்து சிதைந்து விடும், என்பது ஒன்று. மற்றது, பண்புடையரைக் கொண்டே உலகம் தலைப்படுகிறது. அத்தன்மை இல்லையாயின், அத்தகையை பண்பற்ற உலகினை ஆளும் அரசன் எங்காவது சென்று மாய்ந்து விடுவன் என்று சபத மிட்டு மாய்வது மேல் என்பது. இக் கருத்திலே, பண்புடையாரை உருவாக்குவது அரசன் பொறுப்பு என்ற பொருள் பொதிந்திருத்தல் காணலாம். இப்புதுவடிவக் குறட்பாவுக்கு இவையே ஏற்ற பொருள் என்பதனைச் சாதிப்பதற்காக இக் கருத்துக்கள் இங்கு கூறப்படவில்லை. வேறு கருத்தி னையும் காணுதல் கூடும். ஆனால், இவ்வாறு வேறு கருத்துக்கு இடமளிக்கத் தக்க வகையிலமைந்த குறட்பா வடிவமும் உண்டு என்பதனை வலியுறுத்தவே இதனை இங்கு எடுத்துக் காட்டினோம்.

உரையாசிரியர்கள் உரை எழுதிய குறட்பாப் பிரதிகளைப் பார்த்துப் பாடபேதங்களைக் கண்டு கொள்ளுதல் இயலாத காரியமாகும். ஏனெனில், அவர்கள் தாம் கொண்ட கொள்கைக் கேற்ற வகையிலே குறட்பாக்களின் சீர்தளைகளை வகுத்துத் திரித்து வைத்திருப்பார்கள். உதாரணமாக, மேற்காட்டிய குறட்பாவிலே பண்புடையார் என்பதை ஒரு சீராக, அதாவது, காய்ச்சீராகக் கொண் டாற்றான் வெண்சீர் வெண்டளை அமையும் என்று கருதுவோர், அடுத்த, சீருக்கு உண்டு, என்ற சொல்லைச் சேர்த்துப் பட்டுண்(டு) என்று நேரசை மாச்சீரை ஆக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், இயற்சீர் வெண்டளையும் குறட்பாவுக்கமையும் என்ற கருத்துடையோர், பண்புடை என்பதை ஒரு சீராகவும், யார்ப்பட் என்பதை இரண்டாவது சீராகவும் அமைத்துக் கொண்டு, உண்டு என்ற ஒரு சொல்லை வருவிக்க வேண்டிய அவசியமில்லை என்று காண்பர். பட்டு என்ற பதத்திலே உண்டு என்ற பொருளும் செறிந்திருப்பதனால், உண்டு என்று மேலும் எடுத்தோத வேண்டிய தேவையுமில்லை. வெண்சீர் வெண்டளையே குறள் வெண்பாவுக்குச் சிறப்புடையது என்றால், அதே அதிகாரத்தில் வரும் நாலாவது குறட்பாவின் முதலடியாய நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் என்பதனை எடுத்துக் காட்டி, அதிலே காணப்படும் தளைகள் ஒவ்வொன்றும் இயற்சீர் வெண்டளைகளாய் அமைந்திருப்பதால், அது வள்ளுவர் கருத்தன்று என மறுக்கலாம். எனவே, குறட்பாவின் வேறு பாடபேதங்கள் பொருளற்றனவென ஒதுக்கிவிடுதற்கில்லை.

வள்ளுவர் செய்த குறட்பாக்களின் பாடபேதங்களைக் காண்பதற்கு, உரையாசிரியர்களின் கைப்படாத மூலக் குறட்பாப் பிரதிகளை தேடிக் கண்டாலன்றி ஆகாது. அத்தகைய ஏட்டுப் பிரதிகள், பழம் நூற்சுவடி நிலையங்களிலும், தமிழகத்தோடு பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன் தொடர்பு கொண்டிருந்த நாட்டினரது நூல் நிலையங்கள், தொல்பொருட்காட்சிச் சாலைகள் ஆகியவற்றிலுமே கிடைத்தல் கூடும். அவற்றைத் தேடியெடுத்துத் திருக்குறளின் பாடபேதங்களையெல்லாம் காட்டி நிற்கத்தக்க பதிப்பொன்றினை ஆக்க வேண்டியது அறிஞர் கடனாகும். அத்தகைய பதிப்பொன்று வெளிவந்தாலன்றித் திருக்குறள் நூற்பதிப்புப் பூரண நிலை எய்தி விட்டது என்று கொள்ள முடியாது.

# வரலாற்று ஆய்வுகள்
## நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வன்னிவரலாற்றுக் குறிப்புக்கள்

ஈழ நாட்டின் ஆதித் தமிழ்ப் பிரதேசங்களுள்ளே, வன்னி நாடும் ஒன்றாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட எல்லாள மன்னன் காலத்துக்குப் பல நூற்றாண்டுகள் முன்னரே தமிழ் மக்கள் ஈழத்திலே குடிகொண்டு வாழ்ந்திருந்த போதும், அதற்கான வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவும் யாராலும் குறித்து வைக்கப்படவில்லை, ஆங்காங்கு காணப்படும் புதைபொருள் ஆதாரங்களைக் கொண்டு அவ்வுண்மை இப்பொழுது நிலைநாட்டப்பட்டு வருகிறதே தவிர, வேறு வரலாற்று ஆதாரங்களைக் காட்டி அதனை நிறுவுதல் மிகவும் கடினமான காரியமாயிருக்கிறது. ஆனால் வன்னி நாட்டைப் பொறுத்த அளவில், அதன் வரலாற்றினை அவ்வப்போது அறிஞர்கள் ஆங்காங்கு குறித்து வைத்திருப்பது மகிழ்ச்சியைத் தருவதாகும்.

வன்னிப் பிரதேசத்தின் வரலாறு பெரும்பாலும் வையாபாடலிலும், ஓரளவு கோணேசர் கல்வெட்டிலும், மட்டக்களப்பு மான்மியத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றியும் கல்வெட்டு, செய்யேடு என்ற வேறு இரு நூல்களும் அதன் வரலாற்றைக் குறிப்பிடுவனவாகும். கோணேசர் கல்வெட்டைப் போல, வன்னி வரலாறு குறிக்கும் ஒரு கல்வெட்டு நூலும் இருந்திருக்கிறது. அதனைக் கல்வெட்டு என்றே வழங்கிவந்தனர். செய்யேடு என்பது, அக் கல்வெட்டினை விளக்கி உரைத்துச் செய்யப்பட்ட நூலா அன்றி வன்னி வரலாறு கூறும் மன்றொரு நூலா என்பது இப்பொழுது தெளிவாயில்லை. இக் கல் வெட்டுப் பற்றியும் செய்யேடு பற்றியும் வையா வசன நூல்களிலே குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அக் கல்வெட்டும் செய்யேடும் இப்பொழுது கிடைத்தல் இல்லை எனினும் குறித்த கல் வெட்டிலே காணப்பட்ட சில குறிப்புக்களை, இங்கை சிவில் சேவிசில் இருந்த ஜே.பி.லூயிஸ் என்பவர் 1895 ஆம் ஆண்டு பிரசுரித்து வைத்த வன்னிக் கைந்நூல் (Manual of Vanni) என்ற புத்தகத்திலே காணக்கூடிய தாயிருக்கிறது. அதன்படி,

> ''இலங்கை மன்னர்களுள் ஒருவனான வாலசிங்க என்பவன், மதுரை மன்னனான சிங்க கேது என்பானது மகளாய சமதுதி என்பவளை மணக்க விரும்பினான். அதையறிந்த சிங்கேது மன்னன் தன் மந்திரிமார்களாய 60 வன்னியர்களை அழைத்துத் தன் மகளை இலங்கை மன்னனாய வாலசிங்க மகாராசாவிடம் அழைத்துச் செல்லுமாறு கட்டளை யிட்டான். அவ்வன்னியர்கள் இலங்கையை அடைந்ததும், அவர்களுக்கு என்ன வெகு மதி வேண்டுமென வாலசிங்க மன்னன் கேட்க, அவர்கள் தமக்கு அடங்காப்பற்றைத் தருமாறு கேட்டனர். அப்படியே அம்மன்னன் அவர்களை அடங்காப்பற்றுக்கு அனுப்பி காடுகளைத் திருத்தி குளங்களைக் கட்டிக் குடியேற்றினான். அடங்காப்பற்றை அரசாண்டு, யாழ்ப்பாண மன்னனான கூழங்கைக் சக்கரவர்த்திக்குத் திறை கொடுத்து வாழுங்கள் என்றான். அந்த 60 வன்னியருள் ஒருவன் அனுராதபுரத்திலே திசையாக (Disawa) நியமிக்கப்பட்டான். ஏனைய 59 வன்னியரும் அடங்காப்பற்றுக்குச் சென்றனர். இது கல்வெட்டிற் காணப்பட்டதாகும்.

என்று ஜே.பி.லூயிஸ் தன் நூலிலே குறித்திருக்கிறார். இந்த விபரம் வையா பாடலிலே உள்ள வன்னியர் வரலாற்றோடு பெரிதும் ஒத்திருக்கிறது. ஆனால் ஒரு விடயத்தில் மட்டும் குறித்த கல்வெட்டின் இக் குறிப்பும் வையாபாடலும் சற்று வேறுபடுகின்றன. கல்வெட்டுக் குறிப்பின்படி, வன்னியருள் ஒருவன் திசையாக அனுராதபுரம் சென்றான் எனக் காணப்படுகிறது. ஆனால் வையா பாடலோ, அந்த 60 வன்னியருள் ஒருவன் திசையாகக் கண்டிக்குச் சென்றான் என்று கூறுகிறது. அவ்வளவுதான் அவ்விருவாயிலான வரலாற்றுக் குறிப்புக்களிலே உள்ள வேறுபாடு. அதனால்

வன்னி வரலாறு பற்றி வையாபாடற் குறிப்பும் கல்வெட்டுக் குறிப்பும் பெரிதும் ஒத்து நடக்கின்றன என்று கொள்ளலாம். இரு வேறுவாயிலாகப் பெறப்படும் வரலாற்றுக் குறிப்புக்களில் ஒற்றுமை காணப்படும் போது அவ்வரலாற்றில் உண்மையுண்டு என்று கொள்ள இட மேற்படுகிறது.

வையா பாடலின்படி, முதல் 60 வன்னியர்களும் இலங்கைக்கு வந்து அடங்காப்பற்றிலே குடியேறிய காலம் கி.மு. 50 ஆம் ஆண்டளவிலாகும் என எமது வையாபாடற் பதிப்பிலே காட்டியுள்ளோம். மட்டக்களப்பு மான்மியத்தின்படி, வன்னியர் இலங்கையிற் குடியேறிய காலம் கி.பி.100 வரையிலெனக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்விரு நூற் கணிப்புகளுக்குமிடையே 150 ஆண்டு வித்தியாசமே காணப்படுகிறது. அப்பொழுது இலங்கைக்கு வந்த 60 வன்னியருள் 54 வன்னியர் அடங்காப்பற்றிலிருந்த அசுரரோடு செய்த போரிலே பட்டொழிந்தனர் என்றும், திசையாகச் சென்ற ஒரு வன்னியனை விட, எஞ்சிய 5 வன்னியரும் அடங்காப்பற்றை ஐந்து பற்றாகப் பிரித்து அரசாண்டனர் என்றும் வையா பாடல் கூறும். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னிருந்த வன்னி பற்றி லூயிஸ் குறிப்பிட்டிருப்பதாவது

> ''வன்னி மாவட்டம் 10 பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன கிழக்குமூலை தெற்கு, கிழக்குமூலை வடக்கு, நடுச் செட்டி குளம், சின்னச் செட்டி குளம் கிழக்கு, சின்னச் செட்டி குளம் மேற்கு, மேற்குமூலை, பனங்காமம், .உடையாவூர், மேல் பற்று தெற்கு மேல்பற்று கிழக்கு என்பனவாம். கிழக்குமூலை தெற்கு என்பது வன்னியின் தென்பாகமாகும். அங்கு வவுனியா என்ற கிராமம் உண்டு. ஆகக் கூடுதலான சனத்தொகை கொண்ட அக் கிராமத்திலே 2000 பேர் வாழ்கிறார்கள். மிகவும் குறைந்த சனத்தொகை கொண்ட பகுதி மேல் பற்று தெற்காகும் அங்கு 200 க்கும் குறைந்த தொகையினரே வாழ்கிறார்கள். வவுனியா என்ற பெயர், 1750ம் ஆண்டளவில் அங்கு வாழந்த ஒரு கோயில் முகாமையாளனாயிருந்த வவுனியன் என்ற வன்னியன் ஒருவன் பெயரிலிருந்து தோன்றியதாகும். அவனே வவுனியா பெரிய குளத்தைச் சீர்ப்படுத்தியவன்''

மேலும் லூயிஸ் தெரிவிப்பதாவது

> வவுனியா மாவட்டமும் முல்லைத்தீவு மாவட்டமும் சேர்ந்த பகுதியே அப்பொழுது வன்னி என்று அழைக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் 76% தமிழரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 92% தமிழரும் வாழ்ந்தனர். 1891 ஆம் ஆண்டிலே நடத்திய குடிசனத் தொகைக் கணக்கெடுப்பின்படி, வவுனியா மாவட்டத்தில் 970 சிங்கள மக்களே இருந்தனர். முல்லைத்தீவு வட்டாரத்தில் இரண்டு சிங்களவர் வியாபாரத்தின் பொருட்டு மட்டும் காலியிலிருந்து சென்றிருந்தனர். இக் கணக்கெடுப்பு, யாழ்ப்பாணத்திலுள்ள கரைவெட்டியிலிருந்து நெசவுத் தொழிலாளர் நூற்றுக்கு மேற்பட்டோர் முள்ளியவளையிற் சென்று குடியேறினர் என்று காட்டுகிறது. மண்டுக்கோட்டை அல்லது மதுகந்தை என்று வழங்கப்படும் ஊரிலேயே முதற் சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டது. 1810 ஆம் ஆண்டில் அங்கு 30 சிங்களக் குடிகளே இருந்தன. வவுனியாவில் அப்பொழுது 4 தமிழ்ப் பௌத்தர்களும் 3 சிங்கள இந்துக்களும் இருந்தனரெனக் கணக்கெடுப்புக் காட்டுவதாக லூயிஸ் கூறுகிறார்.

இந்தியாவிலுள்ள மருங்கூரிலிருந்து வந்து வன்னிப் பகுதியை அரசாண்ட வன்னியர்களின் பரம்பரையினரே வன்னியர்கள் என்பது லூயிஸ் அவர்களின் கருத்து. அவர் காலத்திலே பனங்காமத்தில் 2 வன்னியர்கள் இருந்தனர் எனக் குறிப்பிட்டிருக்கிறார். பண்டார வன்னியன் இறந்தபின் அவ்விருவருமே வன்னியரெனக் கணிக்கப்பட்டனர் என அவர் கூறுவதிலிருந்து, வன்னிப் பகுதியில் வாழும் எல்லோருமே வன்னியர் என்று கருத இடமில்லையெனத் தெரிகிறது. அக்காலத்திலுள்ள வன்னியின் எல்லைகளை அவர் பின் வருமாறு காட்டியிருக்கிறார்:

'வடக்கே யாழ்ப்பாணக் குளம், தெற்கே அருவி ஆறும் நுவரகலாவிய மாவட்டமும், கிழக்கே திருகோணமலை மாவட்டம், மேற்கே மன்னார் மாவட்டம்: இந்த எல்லைகளுக் குட்பட்டது வன்னியாகும். இதிலே ஏறத்தாழக் கீழ் அரைப் பகுதி வவுனியா மாவட்ட மும், மேல் அரைப் பகுதி முல்லைத்தீவு மாவட்டமுமாகும். வடக்குத் தெற்காக வன்னி நாட்டின் கூடிய நீளம் 71 மைலும் கிழக்கு மேற்காக அதன் கூடிய அகலம் 60 மைலு மாகும்'.

வன்னியர் ஆட்சியில் இருந்தமையாலே அதற்கு வன்னிநாடு என்று பெயராயிற்று. அதற்கு முன் அப் பிரதேசம் அடங்காப்பற்று என்றே குறிக்கப்பட்டது. யாழ்ப்பாண ஆட்சிக்குள் அடங்காம லும், அனுராதபுரி ஆட்சிக்குள் அடங்காமலும் இருந்த பிரதேசமாகையால் அது அடங்காப்பற்று என்று வழங்கப்படலாயிற்று என்பது லூயிஸ் என்பவருக்கு முற்பட வாழ்ந்தரெனென்ற் என்ற ஆங்கிலேயன் குறித்துள்ள கருத்தாகும்.

மேலும் வன்னிப் பகுதி அனுராதபுரப் பகுதி பற்றிய சில குறிப்புக்களை றெபேட் நொக்ஸ் எழுதிய நூலிலும் காணலாம். றொபேட் நொக்ஸ் என்ற ஆங்கில மாலுமி 1657 ஆம் ஆண்டு இலங் கைக்கு வந்த போது, அப்பொழுதிருந்த கண்டி மன்னனாற் சிறைபிடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப் பட்டான். அவன் பின்னர் காலவலிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், 1679 ஆம் ஆண்டுவரை கண்டி இராச்சியப் பகுதியிலேயே வாழ வேண்டியிருந்தது. 1679 இல் அவன் இலங்கையை விட்டுத் தப்பிச் செல்வதற்காக வடக்கு நோக்கிச் சென்றபோது, மல்வத்து ஓயாவைக் கடந்து அனுராதபுரம் சென்றானாம். அனுராதபுரப் பகுதியில் அப்பொழுதிருந்தவர்களுடன் சிங்களத்திலே பேச முடியவில்லை யென்றும், அவர்கள் சிங்களவர்ளிலிருந்து வேறுபட்ட இனத்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்றும் மலபார் மொழியிலேயே அவர்கள் தன்னிடம் கேள்விகள் கேட்டார்கள் என்றும் றொபேட் நொக்ஸ் தன் நூலிலே குறித்து வைத்திருக்கிறார். தான் அவர்களுடன் சிங்களத் திலே பேசிய பொழுது அங்குள்ளவர்களுக்கு எதுவுமே விளங்கவில்லையாம். அனுராதபுரத்திலே கண்டி மன்னனின் அதிகாரியாக இருந்தவனோடு கூடத்தான் சிங்களத்திலே பேச முடியாமற் போன தென்றும், மொழி பெயர்ப்பாளர் மூலமே தான் அந்த அதிகாரியிடம் பேச முடிந்தது என்றும் றொபேட் நொக்ஸ் எழுதி வைத்திருக்கிறார்.

அனுராதபுரத்துக்கு அப்பால் வடக்கே சென்றால், மலபார் அரசனிடம் அகப்பட வேண்டி வரும் என்று பயந்து, அங்கிருந்து மேற்குப் பக்கமாக மல்வத்தை ஓயாக் கரை மார்க்கமாக டச்சுக்கா ரர் கோட்டையை அடையும் நோக்கத்துடன் சென்றபோது கனதர (**Kanadara**) ஓயா என்ற அருவிக் கரையை அடைந்தானாம் அந்த அருவி கண்டியரசன் இராச்சியத்தையும் டச்சுக் காரருக்குத் திறை கொடுக்கும் மலபார் அரசன் இராச்சியத்தையும் பிரிக்கும் எல்லையென்று அப்பொழுது தெரியவந்த தாம். அதனால் அக்கரையோரமாக மேற்கே சென்று,அரிப்பு என்ற இடத்தை அடைந்தானாம்.

மலபார் மொழி யென்பது, தமிழ் மொழியென்றும், மலபார் அரசன் என்பது, தமிழ் பேசிய வன்னிய அரசன் என்றும் கொள்ளலாம். கனதர ஓயா என்பது எந்த அருவியைக் குறிக்கிறது என்று கண்டு கொண்டால், றொபேட் நொக்ஸ் எழுதிவைத்த மேற்காட்டிய செய்திகளிலிருந்து, 1679 ஆம் ஆண்டில் அனுராதபுரத்தின் மொழி நிலையையும் வன்னி இராச்சியத்தின் தெற்கெல்லையையும் தெரிந்துகொள்ளலாம்.மல்வத்தை ஓயா மற்றொரு அருவியுடன் சென்று சேருகிறது. அது மதவாச்சிக்கும் அனுராதபுரத்துக்கும் இடையில் அமைந்திருக்கிறது. அதுவே கனதர ஓயாவென அழைக்கப் பட்டிருக்க வேண்டும். அவ்விரண்டும் சேர்ந்து அப்பாற் செல்வதே அருவி ஆறு. அதன் முகத்துவாரத்தை அண்டிய அரிப்பு என்ற இடமிருக்கிறது. லூயிஸ் அவர்களின் குறிப்புப்படியும் அருவி ஆறே வன்னியின் தெற் கெல்லையாகிறது. எனவே, அருவியாற்றின் கிளையாய கனதர ஓயா வன்னியின் தெற்கெல்லையாயிருந்தது என்று நொக்ஸ் கொள்வது பொருத்தமாகவே யமைகிறது எனவே வன்னியின் தெற்கெல்லை அனுராதபுரத்துக்கும் மதவாச்சகிக்கும். இடையில் இருக்கிறது என்பது தெளிவாகிறது.

# வையாபாடல் ஆய்வுரை

## நூலாசிரியர் வரலாறு.

வையாபாடல் என்ற நூலை, யாழ்ப்பாண மன்னர்களுள் ஒருவனான செகராசசேகரனின் அவைப்புலவர் வையாபுரி ஐயர் இயற்றினார் என்று வையாபாடல் ஏட்டுப்பிரதிகள் குறிக்கும். யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூல்[1] ''வையா என்னும் புலவர் சயவீரசிங்கை ஆரியன் எனப்படும் ஐந்தாம் செகராசசேகரன் காலத்தில் (கி.பி.1380-1414) சமஸ்தானப் புலவராய்க் கீர்த்தியுடன் விளங்கினார்; 'இவர் வையா பாடல்', 'பாராசசேகரன் உலா', 'பரராசசேகரன் இராச முறை' என்னும் நூல்களின் ஆசிரியர் எனக் கூறும்.

யாழ்ப்பாண வைபவமாலையின் ஆசிரியர் மாதகல் மயில்வாகனப் புலவர் வையா என்னும் புலவர் மரபிலுதித்தவர் என்பர். அதற்கு ஆதாரமாக, யாழ்ப்பாண வைபவமாலைச் சிறப்புப்பாயிரச் செய்யுட்களுளொன்றாய,

**'ஒண்ணலங்கொள் மேக்கறூனென் றோதுபெயர்**
**பெற்றவிற லுலாந்தே சண்ணல்**
**பண்ணலங்கொள் யாழ்ப்பாணப் பதிவரலா**
**றுரைத்தமிழாற் பரிந்து கேட்கத்**
**திண்ணிலங்கு வேற்படையான் செகராச**
**சேகரன்றொல் லவைசேர் தொன்னூல்**
**மண்ணிலங்கு சீர்த்திவையா மரபில்மயில்**
**வாகனவேள் வகுத்திட் டானே'**

என்ற பாடலையும், மயில்வாகனப் புலவரியற்றிய புலி யூரந்தாதிச் சிறப்புப் பாயிரச் செய்யுட் களுளொன்றாய,

**'நெய்பார்ந்த வாட்கைப் பரராச சேகரன் போர்நிறுவி**
**மெய்யான நல்ல கலைத்தமிழ் நூல்கள் விரித்துரைத்த**
**வையாவின் கோத்திரத் தான்மயில் வாகனன் மாதவங்கள்**
**பொய்யாத வாய்மைப் புலியூரந் தாதி புகன்றனனே.'**

என்ற பாடலையும் காட்டுவர், மயில்வாகனப் புலவரை இங்கு மயில்வாகன வேள் என்று குறித்திருப்பதனையும் வையாபாடல் ஆசிரியரை வையாபுரி ஐயர் என்று ஏடுகளிற் பொறித்திருப் பதனையும் உற்று நோக்கின், அவ்விருவரும் ஒரே மரபினராதல் சாலுமா என்று சந்தேகப்பட இடமுண்டு. இது ஆராயத்தக்கதே. வையாபாடல் ஏழாஞ் செய்யுளில் ஆக்கியோன் பெயர் கூறப் படுமிடத்து,

**'குலம்பெறு ததீசிமா மனிதன் கோத்திரத்**
**திலங்குவை யாவென விசைக்கு நாதனே'**

என்றிருப்பதால், இந்நூலாசிரியர் பெயர் 'வையா' அன்றி 'வையாநாதன்' என்றே வழங்கியி ருத்தல் கூடும்.

## நூலாசிரியர் காலம்

### (அ) புறச்சான்று.

இந்நூலாசிரியர் காலத்தை நிறுவுவதற்கு, யாழ்ப்பாண வைபவமாலையாசிரியர் கால நிர்ணயம் ஏற்றதொரு புறச் சான்றாயமையும். மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண

1. *முதலியார் குல சபாநாதன் பதிப்பு - 1953 - பக்கம்* XII

வைபவமாலையின் சிறப்புப் பாயிரச் செய்யுளொன்று அவர் காலத்தில் இலங்கையில் வாழ்ந்த 'மேக்கறூனென்றோதும் உலாந்தேசு மன்ன'னைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கி.பி. 1736 ஆம் ஆண்டில் 'இயன் மாக்காரா' என்ற ஒல்லாந்தத் தேசாதிபதி யாழ்ப்பாணப் பகுதியில் ஒல்லாந்தருக்கிருந்த பாகங்களைப் பரிபாலித்தானெனத் தெரிகிறது.[2] 'மேக்கறூன்' என்பது 'இயன்மாக்காரா'வைக் குறிக்குமெனக் கருதி மயில் வாகனப் புலவர் காலமும் பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகுமென யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர்கள் கருதினர்.

அரசாங்க சுவடிப் பாதுகாப்பு நிலையத்திலுள்ள ஒல்லாந்தர் காலத்துப் பத்திரங்களில், 1706 ஆம் ஆண்டில் பீற்றர் மாக்காரா, (Peter Macare) என்பவர் 'பிசுக்கால்' அதிகாரியாக யாழ்ப்பாணத்திலிருந்தார் என்னும் குறிப்புக் காணப்படுவதால், அவருடைய விருப்பப்படியே மயில்வாகனப் புலவர் வைபவமாலையை இயற்றினாரென வ. குமார சுவாமியவர்கள் இந்துசாதனப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றிற் குறிப்பிட்டுள்ளார். காலியிலே தளபதியாயிருந்த 'இயன் மாக்காரா' யாழ்பாணச் சரித்திரத்தில் நாட்டமுடையவராயிருந்தார் என்பது பொருத்தமற்ற கூற்றெனக் கொண்டு, மயில்வாகனப் புலவர் வைபவமாலையை இயற்றிய காலம் கி.பி. 1706 ஆம் ஆண்டென்றே திரு. வ. குமாரசுவாமி கொள்கிறார்.

தி. சதாசிவ ஐயர் அவர்கள் தாம் பதிப்பித்த கரவை வேலன் கோவையிற் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''வண்ணை வைத்தீஸ்வர சுவாமி கோயிலைக் கி.பி. 1787 இற் கட்ட ஆரம்பித்து 1791 இல் முடித்துக் கும்பாபிஷேகம் செய்வித்த வண்ணை வைத்தியலிங்கச் செட்டியாரும் மயில் வாகனப் புலவரும், கூழங்கைத் தம்பிரானிடம் ஒருங்கு கல்வி கற்றவர்கள். கி.பி. 1805 ஆம் ஆண்டில் வைத்தியலிங்கச் செட்டியார் தம் ஆஸ்திகளைப் பற்றிய மரணசாதனப் பத்திரம் பிறப்பித்தார் என்பது அப்பத்திர வாயிலாகவே இன்றும் நாமறியக் கிடக்கின்றது. அங்ஙனம் பத்திரம் பிறப்பித்தபின் செட்டியார் பெரும் பொருள் எடுத்துக் கொண்டு வேண்டிய பரிசனங்களுடன் தம் தோழராகிய மயில்வாகனப் புலவரையும் அழைத்துக் கொண்டு காசிக்குப் பிரயாணமானார். வழியிலும் காசிப் பதியிலும் பல தருமத்தாபனங்கள் செய்து, அங்குச் சிறிது காலத்திற் செட்டியார் கால கதியடைய மயில்வாகனப் புலவர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து, மேலும் சிலகாலம் வாழந்திருந்தனர்''. சதாசிவ ஐயர் அவர்களது இக்குறிப்பின்படியும், மயில்வாகனப் புலவர் காலம் பதினெட்டாம் நூற்றாண்டென்று கொள்வதில் இடர்ப்படாதெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்நூற்றாண்டின் முற்பகுதியிலா, நடுப்பகுதியிலா அன்றிப் பிற்பகுதியிலா அவர் வாழ்ந்தார் என்பதிற்றான் கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன.

---

1. *உரராசர் தொழுகழன்மேக் கறூனென் றோதும்*
   *உலாந்தேசு மன்னனுரைத் தமிழாற் கேட்க*
   *வரராச கைலாய மாலை தொன்னூல்*
   *வரம்புகண்ட கவிஞர்பிரான் வையா பாடல்*
   *பரராச சேகரன்றன் னுலாவுங் காலப்*
   *படிவமுவா துற்றசம்ப வங்க டீட்டுந்*
   *திரராச முறைகளுந்தோர்ந் தியாழ்ப்பா ணத்தின்*
   *செய்திமயில் வாகனவேள் செப்பி னானே.*
2. Maccara was the Administrator of the Dutch possessions in Jaffna in 1736 says Dr. S. Paranavitana in his article "The Arya Kingdom in north Ceylon' published in the journal of the Ceylon Branch of the Royal Asitatic Society,new series, Volume,7 Part 2, Page 176,177 (1961)
3. V. Coomaraswamy B.A
   A peep into Dutch Archives in Ceylon - Hindu Organ of 3.2.1936.

கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரனுலா, இராசமுறை என்ற நூல்களை மயில்வாக னப் புலவர் தாமெழுதிய யாழ்ப்பாண வைபவமாலைக்கு ஆதாரமாகக் கொண்டாரென்பது, 'உரராசர்' என்று தொடங்கும் அந்நூற் சிறப்புப்பாயிரச் செய்யுளால் நன்கு புலனாகும். பதினெட் டாம் நூற்றாண்டில் வையாபாடல் ஆதாரநூலாகக் கொள்ளத்தக்க அளவுக்குச் சிறப்புப்பெற்றி ருந்தது என்பது இதனால் அறியக் கிடக்கின்றது. ஆகவே, வையாபாடல் பதினெட்டாம் நூற்றா ண்டிலோ அதற்கு முன்னரோ இயற்றப்பட்டதாதல் வேண்டும்.

### (ஆ) அகச்சான்று

இந்நூலின் காலத்தை மேலும் நுணுகி ஆய்வதற்கு இதன் இறுதிச் செய்யுட்கள் சில, அகச்சான் றாக உதவுகின்றன.

**'எந்நாளு மிம்முறையே யாவரையும் வாழ்வீரென் றிருத்தி யங்கண்**
**மன்னான விளவலெனுஞ் சங்கிலியை வாவெட்டி சாரச் செய்து**
**முன்னோர்க்குப் புரிபூசை நிதந்தெரிசித் தேமுள்ளி வளையா மூரில்**
**மன்னான விரவிகுலப் பரராச சேகரனும் வாழ்ந்தா னன்றே**

(வையா 99)

என்ற பாடலிலிருந்து இந்நூலியற்றப்பட்டபோது, சங்கிலி என்பான்[1] வாவெட்டியில் இருந்தா னென்றும், அவன் தமையனாகிய பரராசசேகரன் முள்ளியவளையில் வாழ்ந்தானென்றும் தெரிய வருகிறது.

**'அந்தவனை வோர்களையு மன்னவர்கள் மன்னவன்பார்த்தன்பினோடு**
**கந்தமலி தாரிளவல் செகராச சேகரனைக் கருணை கூர**
**இந்தயாழ்ப் பாணமதி லிருக்கவென்றே சித்திரவே லரையுமீந்து**
**வந்துமுள்ளி மாநகரிற் கோட்டையுநற் சினகரமும் வகுப்பித்தானால்'**

என்ற தொண்ணூற்றாவது செய்யுளிற் பரராசசேகரன் தன் தம்பியாகிய செகராசசேகரனை யாழ்ப்பாணத்திலிருத்தி விட்டுத் தான் முள்ளியவளைக்குச் சென்று அங்கு கோட்டையும் கோயிலும் வகுப்பித்தான் என்று சொல்லப்படுகிறது. எனவே, இங்கு செகராசசேகரனெனக் கூறப்படுபவன் சங்கிலியின் சகோதரனும், பரராசசிங்கனின் இளவலுமாவானெனத் தெரிகிறது. இச்செய்யுளில், இந்த யாழ்ப்பாண மதிலிருக்க வென்றே... என்று குறிப்பிடுவதிலிருந்து, இந்நூலாசிரியன் யாழ்ப்பாணத்திலே சங்கிலியின் சகோதரனாகிய செகராசசேகரன் ஆட்சி செய்தபோது இந்நூலை அங்கிருந்தெழுதினானென்று கொள்ள இடமுண்டு.

யாழ்ப்பாணத்திலே செகராசசேகரனையும், வாவெட்டியிலே சங்கிலியையும் அரசு பரிபா லிக்க வைத்து, அவர்கள் தமையனான பரராசசேகரன் முள்ளியவளையிலிருந்து பேரரசோச்சி வந்தானென்றும், தன் தம்பியர்கள் யாழ்ப்பாணத்திலும் வாவெட்டியிலும் எவ்வாறு பரிபாலனம் நடத்தினார்களென மாதந்தோறும் ஆங்காங்கு சென்று கண்காணித்து வந்தானென்றும் இந்நூலின் நூறாவது செய்யுளிலிருந்தறிய முடிகிறது. நூற்றொராம் நூற்றிரண்டாம் செய்யுட்களிலே, அன்ன நாள்வரையானதிக் கதையெனவும் சொல்லப்படுகிறது. வையாபாடல் கூறும் வரலாறு அத்துடன் முடிவடை கிறது. சங்கிலி யாழ்ப்பாணத்தரசனான கதை இங்கு சொல்லப்படவில்லை. எனவே, பரராசசேகரன் இறந்தபின் அவன் சகோதரனான செகராசசேகரன் யாழ்ப்பாணத்திலரசோச்சுகை யில் இந்நூலெழுதப் பட்டதென்பது தெளிவாகிறது.

இங்கு குறிக்கப்பட்ட பரராசசேகரனும் செகராசசேகரனும், கி.பி. 1440 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாண அரசனான கனகசூரியசிங்கையாரியனின் புதல்வர்கள் என யாழ்ப்பாண வைபவ மாலை கூறும். அவ்வாறாயின், சங்கிலியும் அவன் புதல்வர்களுள் ஒருவனாதல் வேண்டும். அதற்கு

---

*1. இது முல்லைத்தீவுப் பகுதியில் உள்ளது.*

மாறாக யாழ்ப்பாண வைபவமாலை இப்பரராசசேகரனின் புதல்வர் மூவரில் ஒருவனே சங்கிலி என்று கூறும். வையாபாடலின்படி அக்கூற்றுப் பொருந்தாமை புலனாகும். பரராசசேகரனென்ற மன்னனொருவனுக்கு முன்னரசாண்ட கனகசூரியசிங்கையாரியன் செகராசசேகரன் என்ற சிங்காசனப் பெயர் பெற்றவனாதல் வேண்டும். ஏனெனில் 'பரராசசேகரன், செகராசசேகரன் என்பன யாழ்ப்பாணத்தரசர் ஒருவர்பின் னொருவராய் இட்டுக் கொண்ட சிங்காசனப் பெயர்க ளாகும்.[1]' என யாழ்ப்பாண வைபவமாலைப் பதிப்பாசிரியருளொருவரான முதலியார் குல. சபாநாதனும், யாழ்ப்பாண வைபவ விமர்சன ஆசிரியர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரும் நன்கெடுத்துக் காட்டியுள்ளனர். சுவாமி ஞானப்பிரகாசரின் கணக்குப்படி, கனகசூரியசிங்கையா ரியன் ஆறாம் செகராசசேகரனாவான்.[3]

எனவே, அவனது மூத்த மகன் ஆறாம் பரராசசேகரனாகவும், அவனைத் தொடர்ந்து அரசுரிமை பெற்ற இரண்டாம் மகன் ஏழாம் செகராசசேகரனாகவும் விளங்கியிருக்க வேண்டும். இவனைக் கொன்றே சங்கிலி அரசுரிமையைக் கவர்ந்தானென்பது சரித்திரம். எனவே, சங்கிலி ஏழாம் பரராசசேகரனாய் விளங்கியிருத்தல் வேண்டும். இதற்கு மாறாகச் சங்கிலியை ஏழாம் செகராசசேகரன் என்று சுவாமி ஞானப்பிரகாசர் கூறியிருப்பது[1], வையாபாடலிலுள்ள தொண் ணூற்றாறாம் தொண்ணூற்றொன்பதாம் நூறாம் செய்யுட்களின் கருத்தைக் கண்டுகொள்ளாமையாற் போலும்,

இவ்வாய்வின் பயனாக. இந்நூலாசிரியன் காலம் ஏழாம் செகராசசேகரன் காலமெனவும், ஏழாம் செகராசசேகரன் என்பான் சங்கிலிக்கு முன் யாழ்ப்பாணத்தி லரசோச்சிய மன்னனெனவும், அவன் சங்கிலியின் சகோதரனெனவும் கண்டோம். சங்கிலி மன்னன் யாழ்ப்பாண அரசு கைக் கொண்ட ஆண்டு கி.பி. 1519 எனச் சுவாமி ஞானப்பிரகாசர் கணக்கிட்டுக் கூறுவர்[2]. எனவே, சங்கிலி மன்னனுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அரசாண்ட அவன் சகோதரனான ஏழாம் செகராச சேகரன் கால இறுதி எல்லையும் அதுவேயெனக் கொள்ளக்கிடக்கிறது. ஆறாம் பரராசசேகரனும் அவன் தம்பியாகிய ஏழாம் செகராசசேகரனும் ஒருவர்பின்னொருவராக யாழ்ப்பாண அரசுக் குரியவரானவர்களென்றும், அவர்கள் கனகசூரிய சிங்கையாரியன் புதல்வர்களென்றுங் கண் டோம்.

---

*1. யாழ்ப்பாண வைபமாலை - முதலியார் குல சபாநாதன் பதிப்பு - 1953 - பக்கம். 46*
*2. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் - 1928 - பக்கம். 80*
*3. சிங்காசனப் பெயர் - பி.கி.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01) | காலிங்க ஆரியச்சக்கரவர்த்தி | - | செகராசசேச்கரன் | i | 1242 |
| (02) | குலசேகர சிங்கையாரியன் | - | பரராசசேகரன் | ii | |
| (03) | குலோத்துங்க சிங்கையாரியன் | - | செகராசசேகரன் | ii | |
| (04) | விக்கிரம சிங்கையாரியன் | - | பரராசசேகரன் | ii | |
| (05) | வரோதய சிங்கையாரியன் | - | செகராசசேகரன் | iii | |
| (06) | பார்த்தாண்ட சிங்கையாரியன் | - | பரராசசேகரன் | iii | |
| (07) | குணபூஷண சிங்கையாரியன் | - | செகராசசேகரன் | iv | |
| (08) | வீரோதய சிங்கையாரியன் | - | பரராசசேகரன் | iv | 1344 |
| (09) | சயவீர சிங்கையாரியன் | - | செகராசசேகரன் | v | 1380 |
| (10) | குணவீர சிங்கையாரியன் | - | பரராசசேகரன் | v | 1414 |
| (11) | சனகசூரியசிங்கையாரியன் | - | செகராசசேகரன் | vi | |

*(இந்நூலிற் குறிக்கப்படும் யாழ்ப்பாண அரசர் ஆண்டுக் காலங்கள், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய யாழ்ப்பாண வைபவம் விமர்சனம் என்ற நூலிற் கண்டவாறு குறிக்கப்பட்டிருக்கின்றன.)*

*1. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1928-பக்கம் - 113*
*2. யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1928 - பக்கம் -114*

கனகசூரியசிங்கையாரியனைச் செண்பகப் பெருமாள் (சப்புமல் குமாரய) என்ற சிங்களநாட்டு வீரன் கி.பி. 1450 ஆம் ஆண்டிலே தோற்கடித்து யாழப்பாணத்திற் பதினேழு ஆண்டுகள் ஆட்சி நடத்தினான்; கி.பி. 1467 இற் கனகசூரிய சிங்கையாரியன் மீண்டும் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினான் என்பது வரலாறு. ஆகவே, கி.பி. 1467 ஆம் ஆண்டுக்கும். கி.பி. 1519 ஆம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்திற் கனகசூரியசிங்கையாரியனும் அவன் புதல்வர்களாய ஆறாம் பரராசசேகரனும் ஏழாம் செகராசசேகரனும் ஒருவர் பின்னொருவராக ஆட்சி செலுத்தினர் என்று கூறல் பொருந்தும். இவ்வைம்பத்திரண்டாண்டுக் காலத்தின் இறுதிப்பகுதியே ஏழாம் செகராசசேகரன் ஆட்சிக் காலமாகும். அது பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியிலோ அன்றிப் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ ஆரம்பித்திருக்கலாம். ஆகவே. அவன்காலப் புலவனும் இந் நூலாசிரியனுமாகிய வையாபுரி ஐயர் காலமும் பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதிக்குமிடைப்பட்டதெனல் சாலும்.

இந்நூலின் 89 ஆம், 91 ஆம் செய்யுட்களின்படி, ஆறாம் பரராசசேகரனும் 'தொண்டை மண்டலந்தனி லுகந்தருளும் கன்னதேவரு'ம் சமகாலத்தவராவர். கன்னதேவர் என்பது கி.பி. 1509 முதல் 1530 வரை அரசாண்ட விஜயநகர மன்னனாய கிருஷ்ணதேவராயரைக் குறிக்கும் என்பர். எனவே, ஆறாம் பரராசசேகரன் கி.பி. 1509 ஆம் ஆண்டு வரையாவது ஆட்சி செலுத்தியிருக்க வேண்டும். அதனால், ஏழாம் செகராசசேகரன் ஆட்சிக்காலம் கி.பி. 1509 ஆம் ஆண்டுக்கும் 1519 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டதாதல் வேண்டும் என்பது தெளிவாகிறது. எனவே, ஏழாம் செகராசசேகரன் காலப் புலவனாய இந்நூலாசிரியர் இக்கால கட்டத்திலேயே இந்த நூலைச் செய்திருக்க வேண்டும்.

## இடைச்செருகல்.

இந்நூற் கதை ஆறாம் பரராசசேகரனது மரணத்தோடு முடிகிறதென வையாபாடல் 102 ஆம் செய்யுள் குறித்துள்ளது. அஃதவ்வாறாக 33 ஆம் செய்யுளிற் பறங்கியர் பற்றிக் குறிப்பிடப்படுவது பொருந்தாது. ஆறாம் செகராசசேகரன் காலத்திலே பறங்கியர் இலங்கையின் வடபகுதியை அரசாளவில்லை. எனவே, வையாபாடல் 33ஆம் செய்யுள், 'சந்திரசேகரன் கோயில்' பற்றி இந்நூலிடைப் புகுத்துவதற்காக இடைச்செருகலாக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அன்றேல் அச்செய்யுளின் இறுதியடியில் ஏதோ தவறேற்பட்டிருக்க வேண்டும். அதனை ஆதாரமாக வைத்துக் கொண்டு இந்நூல் பறங்கியர் காலத்துக்குப் பின்னரே ஆக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனச் சுவாமி ஞானப்பிரகாசர்போன்றோர் கொள்ளும் கருத்தை யேற்பின், 'இலங்கையின் மண்டலத்தோர்தங் காதை' சொல்ல வந்த இவ்வாசிரியர், அதனை ஆறாம் பரராசசேகரனது காலத்துடன் முடித்துச் சங்கிலி மன்னனது ஆட்சிபற்றிய பல செய்திகளையும், பறங்கியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி யரசாண்ட செய்திகளையுங் கூறாதொழிந்தமை விளக்கிக் கொள்ள முடியாத தொன்றாய்விடும்.

கண்ணகிக்குக் காற்சிலம்பு செய்யும் பொருட்டு நாகமணி வேண்டி மீகாமன் இலங்கை சென்ற சம்பவம் 52ஆம் செய்யுள் முதல் 54ஆம் செய்யுள் வரை கூறப்படுகிறது. இச் செய்யுட்கள் மூலக்கதைக்குத் தொடர்பற்ற சம்பவமுடையனவாகையால், அவை இடைச் செருகலாயிருத்தல் கூடுமெனக் கருத இடமுண்டு. எனினும், மட்டக்களப்பிலும் விடத்தற்றீவிலு மேற்பட்ட குடியேற்றம் பற்றிக் கூறுவதற்காகவே அச்சம்பவமிங்கு கையாளப்பட்டிருக்கிறதெனச் சமாதானங் கூறினுமமையும்.

## நூற் பெயர்

'வையாபாடல்' என்று இந்நூலுக்கு அதனாசிரியர் பெயரிட்டிருப்பாரெனல் சந்தேகத்திற்குரியதாகும். ஆக்கியோன் பெயர் சொல்லுஞ் செய்யுளில், இந்நூல் பற்றிய குறிப்பு 'இலங்கை மண்டலத்தோர் தங்காதை' என்றிடப்பட்டிருக்கிறது. அதனால் இந்நூலின் பெயர் 'இலங்கை மண்டலக்காதை'

என்றிருந்ததாகக் கருதலாம். இதற்காதாரமாகக் காப்புச் செய்யுளில் 'இலங்கையின் சீரை யோதிட' என்றும் இரண்டாவது செய்யுளில், 'நாவிலங்கையின் நன்மொழியு ரைத்திட' என்றுங் குறிப்பிடப் பட்டிருத்தல் நோக்கற்பாலது.

ஆசிரியன் பெயரால் அவன் நூல் வழங்கப்படும் மரபும் உண்டு. ஆயின், அவ்வகைப் பெயரீட் டுக்குரிய ஆதார மெதுவும் இந்நூலின்கண் பெறப்படவில்லை. காலப்போக்கில் நூலின் பெயர் மறைந்துபோகப் பின்னர் ஆசிரியன் பெயரால் இந்நூல் வழங்கப்பட்டதாதல் கூடும்.

## நூலின் நோக்கம்

இந்நூலின் நோக்கம் அதன்பாலுள்ள மூன்றாம் செய்யுளாலே தெரிய வருகிறது.

**'இலங்கை மாநகர் அரசியற் றிடுமர சன்றன்**
**குலங்க ளானதும், குடிகள்வந் திடுமுறை தானும்**
**தலங்கள் மீதினி லிராட்சதர் தமையடு திறனுந்**
**நலங்க ளாகுநேர் நாடர சாகிவந் ததுவும்'.**

(யையா-3)

இலங்கையை அரசாண்டமன்னன் குலங்கள் பற்றியும், அங்கே ஆதியில் இருந்த இராட்சதர் களை அவ்வரசர்கள் தோற்கடித்து நாட்டிலே நல்ல ஆட்சியை நிறுவிவந்த சம்பவங்கள் பற்றியும் எடுத்துரைப்பதே இந்நூலின் நோக்கம் என்ற பொருளில் அச்செய்யுள் அமைந்துள்ளது. அந் நோக்கம் இந்நூலில் எந்த அளவுக்கு நிறைவேறியுள்ளது என்பதை ஆராய்வோம்.

தம் காலத்திலேயே இலங்கையை அரசாண்ட மன்னனது குலங்களைப் பற்றி விரித்துக் கூறுவது இந்நூலாசிரியனது முதல் நோக்கமாகக் குறிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது யாழ்ப்பாண மன்னனாக விளங்கிய ஏழாம் செகராசசேகரன் இலங்கை முழுவதற்கும் அரசனாக விளங்கினா னென்பதற்கு ஆதாரமில்லை. அவனைச் சிறப்பித்துச் சொல்வதற்காக ஆசிரியர் 'இலங்கை மாநகர் அரசியற்றிடு மரசன்' என்று கூறியிருக்கலாம். அவனது குலத்தை எடுத்துக் காட்டுவதற்காக ஆதியில் யாழ்ப்பாணத்தை அரசாண்ட அவன் மூதாதையரான 'கோளுறு கரத்துக் குரிசில்' (கூழங்கைச் சக்கரவர்த்தி) கோத்திரத்தை மட்டும் விரித்துரைக்கிறார். கூழங்னகச் சக்கரவர்த்திக்கும் ஆறாம் பரராசசேகரனுக்கு மிடைப்பட்ட மன்னர் பற்றி ஆசிரியர் குறிப்பிடவில்லை. கூழங்கைச் சக்கரவர்த்தி காலந்தொட்டு இந்தியாவிலிருந்து குடிகள் வட இலங்கையிற் குடியேறிய வரலாறு விரித்துரைக்கப் பட்டிருக்கிறது. அவ்வாறு முதற் குடயேறியவர்கள், இராம இராவண யுத்தத்தின் பின் இலங்கை யிலே எஞ்சியிருந்த இராட்சதருடன் சமர் விளைத்தமையும், பின்னர் நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டு வந்தமையும் கூறப்பட்டிருக்கின்றன. எனவே இந்நூலின் நோக்கம் நூலின்கண் பெருமளவு நிறை வெய்தியிருக்கிறது என்றே கூறுதல் வேண்டும். ஆனால், நுதலிய பொருள், வரலாற்று முறையில் எவ்வாறமைகிறதென்பது ஆராயத்தக்கது.

நூலின்கண் தாம் சொல்லும் பொருளுக்கு ஆதாரமென்னவென்பதை ஆசிரியர் முதற்கண் சொல்லிவைக்கிறார். அகத்திய முனிவரின் பேரனான சுபதிட்டு முனிவர் சொல்லி வைத்த கதையை, அவர் கூற்றைத் தழுவித் தான் புகல்வதாக ஆசிரியர் கூறுகிறார்.

வையாபாடலைப் பதினெட்டாம் நூற்றாண்டளவிலே வசனத்திலெழுதிய சிலர் இக்கருத்தைத் திரித்துச் சுபதிட்டு முனிவர் யாழ்ப்பாணம் சென்று ஆறாம் பரராசசேகர மன்னனைக் கண்டு, அவன் அரசாட்சி விரைவிலே அழிந்தொழியுமென்றும் அவனரசைப் பறங்கியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் முறையே கைக் கொள்வர் என்றும் தீர்க்கதரிசனங்கள் கூறினாரென எழுதியிருப்பது நகைப்புக்கிடமான தொன்றாகும். வருங்கால சம்பவங்களை முனிவர் முன்னரே சொல்லிவைத் தாரென ஆங்கிலேயர் இலங்கையை அரசாண்ட காலத்திலே யாரோ இடைச்செருகலாகவும் முன்

பின் முரணாகவும் அப்பகுதியினை எழுதியிருத்தல் வேண்டும். இவ்விடைச் செருகல் கோணேசர் கல்வெட்டிலும் புகுத்தப்பட்டிருப்பது நோக்கற்பாலது. முதற்சங்க காலத்திலிருந்த அகத்திய முனிவரின் பேரன். கி.பி. பதினைந்தாம் பதினாறாம் நூற்றாண்டிலிருந்த ஆறாம் பரராசசேகரனிடம் சென்றானெனல் பொருந்தாக் கூற்றே.

சுபதிட்டு முனிவர் காலம் வரையுள்ள வரலாற்றுப்பகுதியை அம்முனிவர் கூறி வைத்திருக்கலாம். அதனைத் தொடர்ந்து இந்நூலாசிரியர் தன் காலம் வரையுள்ள வரலாற்றினைக் கூறியிருக்கலாம் என்று கொள்ளுவதே பொருத்தமாகும்.

## நூற் பொருள்

வையாபாடல் என்ற இந்நூல் 'இலங்கை யரசன் குலங்களையும் குடிகள் வந்த முறையினையும்' கூற எழுந்த ஒன்றாகையால், நூலாசிரியன் காலத்தரசாண்ட பரராசசேகரன் செகராசசேகரன் குலத் தைக் காட்டுமுகத்தால் யாழ்ப்பாணத்து முதலரசனான கூழங்கைச் சக்கரவர்த்தியின் குலத்தையும், அவன் மைத்துனியாய மாருதப்பிரவையின் வரவையும் முதலிற் கூறிப் பின் வன்னியர் குடியேற்றம் பற்றிய செய்திகளையும், அவர்கள் அடங்காப்பற்றில் ஆதிக்குடிகளை அடக்கி ஆண்ட சம்பவங்களையும் விரித்துரைக்கும்.

வன்னியர்கள் வரவைத் தொடர்ந்து பல்வேறு குடிகள் இந்தியா, சீனா, துருக்கி ஆகிய நாடுகளிலிருந்து வந்தமையும், அவர்கள் மூலமாகப் பல்வகைத் தெய்வங்கள் கொண்டு வரப்பட்டமையும் இந்நூலிற் காணலாம்.

இறுதியாகப் பரராசசேகரன் ஆட்சிக் காலத்தில் நடந்த சம்பவங்களும் அவன் மரணமுங் கூறியமைகிறது இந்நூல். இதன் அமைப்பையும் பொருளையும் நோக்குமிடத்து, இது ஒரு வரலாற்று நூல் என்பது தெரிகிறது. இலக்கிய நோக்குடன் இது செய்யப்படவில்லை யென்பது, இச்செய்யுட்களிற் கற்பனை வளமோ, வர்ணனை நயமோ, அணி அமைப்போ, கதைச் செறிவோ காவியச் சுவையோ எதுவுமில்லாமை காட்டிவிடும்.

வரலாற்று முறையில், இங்கு கூறப்பட்டிருக்குஞ் சம்பவங்களும் ஆண்டுக் கணக்குகளும் ஆதாரபூர்வமானவையா என்பது ஆராயப்பட வேண்டியதே.

இராவணன் இறந்தபின் இலங்கை மன்னனாய் இராமனால் முடி சூட்டப்பெற்ற விபீஷணன் முன்னிலையில் யாழ் வாசிப்பவன் ஒருவன், இலங்கையின் வடகடற்கரையிலே தனக்குக் கிடைத்த மணற்றிடற்காட்டைத் திருத்தி நற்பயிர் செய்து சோலையாக்கி, அங்கு மண்டபமைத்துப் பின் தசரதன் மைத்துனான குல (க்) கேது என்பவனது மகன் கோளுறு கரத்துக் குரிசி' லைக் கூட்டி வந்து, சக்கரவர்த்திப் பட்டஞ் சூட்டி, அந்நாட்டிற்கு யாழ்ப்பாணமெனப் பெயருமிட்டு அதனை அரசாள வைத்தான் என்றும், அப்பொழுது கலியுக ஆண்டு 3000 ஆகியிருந்தது என்றும் இந்நூல் கூறும். இதுவே இதன் முதற் சம்பவமும் ஆண்டுக் குறிப்புமாகும்.

கலியுக ஆண்டு 3000 என்பது, கி.பி. 101 க்குச் சமமானதாகும். அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலே தமிழரசிருந்ததென்பதனையும், யாழ்ப்பாணம் என்ற பெயர் வையா பாடலிற் கூறியுள்ள யாழ்வாசிப்பவன் காரணமாகவே எழுந்ததென்பதனையும் அக்கதை வையாபாடலில் இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்டதன் றென்பதனையும், இதிற் கூறப்பட்டுள்ள கண்ணகிபற்றிய ஆண்டுக்கணக்கு ஆதாரபூர்வமானதே என்பதனையும் நிறுவி, 1966 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் "A Critical Study of Tamil documents pertaining to the History of Jaffna' என்ற தலைப்பில் இப் பதிப்பாசிரியரால் எழுதி வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை[1] வையா பாடல் ஆதாரமற்ற செய்திகள் கொண்ட நூலன்றென்பதைக்காட்டும்.

'கோளுறுகரத்துக் குரிசி'லின் (கூளங்கைச் சக்கரவர்த்தியின்) மாமனான உக்கிரசோழனது மக்கள் சிங்ககேதென்பவனும் மாருதப்பிரவை என்பனளும் இலங்கை சேர்ந்தன ரென்றும்,

மாருதப்பிரவைக்கிருந்த குதிரைமுக நோய்[2] கீரிமலைத் தீர்த்தத்திலாட மாறிற்றென்றும், அதன்பின் அவள் கதிரையம்பதியிற் சென்று 'அரன் மகவினை' வணங்கி வருங்கால், உக்கிரசிங்கசேனன் அவளை மணந்து வாவெட்டி மலையில் மண்டபமியற்றி அங்கிருந்தரசாட்சி செய்தானென்றும், அவர்களுக்குப் பிறந்த 'சிங்க மன்னவன்', தன் மாமனாய காவலன் சிங்ககேதென்பவனிடம் பெண் கேட்டனுப்ப, அவனும் சமதுகி என்ற தன் மகளை அறுபது வன்னியர் புடைசூழ அனுப்பிவைந்தா னென்றும் வையாபாடல் கூறும்.

இக்கதையினைச் சுவாமி ஞானப்பிரகாசர் ஆராய்ந்து, இங்கு கூறப்படும் உக்சிரசிங்கசேனனே குளக்கோட்டு மன்னன் எனவும், மாருதப் பிரவையே ஆடக சவுந்தரி யெனவுங் கருதுவர்.[1] மட்டக்களப்பு மான்மியத்தில் ஆடக சவுந்தரியின் கதை கூறப்படுமிடத்து, அவள் கணவன் மகாசேனன் எனவும் அவன் தட்சணாகயிலையில் சிவாலயங்களை நேர்பண்ணினா னெனவும், அவர்கள் புத்திரன் சிங்ககுமாரனெனவும் விவரிக்கப்பட்டிருக்கிறது[2] கோணேசர் கல்வெட்டிலே, குளக்கோட்டிராமன் திரிகோணமலையிற் கோயிலுங் குளமுங் கட்டுவித்து, அவற்றிற்கான கடமைகள் செய்வித்தற்காக வன்னியரை ஆங்கு குடியேற்றுவித்தானென்று சொல்லப்படுகிறது[3]. கைலாய மாலை என்ற நூலில், 'மன்னர் மன்னனெனுஞ் சோழன் மகளொருத்தி' கடலருவித் தீர்த்தமாடித் தன் நோய் தீர்க்க வந்தவிடத்துக், 'கதிரைமலை வாழு மடங்கன் முகத்தாய்ந்த நராகத்தடலேறு' அவளைக் கைப்பிடித்து, 'வரசிங்கராயன்' எனும் புதல்வனைப் பெற்றனன் என்று சொல்லப்படுகிறது[4].

இக்கதைகள் அனைத்திலும் சில பொதுத் தன்மைகள் இருத்தலை அவதானிக்கலாம். 'சிங்கமன்னவன்' என்று வையா பாடலிற் கூறப்படுபவனே, 'சிங்ககுமார'னென மட்டக்களப்பு மான்மியத்திலும், 'வரசிங்கராய'னெனக் கைலாய மாலையிலும் 'வீரவராய சிங்கம்' என வையா பாடல் வசனத்திலும் சொல்லப்படுகிறான். உக்கிரசிங்கனென யாழ்ப்பாண வைபவ மாலையிலும், உக்கிரசிங்க சேனனெனவையா பாடலிலும், மகாசேனனென மட்டக்களப்பு மான்மியத்திலும், உக்கிரசேன சிங்கமென வையா பாடல் வசனத்திலும், குளக்கோட்டிராமனெனக் கோணேசர் கல்வெட்டிலும் கூறப்படுபவன் ஒருவனேயாகலாம். இவனே முதலில் வன்னியர்களை இலங்கை யிற் குடியேற்றினானெனக் கோணேசர் கல்வெட்டுக் கூறும். ஆனால் வையாபாடல், அவன் மகனான, சிங்கமன்னவன்' அறுபது வன்னியர்களை அடங்காப்பற்றில் முதலிலே குடியேற்றினா னென்னும்.

## வன்னியர் குடியேற்றத்தின் காலம்

கூழங்கையாரியச் சக்கரவர்த்தியின் காலம் கி.மு. 101 எனக் கண்டோம். அவனது மாமன் மகளான மாருதப் பிரவை[1] காலமும் அதனையண்டியேயிருத்தல் வேண்டும். ஒரு சமயம் கி.மு. முதலாம் நூற்றாண்டின் முற்பகுதியாதல் கூடும்.

அவளின் மகனான 'சிங்கமன்னவன் காலம், கி.மு. முதலாம் நூற்றாண்டின் நடுப்பகுதியாக லாம். வையா பாடலின்படி இவனே அறுபது வன்னியர்களை அடங்காப்பற்றிற் குடியேற்றியவனா வான். எனவே, வன்னியர் இலங்கையிற் குடியேறிய காலம் கி.மு.50 ஆம் ஆண்டு வரையிலென வையாபாடல் வாயிலாகக் கொள்ளக் கிடக்கிறது.

மட்டக்களப்பு மான்மியத்தில் ஆடகசவுந்தரியின் அரசுகாலம் கலிபிறந் மூவாயிரத்தொரு நூற்றெண்பதாம் ஆண்டுமுதல் நாற்பது வருடங்களெனச் சொல்லப்படுகிறது. அது கி.பி. 79 முதல் கி.பி. 119 வரையுள்ள ஆண்டுகளுக்குச் சமமானது. இவளது கணவனான மகாசேனனே குளக்

---

1. *சுவாமி ஞானப்பிரகாசர், யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - 1928-பக்கம் 9.*
2. *மட்டக்களப்பு மான்மியம் - '.ஸீ.. நடராசா பதிப்பு - 1962-பக்கம் 32-35*
3. *கோணேசர் கல்வெட்டு - செய்யுள் 5 -14.*
4. *கைலாயமாலை -சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளை பதிப்பு - 1939-பக்கம் 2-3*

கோட்டு மன்னன் என்று கருதப்படுவதால், அவன் வன்னியரை இலங்கையிற் குடியேற்றுவித்த காலம் இம்மான்மியத்தின்படி கி.பி. 100 வரையிலெனக் கொள்ளலாம்.

இவ்விரண்டு கணிப்புகளுக்குமிடையில் 150 ஆண்டுகளே வித்தியாசமாக உள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

## வன்னியரின் ஆரம்ப வரலாறு

இலங்கைக்கு வன்னியர் வந்த வரலாறு பற்றிய குறிப்புக்களே வையாபாடலிற் பெரிதுங் காணப்படுகின்றன. கோணேசர் கல்வெட்டிலும் அவ்வகைக் குறிப்புக்களை அதிகமாகக் காண லாம், இரு நூல்களிலும் கூறப்படும் வன்னியர் வருகை இருவேறு காரணங்களுக்காக ஏற்பட்டன வாகக் காண்கிறோம். அவ் வன்னியர்கள் தென்னிந்தியப் பகுதிகளிலிருந்தே இலங்கைக்கு வந்தன ரென இரு நூல்களும் கூறும்.

தற்பொழுது தமிழ் நாட்டிலே சேலம் முதற் புதுச் சேரிவரை வன்னி குலத்தினர் பரந்து வாழ் கின்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் யார், எவ்வாறு அவர்கள் அங்கெல்லாம் பரந்தனர் என்பன பற்றிப் பல புராணக்கதைகளும் ஐதீகங்களும் உள.

வன்னியர்கள் அக்கினி குலத்தவர் என்பது புராணக்கதை. இது 'வஃநி' என்ற வடசொல்லின் பொருளாய அக்கினி என்ற கருத்தைக் கொண்டெழுந்ததாகலாம் 'சிலை எழுபது' என்னும் நூல், அவர் குல 'மான்மியத்தை' அவ்வாறு கூறும். வன்னியருக்குரிய சின்னம் சிலை (வில்) ஆகும். கல்லா டத்தில் வன்னியருக்குப் பன்றியுற்பத்தி கூறப்பட்டுள்ளது.[1]

''இந்நவீன உற்பத்தி வெறுங் கற்பனையன்று, உண்மைச் சம்பவமொன்று பொதிந்த உருவகமே என்பர் திரு வி. குமாரசுவாமி அவர்கள்[2] ''வன்னியர்கள் பலர் பன்றிக் கொடி யுடையோ ரான சாளுக்கிய அரசரின்கீழ்ச் சேவகத்தமர்ந்திருந்து, பின் தெற்கின்கண்ணிழிந்து மதுரைப் பாண்டியனாகும் சோமசுந்தரனிடம் பணிவிடை பூண்டன ரென்பதும், சோமசுந்தரபாண்டியனே சிவபெருமானாகக் கொள்ளப்பட்டமையின் இப்பெருமான் கார்நிறத்த செங்கட் பிறை எயிற்றுப் பன்றியீன்ற பன்னிரு குட்டிகளை நாற்படையிலும் புகழ் சிறந்த வன்னியராக்கினாரெனக் கற்பிக்கப் பட்டது'' என்பதும் அன்னாரது கருத்தாகும்.

'வன்னியும் வன்னியர்களும்'[3] என்ற பெயரில் திரு சி. எஸ். நவரத்தினம் அவர்கள் 1960 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் வெளியிட்டநூலில், ''வன்னியர்கள் பண்டைக்காலத்திலே தென்னிந்தியா வில் வாழ்ந்து வந்த அக்கினி குலத்தைச் சேர்ந்த ஆரியரல்லாத வகுப்பினராவர். அவர்கள் மறத் தொழில் புரியும் மாவீரர்கள் பரம்பரையிலே தோற்றியவர்கள்; அரச பரம்பரையைச் சார்ந்தவர்கள். அவர்களைத் தென்னிந்திய இராசபுத்திரர்கள் (Rajputs) என்று கூறலாம்'' எனக் குறித்துள்ளார்.

வையாபாடல் நூலை 1922 ஆம் ஆண்டு பினாங்கில் (Penang) பதிப்பித்த திரு இ. து. சிவானந்தன் அவர்கள் அதன் முகவுரையில் வன்னியர்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:-

---

1. *கருமுகிற் கணிநிறத் தழற்கட் பிறையெயிற்*
*றரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச்*
*செங்கோண் முளையிட் டருணீர் தேக்கிக்*
*கொலைகளை வென்னும் படர்களை கட்டுத்*
*திக்குப்பட ரானை வேலி கோலித்*
*தருமப் பெரும்பயி ருலகுபெற வினைக்கு*
*நாற்படை வன்னிய ராக்கிய பெருமான (கல்லாடம்)*

2. Hindu Organ of 8.1.23.

3. Vanni and the Vanniars by C. S. Navaratnam - 1960

''இந்தியாவில், வன்னியச்சாதி, குடியானப்பிள்ளைகளிலொன்றாய் மதிக்கப்பட்டாலும், கள்ளர், மறவர், கணக்கர் அகம்படியாராகிய குடியானப்பிள்ளைகளிலும் பார்க்கக் கீழ்ப்பட்ட சாதியாரென்று மதிக்கப்படுகிறார்கள். ஏனெனில், இவர்கள் பள்ளச்சாதியிலிருந்து தோன்றின ஓர் பிரிவேயாம். இது காரணம் பற்றியே, பள்ளிமுற்றிப் படையாட்சி, படையாட்சி முற்றி வன்னியர், வன்னியர் முற்றிக் கவண்டர் ஆனார்காண்' என்னும் பண்டைவாக்கு இந்நாளிலும் இந்தியாவிலுள்ள எல்லாச் சாதியாராலும் வழங்கப்படுகின்றது.

இந்தியாவிலிவர்கள் கமத்தொழில் செய்யுங் குடியானப் பிள்ளைகளிலொரு வகுப்பினராய் எண்ணப்படுகிறார்கள். கமத்தொழில் செய்பவர்கள் இப்பொழுதும் சுக, பல முள்ளவர்களானபடியால், ஆதிகாலத் தமிழர்கள் கமத்தொழிலைச் செய்த அச் சாதியிலிருந்தே தங்கள் படைகளுக்கு வேண்டிய போர்வீரர்களைத் தெரிந்தெடுத்தார்கள். படையிற் சேர்ந்த அவர்கள் படையாட்சியாரென்றழைக்கப்பட்டார்கள்.

படையிலுள்ள ஒருவன் அநேக சண்டைகளுக்குப் போய் அதிவீர பராக்கிரம முள்ளவனாகவும், விவேகியாகவும் காணப்பெறின், அவன் 'வன்னியன்' என்ற உத்தியோகத்திற் குயர்த்தப்படுவான். இப்படியாக 'வன்னியன்' உத்தியோகத்தைப் பெற்றவர்களிலிருந்தே வன்னியச்சாதி தோன்றிற்று. வன்னிய உத்தியோகத்தில் அதிகம் திறமையுடையவர்களை ராசாக்கள் தெரிந்து 'கவண்டன்' என்னுமுத்தியோகத்திலமர்த்தி வந்தார்கள்.

ஓரரசன் தனக்குப்பின்னா லிராச்சியத்தைப் பரிபாலனஞ் செய்யத் தன் வம்மிசத்தில் உரிமையின்றி இறங்குங் காலத்தில், அவன் படையில் முதன்மையாயிருந்த வன்னியர்கள் அவ்விராச்சியத்தைக் கைப்பற்றி அரசு புரிந்தார்கள். இவ்விதமாக அரசுபுரிந்த வன்னிய ராசாக்கள் சத்திரிய வன்னியர்களென அழைக்கப்பட்டார்கள். இவர்களுக்கு இராயரென்றும், பாளயப்பட்டு வன்னியர்கள் என்றும், பள்ளிராசாக்கள் என்றும் நாமங்களுண்டு''.

'வன்னியர்கள் பல்லவர் குலத்தவர் என்றும் ஒரு கொள்கையுண்டு. பல்லவர் ஆதியிலே பழங்குடி மக்களுக்குத் தொல்லை கொடுக்காது காடுகளை வெட்டிக் குடியேறிவந்த காரணத்தால் அவர்கள் காடுவெட்டிகள் எனவும் அக்காலத்தில் வழங்கப்பட்டனர். அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவரும், தமிழ்ப்புலமையுடையவரும், தொண்டை நாட்டரசருமாய்த் திகழ்ந்து, கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐயடிகள் என்னும் பல்லவர்கோன் ஐயடிகள் காடவர்கோன் எனப்படுகிறார். இவரது பெயர் செப்பேடுகளிற் பரமேச்சுரவன்மன் என்றே காணப்படுகிறது. காடவர் என்னும் பெயரின் வடமொழிப் பெயர்ப்பாகிய வன்னியரென்னும் பெயரான் பின்னர் அப்பல்லவர் வழங்கப்பட்டாரென்று கொள்ள இடமுண்டு. இது வனமென்ப தடியாகத் தோன்றிய வடசொற் சிதைவு. காலப்போக்கிற் பல்லவரென்னும் பெயர் பள்ளிகளென மருவி வழங்கலாயிற், றென்பது புலவர் சிவங்கருணாலய பாண்டியனார் கருத்து.

இவ்வாறாக வன்னியரின் தோற்றம் பற்றிப் பல கருத்துக்கள் வழங்கி வருகின்றன. அவற்றுள் எது கொள்ளப்படினும், அவர்கள் அரசர்களாற் கௌரவிக்கப்பட்ட குலத்தினராகவும் பெரும் வீரர்களாகவும் விளங்கினார்கள் என்பது பெறப்படும்.

## இலங்கையில் வன்னியர்

இலங்கைக்கு வன்னியர் வந்தவரலாறு, ஓரளவு கோணேசர் கல்வெட்டிலும், பெருமளவு வையாபாடலிலும் சொல்லப்பட்டிருக்கிறது. குளக்கோட்டரசன் 'திருகோணமலை நாதர்க்குச்' சேவை செய்யவென மருங்கூரிலிருந்து முதலில் முப்பது வன்னிய குடிகளைக் கொண்டு வந்தானென்றும் பின்னர், 'அரன் தொழும்புக் காட்போதா' தென்று தானத்தார் வரிப்பத்தார் ஆகியோரையும் கொணர்வித்தானென்றும், அவர்களுக்குட் பிணக்குவரின் தீர்த்து வைப்பதற்கென மதுரையிலிருந்து தனியுண்ணாப் பூ பாலனென்ற வன்னிமையை வரவழைத்தானென்றும் கோணேசர் கல்வெட்டுக் கூறும்.

வையாபாடலின்படி, மதுராபுரியிலிருந்து அறுபது வன்னியர்கள், மாருதப்பிரவையின் மகன் சிங்கமன்னவன் (வாலசிங்கன், வரராசசிங்கன்) காலத்தில் அவன் மணவினை சம்பந்தமாக இலங்கை வந்தார்கள். முதல் வந்த அவ்வறுபது வன்னியரும் அடங்காப்பதிக் கனுப்பப்பட்டனர். அவர்களுள் ஒரு வன்னியன் கண்டி நகரில் திசை (Disawa) ஆக இருந்தான். இவனே சிங்கள மக்களுள் வன்னியகுலம் வளர்வதற்குக் காரணனாயிருந்தானென்று கொள்ளலாம்.

இவ்வன்னியர்கள் அடங்காப்பதியில் மேலும் குடியேற்றஞ் செய்யவிரும்பி, மதுரை, மருங்கூர், திருச்சினாப்பள்ளி மலையாளம், துளுவம், தொண்டைமண்டலம் ஆகிய இடங்களிலிருந்து பதினெண் சாதி மக்களையும் வரவழைத்தனர். அப்பொழுது முல்லை மாலாணன், சிவலை மாலாணன், சருகிமாலாணன், வாட்சிங்கராட்சி ஆகிய வன்னியர்களும் வந்து முள்ளிமாநகரிற் குடியேறினர்.

அதனைத் தொடர்ந்து கலி ஆண்டு 3392 இல் (கி.பி.199இல்) வீரநாராயணச் செட்டி யென்போன் அல்லியரசாணிக்கு முத்துக் கொடுப்பதற்காக ஓடத்திற் புறப்பட்டுப் போனவன் புயலுக் கஞ்சிக் ‘கடல் மலையைச் சார்ந்தான்’ அம்மலைக்குக் குதிரைமலை யென்று பெயரிட்டான். அங்கே தன் திரவியங்களைப் புதைத்து வைத்துக் காளியென்னுந் தெய்வத்தைக் காவலிட்டுக் கடற் சிலாபமுண்டாக்கி, அங்கே ஐயனாரை நிறுவிப் பின் செட்டிகுளப்பதிக்கேகி வவ்வாலை, என்ற பெயருடைய கேணியொன்றையும் சந்திரசேகரன் கோயிலையும் உண்டாக்கினான். இச்சம்பவத்தைத் திரு. ஜே.பி. லூயிஸ் என்பவர், பழைய தமிழ்க் கையெழுத்துக் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு எழுதிய நூலில், சுமார் கி.பி.247 இல் மதுரையிலிருந்து பல பரவர்களுடன் வந்த வீரவராயன் செட்டி என்ற பெயருடைய வாணிகன் ஒருவன் மரக்கலம் உடைந்து மன்னாரின் மேற்குக் கரையை வந்தடைந்தான் என்றும், பின் தன்னைச் சேர்ந்தாருடன் வந்து செட்டிகுளத்திற் குடியேறி அங்கே ‘வவ்வாலை’ என்ற பெயருடைய கேணி யொன்றையும் சந்திரசேகருக்குக் கோயில் ஒன்றையும் சுமார் கி.பி. 289 இல் அமைத்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

குதிரைமலை யென்ற இடப்பெயர் கொங்கு நாட்டிலுமிருக்கக் காணலாம். குமணன் ஆட்சியில் இருந்த முதிரமலை, பின்னர் குதிரைமலையென வழங்கலாயிற்று.[2]

இலங்கைச் சிங்க மன்னனுக்குப் பெண்ணனுப்பிய மதுராபுரி மன்னன் சிங்ககேது கொங்கர்கோன் என்றும் வருணிக்கப்படுகிறான். எனவே, அக்காலத்திற் கொங்கு நாடும் மதுராபுரி மன்னனாட்சியிலேயே இருந்ததெனல் சாலும். குறித்த வீரநாராயணச் செட்டி, கொங்குநாட்டுக் குதிரைமலை என்ற ஊரிலிருந்து வந்தவனாகலாம். அதனாற்றான் போலும், தான் இலங்கையில் முதலிலே அடைந்த இடத்துக்குக் குதிரைமலை யெனப் பெயரிட்டான்.

ஆதியில் இலங்கைக்கு வந்த வன்னியர்கள் மதுரை மா வட்டத்திலிருந்து வந்தனரென வையாபாடலும் பிறநூல்களும் கூறும். மதுரை நகரையண்டி அதன் வடமேற்கில் ‘மாங்குளம்’ என்ற ஊரும், அந்நகரின் மேற்கில் கொங்கன் புளியங்குளம் என்ற ஊரும் ஆதித் தமிழ் நாட்டிலிருந்தன என்பதை. மதுரை வட்டாரத்திற் காணப்பட்ட மாங்குளம் கல்வெட்டுக்களாலும் புளியங்குளம் கல்வெட்டுக்களாலும் இப்பொழுது அறிய முடிகிறது. அவ்வூர்களிலிருந்து வந்த வன்னியர்கள், தங்கள் சொந்த ஊர்களின் ஞாபகமாகத் தாம் புதிதாகக் குடியேறிய ஊர்களுக்கும் அப்பெயர்களை இடமுனைந்திருப்பது பொருத்தம்தானே. சில பெயர்கள் நிலைத்தும் சில நிலையாமலும் போயிருக்கலாம். அவ்வாறு நிலைத்த பெயர்களுள் வன்னி நாட்டிலுள்ள மாங்குளம் புளியங்குளம் என்ற அயலூர்ப் பெயர்கள் மதுரை நகரின் அயலேயிருந்த மாங்குளம், கொங்கன் புளிங்குளம் ஆகிய ஊர்களை நினைவுபடுத்துகின்றன.

அடங்காப் பதியில் வந்து குடியேறிய வன்னியர்கள், அப்பதியில் வாழ்ந்த பூர்வீக குடிகளின் கொடுங்கோன்மையைச் சகிக்க முடியாதவர்களாகி, அவர்களை அழிக்க எண்ணி மதுரையைச்

1. Manual of Vanni. 2. ஊரும் பேரும் - சேதுப்பிள்ளை

சார்ந்த இடங்களிலிருந்து மேலும் சில வன்னியர்களை வரவழைத்தனர். இவ்வழைப்பையேற்று வந்தவன்னியர்கள், கறுத்தவராய சிங்கம், தில்லி (தெல்லி), திடவீரசிங்கன், குடைகாத்தான், முடிகாத்தான், வாகுதேவன், மாதேவன், இராச சிங்கன், இளஞ்சிங்கவாகு, சோதையன், அங்க சிங்கன் (அங்கசன்) கட்டையர், காலிங்கராசன், சுபதிட்டன், கேப்பையினார், யாப்பையினார் ஊமைச்சியார், சோதிவீரன், சொக்கநாதன் இளஞ்சிங்கமாப்பாணன், நல்லதேவன், மாப்பாணதேவன், வீரவாகு, தானத்தார், வரிப்பத்தார் ஆகியோராவர்.

## அடங்காப்பதியில் வாழ்ந்த ஆதிக்குடிகள்

வன்னியர்கள் இலங்கைக்கு வருமுன் அடங்காப்பதியில் வாழ்ந்த மக்களினங்காரணமாகவே அதற்கு அப் பெயரிட்டிருத்தல் வேண்டும். அப்பொழுது அம்மக்கள் யாருக்கு மடங்காதவர்களாய் வாழ்ந்தனர் என்பது இதனால் வெளிப்படையாகிறது. வன்னியர் வருவதற்கு முன், அடங்காப் பதியிலுள்ள ஊர்களாய முள்ளிமாநகரிற் சாண்டார் அரசாண்டனர் என்றும், கணுக்கேணியில் வில்லிகுலப் பறையர் அரசு செலுத்தினர் என்றும், தனிக்கல்லிற் சகரன் என்றும் மகரன் என்றுஞ் சொல்லப்படும் வேடர் அரசாட்சி செய்தனர் என்றும், கிழக்கு மூலையில் ‘இராமருக்குத் தோற்றேயகன்ற ராட்சதர்’ ஆட்சி செலுத்தினர் என்றும், மேற்கு மூலையில் அவர்களுள் இழிந்தோராட்சி நடந்ததென்றும் வையாபாடல் கூறும். எனவே, அடங்காப்பதியில் வாழ்ந்த ஆதிக்குடிகள் இவர்களெனல்சாலும். இவர்கள் அப்பொழுது அப்பகுதியைத் தனிக்கல், கணுக்கேணி, முள்ளிமாநகர் கிழக்கு மூலை, மேற்கு மூலை எனவைந்து பகுதிகளாகப் பிரித் தரசாண்டனர் என்பதும் இவற்றாற் புலனாகும்.

## அடங்காப்பதி வாழ் ஆதிக் குடிகளை வன்னியர் அடக்கியமை

வையாபாடலின்படி, கணுக்கேணியில் அரசு செலுத்தி வாழ்ந்த வில்லிகுலப் பறையரைத் திடவீரசிங்கனென்ற வன்னியன் போரில் வென்று அப்பகுதிக்கதிபதியானான். சந்திரவன் என்ற சாண்டார் தலைவனை அவன் பதியாகிய முள்ளிமா நகரிலே போர் செய்து வென்று அப்பற்றை ஆண்டான் மெய்த்தேவன் என்ற வன்னியன். தனிக்கல்லிலே வாழ்ந்த வேடர்கள் தலைவராய சகரன், மகரன் என்பவரை வென்று அவர் குலத்தை அழித்து ஆங்கரசு செய்தான் வாகுதேவன் என்ற வன்னியன். இளஞ்சிங்கவாகென்ற வன்னிய வீரன் இராட்சத குலத்தினரைப் போரில் அழித்து, அவர்கள் வாழ்ந்த கிழக்கு மூலை, மேற்கு மூலையாகிய பகுதிகளைக் கைப்பற்றியாண்டான். இவனே பின்னர் வன்னி நாடு முழுவதற்கும் அதிபதியானான்.

## இந்நூல் கூறும் ஏனைய வன்னியர்

காலிங்கரும் கட்டையரும் கச்சாயிற் குடியேறி வாழ்ந்தனர். தெல்லி என்ற வன்னியன் பழையென்ற ஊர் சென்று வதிந்தான். மூக்கையினார் (யாப்பையினார்) கேப்பையினார் ஆகியோர் கரைப்பற்றில் வாழ்ந்தனர். ஊமைச்சி என்ற பெண் கருவாட்டுக்கேணி என்ற இடத்திற் குடியமர்ந்தாள். அங்கசன் (அங்கசிங்கன்) கட்டுக்குளப்பற்றிலமர்ந்தான். சிங்கவாகு திருகோணமலையை யடைந்தான். வெருகல்தம்பலகமம் ஆய பகுதிக்கு மாமுகன் சென்றான். கொட்டியாரப் பற்றிற் சுபதிட்டன் அரசையாண்டான். மேலும், வையாபாடல், முகமாலையில் மூன்று வன்னியர்கள் வந்திருந்தார்கள் என்று கூறுகிறது. வீரமழவராயன், நீலமழவராயன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார்கள் என்றும், பூபாலவன்னிமை, கோபாலன் ஆகியோர் திரியாய், கட்டுக்குளப் பகுதியில் வாழ்ந்தனர் என்றும், வில்லவராயன் நல்லூரில் வாழ்ந்தானென்றும் இந்நூல் காட்டுகின்றது. மற்றும், செட்டிகுளத்திலே தேவராயன், கோடிதேவன், கந்தவனத்தான் ஆகியோரும், பனங்காமத்திலே துங்கராயனும், துணுக்காயிலே சோதிநாதன், சிங்கவாகு ஆகியோரும் வதிந்தனர்.

## அசுரரால் அழிந்த வன்னியர்

இளஞ்சிங்கவாகு இராட்சதரோடு போர் செய்து வெற்றி கொண்ட போதும், அவர்களை அவ னால் முற்றாக அடக்கிவிட முடியாதிருந்தது. அதனால் அவ்வசுரர்களை அடியோடு அழித்து விட வேண்டுமென்று ஐம்பத்துநாலு வன்னியர்கள் ஒன்று சேர்ந்து அவர்களை எதிர்த்துப் போராடினர். அப்போரிலே அசுரர்கள் பெருஞ் சேதமடைந்து சிதைந்தனரெனினும் அவர்களுக் கெதிராய்ச் சமர்விளைத்த ஐம்பத்துநான்கு வன்னியரும் அப்போரிற் பட்டொழிந்தனர். அதன்பின் எஞ்சி யிருந்த ஐந்து வன்னியரும் அடங்காப்பற்றை ஐந்து பற்றாகப் பிரித்தரசாண்டனர். அவ்வேளையில், வன்னியர் ஐவருங்கூடி இளஞ்சிங்கவாகுவை வன்னிநாடு முழுவதற்கு மதிபதி யாக்கி மெய்த் தேவன், நல்லவாகு, இராசசிங்கன் ஆகியோரைத் தந்திரத்தலைவரும் மந்திரிகளுமாக்கி மதுரைக்கு மீண்டு சென்றனர். செல்லும் வழியிற் கடலிலே திமிங்கிலம் கப்பலைக் கவிழ்க்க ஐவரும் இறந்துபட்டனர். இதையறிந்த அவ் வன்னியர் மனைவியர் தங்கணவரைக் காண ஒடமேறி இலங் கைக்குப் புறப்பட்டனர். வன்னியர் இறந்த செய்தியை அவர் மனைவியர்க் கறிவித்தற் பொருட்டாய் அனுப்பப்பட்ட தூதுவர் யாழ்ப்பாணத்தில் அவ்வன்னிச்சியர் வந்திறங்கிய துறையில் அவரைச் சந்தித்துத் தாங்கொணர்ந்த செய்தியைத் தெரிவித்தனர். தங்கணவர் இறந்தனரென்ற செய்தி செவியுற்ற வன்னிச்சியர் செல்வி வாய்க்கால் எனுமிடத்திலே தீமூட்டி அதனிடை வீழ்ந்து உயிர் துறந்தனர். அவ்வாறிறந்த வன்னிச்சியர் பின்னர் நாச்சிமாரென வழிபடப்பட்டனர்.

மதுரையிலிருந்து ஓடமேறி வந்த வன்னிச்சியருள் ஒருத்தி மட்டும் தன் கணவன் கண்டி நகரிலே திசையாக (திசாவ) இருக்கிறானென் றறிந்து அங்கு சென்றாள்.

## வன்னியர்பற்றிய பிறநூற் குறிப்புக்கள்

இலங்கை வன்னியர்பற்றிய சில குறிப்புக்களை யாழ்ப்பாண வைபவமாலையிலும், மகாவம்சம் என்ற இலங்கை வரலாறு சம்பந்தமான பழைய பாளி நூலிலும் காணலாம். அவற்றுள் வன்னியர் காலம்பற்றி நிர்ணயிக்க உதவும் குறிப்பினை மட்டும் கவனிப்போம்.

'சாலிவாகன சகாப்தம் 515 ஆம் (கி.பி. 593) வருஷத்திலே இலங்கை யரசனாயிருந்த அக்கிரபோதி மகாராசன், அவ்வன்னியர்கள் தாங்களும் அரசர்களென்னும் எண்ணங்கொள்ளப் பார்த்ததை அறிந்து அவ்வன்னியர்களின் அதிகாரத்தைக் குறைத்துத் தன் ஆணையைச் சரியாகச் செலுத்தி வந்தான். அதுமுதல் அவ்வன்னியர்கள் நாட்டதிகாரிகளாய் மாத்திரம் ஆண்டு வந்தார்கள் என்று யாழ்ப்பாண வைபவ மாலை கூறும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவர் மகாவம்சத்தைப்பற்றி அறிந்திருக்கவில்லை. அந்நூல் அப்பொழுது பாளி மொழியில் இருந்தமையாலும், சில புத்த பிக்குகளின் கையில் மட்டுமே அது மறைந்து கிடந்தமையாலும், அந்நூல்பற்றிப் பெரும்பாலான சிங்கள மக்களே அறியாதிருந்தனர். சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே பொதுமக்களுக்குத் தெரியவந்த மகாவம்சத்தில், முதலாம் அக்கபோதி மன்னன் கி.பி. 568 முதல் 601 வரை அரசாண் டான் எனக் கூறப்பட்டுள்ளது. அக்கபோதியின் காலம்பற்றிய குறிப்பு, மேற்குறித்த இருவேறு வாயிலாகவும் ஒத்திருக்கக் காண்கிறோம். அக்காலத்திலே வன்னியர்கள் ஆட்சிசெலுத்தும் நிலையில் இருந்தார்கள் என்பது இதனாற் பெறப்படுகிறது. எனவே, கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பின்னரே வன்னியர் இலங்கை வந்தனர் என்றுங் கூறுவோர் கருத்துப் பொருந்தாமை இதனாலறி யப்படும்.

## வரலாற்றுத் தடுமாற்றங்கள்

கூழங்கைச் சக்கரவர்த்தியைக் கா்லிங்கச் சக்கரவர்த்தியென வலிந்து கண்டும், 'கோளுறு கரத்துக் குரிசி' லாய கூழங்கைச் சக்கரவர்த்திக்கு விஜய கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தியென்ற

பட்டத்தைத் திணித்துக் கட்டியும் வரலாற்றைப் பெரிதுந் திரிபுபடுத்திய சரித்திர ஆசிரியர் சிலர், பெயர்த் தடுமாற்றங்களிற் சிக்குப்பட்டு, யாழ்ப்பாணத்திலே தமிழர் ஆட்சி கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பின்னரே ஏற்பட்டதென நாட்டப் பெரிதும் முனைந்துள்ளனர். கூழங்கைச் சக்கர வர்த்தி வேறு, ஆரியச்சக்கரவர்த்தி வேறு என்பதைக் காண முடியாத வரலாற்றாசிரியர்கள், அவ்வர சரிருவரது வரலாற்றையும் ஒன்றுடனொன்று கலந்து, அவிழ்க்க முடியாத சிக்கலாக்கி மலைப்புற்றி ருக்கிறார்களென்பது,இப்பொழுதுள்ள யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர்களின் முரண்பாடுகளால் தெள்ளிதிற் புலப்படும்.

கூழங்கைச் சக்கரவர்த்தியே யாழ்ப்பாணத்தின் முதலரசனாவான். அவன் காலம் கி.மு. 101 வரையிலாமென வையாபாடல் கூறும். வையா பாடல் நம்பத்தக்க வரலாற்று நூல் என்று நாம் கண்டபின், இதனை நம்பாதுவிட நியாயமில்லை. குளக்கோடனும் கூழங்கைச் சக்கரவர்த்தியும் ஒருவரென்றோ, அன்றி உறவினரென்றோ எங்குங் கூறப்படவில்லை.

உக்கிரசிங்க சேனனும் குளக்கோடனும் ஒருவரே யென்று கொண்டபோதும், அவருக்கும் கூழங்கைச் சக்கரவர்த்திக்கும் ஆதி உறவு எதுவுமில்லை (உக்கிரசிங்க சேனன் மனைவி கூழங்கைச் சக்கரவர்த்தியின் மைத்துனி என்பதைத் தவிர)

மாகன் என்ற பெயர் கொண்ட காலிங்கச் சக்கரவர்த்தி இலங்கையின் - பெரும் பகுதியினைக் கி.பி. 1215 முதல் 1242 வரை ஆண்டவன். யாழ்ப்பாணத்துக்கும் அவன் ஒருகால் அரசனானா னென இலங்கை வரலாறு கூறும். அவனே காலிங்கச் சக்கரவர்த்தியாவன். இவ்வாறே கி.பி.1245 ஆம் ஆண்டளவிற் சந்திரபானு என்ற சாவகனொருவன் படையெடுத்து வந்து இலங்கையிற் பல பாகங்களைக் கைப்பற்றினான். அவன் சாவகச் சக்கரவர்த்தியாகலாம். இவன் காரணமாகவே யாழ்ப்பாணத்திற் சாவகச்சேரி (சாவகர் சேரி), சாவாங்கோட்டை (சாவகர் கோட்டை) ஆகிய இடப் பெயர்கள் ஏற்பட்டன.

இனி ஆரியச் சக்கரவர்த்தியென்பான் கி.பி. 1275 ஆம் ஆண்டளவில் 'ஈழ நாட்டின்மேற் படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றிப் பெரு வெற்றியுடன் திரும்பினான்[1] என்றும், அவன் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் அமைச்சனாகவும் படைத்தலைவனாகவும் விளங்கியவன் என்றும் 'பாண்டியர் வரலாறு' கூறும். இவனைப் புகழேந்திப் புலவர் ஈழநாடு சென்று 'ஆரிய சேகரன்' எனப் பாடிப்பரிசில் பெற்றாரென்று தமிழ் நாவலர் சரிதை கூறும்[2]. அவன் மதிதுங்கன் என்ற இயற்பெயருடன் பாண்டி நாட்டிலுள்ள சக்கரவர்த்தி நல்லூரில் வாழ்ந்தவன் என்றும், 'தனி நின்று வென்ற பெருமாள்' எனும் பட்டம் பெற்றவனென்றும் அந்நூல் கூறும்.

'கோளுறு கரத்துக் குரிசி' லாய கூழங்கைச் சக்கரவர்த்தியை இவ்வாரியச் சக்கரவர்த்தியுடன் வரலாற்றாசிரியர் பலர் பிணைத்தமையாற்றான், அவன் பெயர் கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தியெ ன்றும், விஜய கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தியென்றுந் திரிந்து, இவன் காலத்துடன் இணைந்து முதல் யாழ்ப்பாணத் தமிழ் மன்னன் கி.பி. 13 ஆம் நூற்றாண்டினனென்னுங் கொள்கைக்கிட மளித்தது போலும்'

## பரராசசேகரன் வரலாறு

வையாபாடலின் இறுதியிலே பரராசசேகரன் பற்றிய குறிப்புக்கள் சில காணப்படுகின்றன. தென்னிலங்கை யரசர்சிலர் கொடுங்கோலோச்சிய காரணத்தாற் குடிசனங்கள் பரராசசேகரன் பால் முறையிட, அவன் தம்பியரோடு படை நடத்திச் சென்று பகையரசை அடக்கினான். பின்னர், ஆறாம் பரராசசேகரனாகிய அவன் தென்னிலங்கையிலே கோயிலொன்று கட்டுவதற்காகத் 'தன்னகர்த் தொண்டைமண்டலந்தனிலுகந்தருளும் கன்னதேவருக்கொரு திருமுக மனுப்பினன்' என்று

1. T. V. *சதாசிவ பண்டாரத்தார் - பாண்டியர் வரலாறு - மூன்றாம் பதிப்பு 1956 - பக். 147.*
2. *தமிழ் நாவலர் சரிதை - கழகப் பதிப்பு - பக். 121, 122.*

வையாபாடல் 89 ஆம் செய்யுள் கூறும். 91ஆம் செய்யுளில், 'எங்குலத்தோன் பரராச னிலங்கைதனிலரசுபுரிந்து...' என்று அக் கன்னதேவர் கூறுவதாகச் சொல்லப்படுகிறது. இவற்றிலி ருந்து பரராசசேகரனது மூதாதையர் தொண்டைமண்டலத்தவர் என நாம் ஊகிக்கலாம்

## வன்னிநாட்டுத் தெய்வங்கள்

வன்னி நாட்டுக்கு முதலில் வணக்கத்துக்குரிய தெய்வங்களாக வந்தவை காளியும் ஐயனாரும் சடைமுனியுமென வையாபாடல் மூலமாக அறியக் கிடக்கிறது. வீரநாராயணச் செட்டி இலங்கைக்கு வந்தபோது, குதிரைமலையின் கண்காளியையும், வவ்வாலையென்ற கேணிக்கருகே சடைமுனி யையும் சாத்தனையும், தன் திரவியங்களுக்குக் காவலாக வைத்தான். தட்சணகைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு ஆகியவற்றின்படி அப்பொழுது திருகோணமலையிலே அரன்கோயிலு மிருந்தது. அதுமட்டுமன் றிக் கதிரையம்பதியில் அரன்மகவின் கோயிலுமிருந்ததாகக் குறிப்பிடப் படுகிறது. வீரநாராயணச் செட்டி கட்டுவித்த கோயில்களுள் சந்திரசேகரன் கோயிலுமொன்று.

பல காலங்களுக்குப் பின்வந்தவர்கள், காட்டு விநாயகரைக் குலதெய்வமாகக் கொணர்ந்தனர். அவர்களோடு வந்த சிலர் வீரபத்திரனையும் கொண்டு வந்தனர்.

ஆறாம் பரராசசேகரன் காலத்தில் ஐங்கரன் குமரேசன் மூத்தநயினார், சித்திரவேலாயுதர் ஆகிய தெய்வங்களும் கொண்டுவரப்பட்டன.

தங்கள் கணவர் இறந்த மாத்திரத்தே எரிபுகுந்துயிர் துறந்த கற்புடை உயர்குலப் பெண்கள், 'நாச்சிமார்' எனுந் தெய்வங்களாகப் போற்றப்பட்டனர். அவ்வாறு வீரமரண மெய்திய வன்னியரும் தேவுக்களாகவே[1] மதிக்கப்பட்டனர்.

பிற்காலத்தில் வன்னி நாட்டிலே புகழ்பெற்ற தெய்வமாக விளங்கிய பத்தினி அல்லது கண்ணகி பற்றியோ, நாகவணக்கம் பற்றியோ எதுவும் இந்நூலிற் குறிப்பிடப்படவில்லை. இக்காலத்திற் புகழ்பெற்று விளங்கும் மடு மாதா கோயில், வன்னியர் ஆட்சிக் காலத்திலே கண்ணகி கோயிலாயி ருந்ததென்பது கர்ணபரம்பரைக் கதை. இப்பழமையான கூற்றையாதரிக்கும் வகையிலே திரு லீவேர்ஸ் என்பவர் தமது 'வடமத்திய மாகாணக் கைநூலி'ல், 'மடுவிலிருக்கும் தூயமேரி மாதாவின் திருக்கோயில் புத்த சமயத்தினராலும் அநேக தமிழ் யாத்திரிகர்களாலும் பத்தினி அம்மன் கோயிலென்றே வழிபடப்பட்டு வருகிறது'[2] என்று குறிப்பிட்டுள்ளார்.

## கோணேசர் கல்வெட்டு நூல்

கோணேசர் கல்வெட்டென்ற நூலிற் குளக்கோட்டு மன்னன் ஆலயமைத்தது கலி பிறந்து 512 ஆம் ஆண்டிலெனச் சொல்லப்படுகிறது. இவ்வாண்டுக்கும் ஏனைய நூல்களில் வித்தியாசமிருக் கக் காண்பதால், இந்நூலில் கூறப்படும் ஆண்டுக் கணக்கிலே தவறேற்பட்டிருக்கலா மென்றெண்ண இடமுண்டு. 'பறங்கியர்', 'உலாந்தா மன்னன்', 'இங்கிலீசர்' ஆகியோர் இலங்கையை அரசாண்ட சம்பவங்கள் இதிற் சொல்லப்பட்டிருப்பதால், இந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டள வினதென்றே கொள்ள வேண்டும். அன்றேல், அச்சம்பவங்கள் பிற்சேர்க்கையாதல் வேண்டும். யாழ்ப்பாண வைபவ மாலை அவ்வரசன் பெயரைக் குளக் கோட்டன் எனக் குறிப்பிடும். 'குளக்கோடன்' என்பது குள மும் கோட்டமுஞ் சமைத்தவன் எனப் பொருள்படுங் காரணப்பெயரேயாம். அவனியற்பெய ரின்ன தென்பதனை இவ்வாசிரியராற் றெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவன் வரலாறு இந்நூலா சிரியர் காலத்திற் பழமை யெய்தியிருந்தது போலும். கோணேசர் கல்வெட்டு அவன் பெயரைக் 'குளக்கோடன்' என்றே குறிப்பிடும். குளத்தின் வரம் பமைத்தவனென்பது அதன் பொருளாகும். குளக்கோடு என்பது தென் இந்தியாவில் கேரளம் போன்ற பகுதிகளில் ஒரு குடும்பப் பெயராக வழங்கி வருவதால், அக்குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற கருத்திலும் அவன் குளக்கோடன் எனக் குறிக்கப்பட்டிருத்தல் கூடும். அல்லது இவன் பின்னரே அக்குடும்பப் பெயர் ஏற்பட்டது என்றுங் கருதலாம்.

கோணேசர் கல்வெட்டினைக் கவிராசர் செய்தாரென அந்நூல் முகப்பிற் பொறிக்கப்பட்டிருக்கிறது. 'கவிராசர்' என்பது புலவனின் சிறப்புப் பெயரேயன்றி இயற்பெயரன்று. நூற்பொருள் சொல்லும் செய்யுளில் அந்நூலாசிரியன் பெயர் 'கவிராசவரோதய விற்பன்னன்' எனக் கூறப்படுகிறது 'கவிராச' னென்பதும் 'விற்பன்ன' னென்பதும் விசேடணச் சொற்களாகக் கருதினால், 'வரோதயன்' என்பதே அந்நூலாசிரியன் பெயராகக் கொள்ளக்கிடக்கிறது. அது கூட இயற்பெயரா அன்றி விசேடணச் சொல்லா என்பது ஐயத்துக்கிடமானதே. ஏனெனில், வரோதயன் என்றொரு புலவனைப் பற்றி யாவரும் எங்குங் குறிப்பிடவில்லை. எனவே, இந்நூலை வேறொரு பெயருள்ள புலவன் எழுதியிருக்கலாமோ என்று சந்தேகிக்க இடமுண்டு. அவன் கவிராசனென்ற விருதையுடையவனாதல் சாலும். கோணேசர் கல்வெட்டின் காப்புச் செய்யுள், இச்சந்தேகத்தினை மேலும் வலுப்பெறச் செய்வதா யமைந்துள்ளது. இந்நூலின் காப்புச் செய்யுளும் வையாபாடலின் காப்புச் செய்யுளும் ஒரே செய்யுளின் இரு பிரதிகளாய் அமைந்திருப்பதனை நோக்குமிடத்து, அவ்விரு நூல்களையும் ஒரே ஆசிரியர் இயற்றியிருப்பாரோ என எண்ணத் தோன்றுகிறது. குறித்த சொல், ஒன்றில் 'கோணை' யென்றும், மற்றதில் 'இலங்கை' யென்றும் நூலுக்கேற்றவாறு மாற்றப்பட்டிருக்கிறது. மூன்றாமடியின் மூன்றாஞ் சொல், ஒன்றில் 'சாமி' என்றும் மற்றதில் 'தயங்கு' என்றும் மாறிக் காணப்படுகிறது. இவற்றைவிட அச்செய்யுட்களில் வேறெவ்வித பேதமுமில்லை. இரண்டாமடியில் 'எவ்வுலகம் யாவையும்' எனப் பொருள் மயக்குற ஒன்றிலிருப்பது போலவே மற்றதிலும் அமைந்திருக்கிறது. வையாபாடல் ஏடுகளிற் காணப்பட்டபடி 'எவ்வுலகம் யாவையு' மெனல் பொருந்தாதென இப்பதிப் பின் காப்புச் செய்யுளில் அப்பகுதி 'உலகம் யாவையு' மெனமாற்றப்பட்டிருத்தலை அவதானிக்கலாம், ஒரே உருவும் ஒரே பொருளும், ஒரே வழுவும், ஒரே சொற்களும் கொண்டமைந்த அவ்விரு காப்புச் செய்யுட்களும் இருவேறு புலவர்களாற் செய்யப்பட்டனவாதல் சாலாது. மேலும், வையாபாடல் 39ஆம் செய்யுளிற் 'குளக்கோடன்' என்று எழுதியிருப்பது போலவே இந்நூலிலும் அவ்வரசனைக் குறிப்பிடுகிறார். இந்நூலிற் குறிப்பிடப்படும் 'தானந்தார்', 'வரிப்பத்தார்' ஆகியோர் அந்நூலிலும் குறிக்கப்பட்டுள்ளனர்.

இச்சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு நோக்குமிடத்து வையாபாடலைச் செய்த ஆசிரியரே இந்நூலையும் செய் திருக்கலாமென்று தோன்றுகிறது. அந்நூலிற்போல இந்நூலிலும் இடைச் செருகல்கள் பல இடப்பட்டிருக்கின்றன. வையாபுரி ஐயர் 'செகராசசேகர மகாராசாவின் சமஸ்தான வித்துவான் என வையாபாடல் ஏடுகளின் முகப்பிலெழுதப்பட்டிருத்தலவதானிக்கத்தக்கது. சமஸ்தான வித்துவானுக்குக் 'கவிராசர்' என்ற விருது வழங்கப்படுவதில் வியப்பேதுமில்லை. வையாபாடல் எழுதிய பின் அவருக்கு அந்த விருது வழங்கப்பட்டிருக்கலாம்.

## கல்வெட்டுச் சான்று

கோணேசர் கோயிலில் இருந்ததாகக் கூறப்படும் கல்வெட்டொன்று, இப்பொழுது திருகோணமலைக் கோட்டை வாசலிற் காணப்படுகிறது. கோணேசர் ஆலயத்தைப் பிரித்துப் பறங்கியர் பிறடெறிக் (Fredric) கோட்டையைக் கட்டிய போது, அக்கல்வெட்டுள்ள கல், கோட்டை வாசலின் இடது பக்கத் தூணில் வைத்துக் கட்டப்பட்டுவிட்டது என்று கருதப்படுகிறது. அக்கல் வெட்டில் இப்பொழுது காணப்படும் எழுத்துக்கள் பின்வருமாறிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| **'ன** | **னே** | **குள** |
| **காட** | **முடடு** | |
| **ருப** | **பணியை** | |
| **னனே** | **பறங்கி** | |
| **ககவே** | **மனன** | |
| **னபோ** | **னனா** | |

**னை** **யய** **றற**
**தேவை** **த**
**ரை**
**கள'**

இதனை ஆராய்ச்சி செய்து திருகோணேஸ்வரம் என்னும் நூலை எழுதிய புலவர் வை. சோமாஸ்கந்தர் அவர்களும், திரு. அ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் பின்வருமாறு கருத்துக்கொண் டுள்ளார்கள்:

**'முன்னே குளக்**
**கோடன் மூட்டுந்**
**திருப் பணியைப்**
**பின்னே பறங்கி பி**
**ரிக்கவே மன்னவ**
**பின் பொண்ணாத**
**தனை யியற்ற வழி**
**த் தேவைத்து**
**எண்ணாரே பின்**
**னரசர்கள்'.**

இக்கல்வெட்டுப் பாடலினைச் செவிவழிச் செய்தியாகவைத்துப் பாதுகாத்துவரும் திருகோண மலைப்பழங்குடி மக்கள், அதனைப் பின்வருமாறு கூறுகின்றார்கள்:

**முன்னே குளக்கோடன் மூட்டுந் திருப்பணியைப்**
**பின்னே பறங்கி பிரிக்கவே - மன்னாகேள்**
**பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணன் ஆண்டபின்**
**தானே வடுகாய் விடும்.**

யாழ்ப்பாண வைபவமாலையிலும், கோணேசர் கல்வெட்டு என்ற நூலிலும், வையா வசனத் திலும் இக்கதையின் விரிவினையே சுபதிட்டு முனிவர் வாயிலாகக் கேட்கிறோம். ஒன்றில் இக்கல் வெட்டு அக்கதைக்கு இடமளித்திருக்க வேண்டும், அன்றேல் அக்கதை இக்கல் வெட்டுக்குக் காரணமாயிருந்திருக்கவேண்டும். வையா பாடற் செய்யுள் நூலில் அக்கதை காணப்படாமை கவனிக்கத்தக்கது.

# யாழ்ப்பாணம் என்ற பெயரின் காரணங்கள் பற்றிய கருத்தாய்வு

வையா பாடல் என்ற நூல் வச்சிரவாகுவின் மைந்தனான இராவணன் என்றோதும் அரக்க அரசன், அயோத்திப்பதி அரசனான தசரதன் மகன் இராமனுடனாற்றிய போரிலே தோற்றதும், அதன் பின் இராமன் விபீடணனுக்கு முடிசூட்டிச் சென்றதும் கூறித் தொடங்குகிறது. அதன் பின் பன்னிரண்டாஞ் செய்யுளாய,

'அன்னது நிற்க விபீஷணன் றன்முன்
அரிய யாழ் வாசினை புரிவோன்
மின்னுள விலங்கை வடகடற் கரையில்
மேவிய மணற்றிடற் காட்டில்
தன்னிகர் பிறிதொன் றிலாதநல் வருக்கை
தாலிளம் பூகமாத் தேங்கு
கன்னலென் றுரைக்கும் பயிரினை யியற்றிக்
கற்பக தாருவென் றிசைத்தான்'

என்பது, இலங்கையின் வடகடற் கரையிலுள்ள மணற்றிடலினை விபீடணன் முன் யாழ் வாசித்த ஒருவன் எவ்வாறு திருத்தி வளநாடாக்கினான் என்பதை விளக்கும். அதன் அடுத்த செய்யுளாய,

'கற்பக தருவுங் காமர்மண் டபமுங்
காசினி தனிற்புரிந் ததற்பின்
தற்பரன் தன்னை நினைந்துசென் றருளித்
தசரதன் மைத்துன னான
விற்கரக் குலக்கே திவனென வுரைக்கும்
வீரனை வணங்கி யான்புரிந்த
நற்புவி தனக்கு நாயகம் புரிய
நாதனே வேண்டுமென் றுரைத்தான்'

என்பதில், அந்த யாழ் வாசினை புரிவோன் தசரதன் மைத்துனனான குலக்கேது என்பவனை வணங்கித் தான் வளப்படுத்திய மணற்றிடல் நாட்டினைப் பரிபாலிக்க ஒரு அரசகுல நாயகன் வேண்டுமெனக் கேட்டதாகச் சொல்லப்படுகிறது. அடுத்து செய்யுளாய,

'யாழிசை பயில்வோன் இசைத்தசொற் கேட்டங்
கிதமுறுந் தனதுமைந் தர்களிற்
கோளுறு கரத்துக் குரிசிலை யளிப்பக்
கொற்றவன் சக்கர பதியென்
நேர்பெறும் புவியி னிலங்கையாழ்ப் பாண
மிருந்தர சியற்றின னந்நாள்
நாளுறு கலிமூ வாயிர வருடம்
நாடர சளித்தவ னிருந்தான்'

என்பதில், குலக்கேது தன் மைந்தர்களுட் 'கோளுறுகரத்துக் குரிசிலை' இலங்கை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியதும், அவன் அங்கிருந்து அர்சியற்றியதும், அப்பொழுது கலியுகம் 3000 ஆண்டாக இருந்தது என்பதும் சொல்லப்படுகின்றன. கலியுகம் 3000 என்பது, கி.மு. 101 ஆம் ஆண்டுக்குச் சமமானதாகும். அப்பொழுதே இலங்கையின் வடபாகத்திலிருந்த மணற்றிடற் பகுதிக்கு யாழ்ப்பாணம் என்ற பெயர் அமைந்திருந்தது என்பது வையாபாடல் ஆசிரியர் கருத்தாகத்

தெரிகிறது. 'கோளுறு கரத்துக் குரிசில்' என வையாபாடல் கூறும் அரசனே பின்னர் கூழங்கைச் சக்கரவர்த்தியென வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் அநுராதபுரப் பகுதியிலிருந்து அரசாண்ட வரலாற்றுச் சம்பவமும், சங்கப் புலவர்களுள் ஒருவராக விளங்கிய ஈழத்துப் பூதன்றேவனார் வரலாறும் அக்காலத் தில் வட இலங்கையிலே தமிழர் சமுதாயம் வளர்ந்திருந்தது என்பதற்கு தக்க சான்றுகளாகும். சங்ககாலம் என்பது கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும். கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமென அறிஞர் கணக்கிட்டுக் கூறியுள்ளனர். அதனால், ஈழத்துப் பூதன்றேவனார் காலமும் அக்காலப் பகுதியினதாகவே அமையும். ஈழத்தில் அப்பொழுது தமிழ்க் கல்வி சிறந்திருந்தது என்பதற்கு, அவர் செய்த நற்றிணைப் பாடல் நாலும், குறுந்தொகைப் பாடல் மூன்றும், அகநானூற்றுப் பாடல் மூன்றும் சான்று பகர்வனவாம். எனவே கி.மு. 101 அளவில் வட இலங்கையில் மன்னர் ஆட்சி நடைபெற்றது என்பது நம்பத்தகாததொன்றன்று.

'யாழ்ப்பாணம்' என்ற பெயர் வந்த காரணத்தை வையாபாடல் துலக்கமாகச் சொல்லிவைக்கவில்லை. யாழ்பாடி ஒருவனால் வளப்படுத்தி ஆட்சி அமைக்கப்பட்டமையால், அதன் பெயர்க்காரணம் வெளிப்படையானதே எனக் கூறாது விட்டிருக்கலாம். 'கைலாய மாலை' என்ற கி.பி.17 ஆம் நூற்றாண்டு நூல், உக்கிர சிங்கனுக்கும் மாருதப்புர வல்லிக்கும் மகனான வாலசிங்கன் என்பவனால் யாழ்பாடி ஒருவனுக்குப் பரிசாக வழங்கப்பட்டமையால் அது யாழ்ப்பாணம் என்ற பெயரைப் பெற்றது என்று கூறும். அதன்படி யாழ்ப்பாணம் என்ற பெயர் கி.பி.8 ஆம் நூற்றாண்டிலே ஏற்பட்டதாகக் கொள்ள வேண்டும்.

கி.பி 18 ஆம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட 'யாழ்ப்பாண வைபவமாலை' என்ற நூல், கைலாய மாலையைப் பின்பற்றி, மாருதப்புர வல்லிக்கும் உக்கிரசிங்கனுக்கும் மகனானவனும் செங்கடக நகரில் அரசு செலுத்தியவனுமான வாலசிங்கன் அந்த நிலப்பகுதியை அந்தகக் கவிவீரராகவன் என்ற யாழ்பாடிக்கு கொடையாக வழங்கினான் என்று கூறும். இதில், 'யாழ்ப்பாண வைபவமாலை' நூலாசிரியர், குளக்கோட்டன் ஆடகசௌந்தரி என்ற பெயர்களுக்குப் பதிலாக வாலசிங்கன் மாருதப்புரவல்லி என்ற பெயர்களையிட்டு தடுமாறியிருக்கிறார் என்று சுவாமி எஸ். ஞானப்பிரகாசர் கூறுவர். அவர் கருத்துப்படி வையாபாடலிற் சொல்லப்பட்ட யாழ்ப்பாடியின் கதையையே யாழ்ப்பாண வரலாற்றாசிரியர்கள் அந்தக் கவிவீரராகவன் கதையாக விரித்துப் பிற்காலத்திலிருந்த கவிவீரராகவன் ஒருவன் வரலாற்றோடு தடுமாற்றமுற்றிருக்கிறார்கள்.

'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூலின் ஆசிரியர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, கி.மு.2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏலேலசிங்க மன்னனால் அந்தகனான யாழ்பாடி ஒருவனுக்கு அந்நிலப் பகுதி கொடையாக வழங்கப்பட்டதென்பர். அதற்கு ஆதாரமாக தனிப்பாடற்றிரட்டிற் காணப்படும்,

'நரைகோட் டிளங்கன்று நல்வள நாடு நயந்தளிப்பான்
விரையூட்டு தார்ப்புயன் வெற்பீழ மன்னனென் றேவிரும்பிக்
கரையோட்ட மாக மரக்கலம் போட்டுனைக் காணவந்தாற்
றிரைபோட் டிருந்தனை யேலேல சிங்க சிகாமணியே

என்ற பாடலைக் காட்டுவர்.

மேலே உள்ளவாறு யாழ்ப்பாணப் பெயர்க்காரணம் காட்ட முற்பட்டோர் யாவரும் யாழ்ப்பாடியை மையமாக வைத்தே பல்வேறு கருத்துக்களைத் தருகிறார்கள். உண்மையை அறிவதற்கு அவர்கள் கூற்றுக்களை ஆராய்ந்து பார்த்தல் அவசியமாகிறது. அதற்கு முன், யாழ்ப்பாணப் பெயர்க் காரணம் கூற முற்பட்ட ஏனையோர் கருத்துக்களையும் கவனிப்பது பொருத்தமாயிருக்கும்.

இலங்கையின் வடமாகாணப் பெயர்களைப் பற்றி ஆராய்ந்த எஸ். குமாரசுவாமி என்பர் பின்வருமாறு கூறியுள்ளார். 'குபேரன், இராவணன் ஆதியோர் காலந்தொட்டு ஈழம் யாழ்இசை வன்மைக்குப் பெயர்பெற்றிருந்தது. ராஜராஜ பாண்டியன் மதுரையில் அக்காலத்தே வாழ்ந்த யாழ்

விற்பன்னர்களாகிய வீரபத்திரன், பத்தினி ஆகியர்வளுடன் போட்டியிட ஈழமண்டலத்திலிருந்து யாழ்வித்தகர்களை அழைத்திருந்தமை ஈழத்து யாழ்இசை வன்மைக்குச் சான்று பகரும். எனவே ஈழத்துத் தமிழ் மன்னர்கள் அங்கிருந்த இசைவாணர்கள் காரணமாக அவ்விடத்துக்கு யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டிருத்தல் இயல்பானதே.

முதலியார் ஏ.எம். குணசேகர என்ற ஆய்வாளர், நல்லூர் என்ற பெயரின் சிங்கள மொழி பெயர்ப்பிலிருந்தே யாழ்ப்பாணம் என்ற பெயர் வந்திருக்கிறது என்று காட்டுவர். 'நல்ல' என்ற கருத்தைக் கொண்ட சிங்களப்பதமாய 'யகபத்' என்பதிலிருந்து 'யாப்பா' என்ற பகுதியும், 'ஊர்' என்ற கருத்தைக் கொண்ட சிங்களச் சொல்லாய 'நே' என்பதுங் கூடிச் சிங்களத்தில் 'யாப்பனே' எனவாகி, 15ஆம், 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளில் ஆரியச் சக்கரவர்த்திகளின் தலைநகராய நல்லூரைக் குறிக்க அமைந்துள்ளது என்பர் அவர்.

யாழ்ப்பாணம் என்ற சொல் ஆக்கத்துக்கான மற்றொரு காரணத்தை கலாநிதி எஸ். பரணவிதான, 'வட இலங்கையில் ஆரிய அரசாங்கம்' **(The Arya Kingdom in North Ceylon)** என்ற அவரது கட்டுரையிற் காட்டியுள்ளார். அவர்கருத்துப்படி, 'யாபாபட்டுன' என்ற சிங்களப்பதத்தின் பொருள் 'யாபா துறைமுகம்' என்பதாம். ஜாவா மலாய்க்காரரின் அரசியல் ஆதிக்கம் இலங்கையில் வேரூன்றிய பின்னரே அப்பிரயோகம் வழக்கில் நிலைத்திருக்கிறது போலத் தெரிகிறது. 'ஜாவா' அல்லது 'ஜாவகா' என்ற சொற்கள் 'யாவா' அல்லது 'யாவகா' என்றும் வழங்கில் வந்திருக்கின்றன. 'ஜாவா' என்பதைச் சீன மொழியில் 'சி பொ' என்று கூறும் வழக்கம் 'வ' என்ற எழுத்து 'ப' என்று ஒரு காலத்தில் உச்சரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. குலோத்துங்கன் கோவை என்ற நூலின் ஒரு செய்யுள், சாவகம் என்ற தேசம் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சியில் இருந்ததாகவும், மற்றொரு செய்யுள் அதனைச் 'சாபம்' எனவும் குறிப்பிடுகின்றன. 'சாவகம்' ஆகிய இரண்டும் 'ஜாவா' அல்லது 'ஜாவக' என்ற ஒரே நாட்டையே குறிப்பனவாதல் கூடும். அப்படியானால் 'வ' என்ற எழுத்து 'ப' என்ற எழுத்தாக அப்பெயரில் மாறி வருதல் தமிழிலும் உண்டு என்று காட்டலாம். சிங்களத்திலும் அவ்வாறே 'வ' என்பது 'ப' ஆக மாறி அப்பெயர் உச்சரிக்கப்பட்டதாக காட்டலாம். சமஸ்கிருதத்தில் 'லவ' என்பது சிங்களத்தில் 'லப' என்றும் சமஸ்கிருதத்தில் 'சர்வன' என்பது சிங்களத்தில் 'சபன' என்றும் உச்சரிக்கப்படுதல் அதற்குச் சான்றாகும். எனவே 'யாபாட்டுன' என்பது 'ஜாவகத்துறை' என்பதைச் சுட்டுவதாக இருக்கும். இப்பொழுதுள்ள 'யாழ்ப்பாணம்' என்ற பதவாக்கம் 'யாபாபட்டுன' என்பதிலிருந்தே வந்திருக்க வேண்டும். இது கலாநிதி எஸ். பரணவிதானவின் கருத்து.

## இலங்கையில் மலாயர் படையெடுப்பு

கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற் சந்திரபானு என்ற ஜாவகனும் அவன் குழுவினரும் இலங்கைக்குட் படையெடுத்து புகுந்த வரலாறு இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை வரலாறு என்ற சரித்திர நூலிலே கூறப்பட்டுள்ளது. அந்நூலிலே ''சந்திர பானுவை ஜாவகன் என்று குறுப்பிட்ட பதம், ஜாவக தேசத்தவர்களை மட்டுமன்றி, சுமாத்திரா, மலாய் நாட்டுவாசிகள் ஆகியோரையுங் குறிக்கும். ஏனெனின் அவர்களனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாகையால்'' என்று கூறப் பட்டுள்ளது[2]. எனவே, சந்திரபானு என்பவன் மலாய் மொழி பேசுபவன் என்றே கொள்ள வேண்டும். மேலும் அவன் வட இலங்கையிற் பெரும் பகுதியைத் தன் ஆட்சிக்குள்ளடக்கி, அங்கொரு இராசதானியை அமைத்துத் தன் நல்லாட்சியால் மக்கள் நம்பிக்கையைப் பெற்றபின், யாபாவுவை நோக்கி முன்னேறிச் சென்றான். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 'சாவகச்சேரி' 'சாவங்கோட்டை' (சாவகன் கோட்டை) ஆகிய இடங்கள், அவன் மாயரட்டை நோக்கிச் செல்ல முன் அமைத்த அரண்களாகலாம்'' என்றும் அந்த இலங்கை வரலாற்று நூல் கூறுகிறது[3].

## யாழ்ப்பாணப் பெயர்க் காரண ஆய்வு

இனி, மேலே கூறப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பெயர்க் காரணங்களை ஆராய்ந்து பார்ப்போம். சிங்களப் பெயராகக் கருதப்பட்ட 'யாபாபட்டுன' என்பது 'யாபா' என்ற பதமும் 'பட்டுன' என்ற பதமும் இணைந்த சொற்கூட்டாகும். 'பட்டுன' என்பது தமிழிலே 'பட்டினம்' என்று வழங்கும் துறைமுக நகரத்தைக் குறிக்கும் சொல்லின் திரிபாகும். அச்சொல் தமிழிலே சங்ககால இலக்கியத் தொகுதிகளுள் ஒன்றாய பத்துப்பாட்டிற் 'பட்டினப்பாலை' என்ற பாடலில் உபயோகிக்கப்பட்டுள்ளது[4]. அது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப் பாடலாகும். எனவே, 'பட்டுன' என்பது சிங்களச் சொல் என்று கொள்ள எள்ளளவும் இடமில்லை.

'ஜாவா' என்ற சொல்லில் 'வ' என்பது 'ப' ஆகத்தமிழில் மாறிவரும் என்பதைச் 'சாபம்' என்ற ஒரு சொல்லைக் கொண்டு நிலைநாட்டிவிட முடியாது. அச்சொல் தமிழிலே' வில், 'சபிப்பு', 'தனுராசி' என்ற பல கருத்தில் வருதலுண்டு. ஜாவகர் காரணமாக வந்ததெனச் சொல்லப்படும் யாழ்ப்பாண இடப் பெயர்களாய 'சாவகச்சேரி' 'சாவன்கோட்டை' ஆகியன அவ்விதம் மாற்றத்தைக் காட்டவில்லை. தமிழ் இலக்கியப் பரப்பில் வேறெங்காவது 'ஜாவா' என்ற சொல் 'சாவகம்' எனக் குறிப்பிடப்படுதலை தவிரச் 'சாபகம்' அல்லது 'சாபம்' அல்லது 'ஜாவா' எனக் குறிக்கப்படவில்லை. எனவே 'யாவா' என்பது 'யாவா' என மருவி வந்தது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதாயில்லை. அதனால் 'யாபா' என்பது 'ஜாவா' என்பதன் தமிழ் உருவம் என்று கருத முடியாது. அன்றியும், அது 'ஜாவா' என்பதன் சிங்கள வடிவமுமன்று. ஏனெனில் சிங்கள இலக்கியங்களில் 'ஜாவா' வை 'யாபா' என்று குறிப்பிடும் வழக்கம் என்றும் இருந்ததில்லை. 'ஜாஎல' 'ஜாத்த' என்று குறிப்பிடுவதே வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. 'ஜாவா' என்ற பதத்திலிருந்து வந்ததாகச் சொல்லப்படும் 'யாபா' என்ற இடப்பெயர்களிற் காணப்படுதல் போல ஜாவகர்களையோ மலாயர்களையோ சிங்களத்தில் பொதுவாக 'ஜா' அல்லது 'ஜாவோ' என்று குறிப்பிடுவதே வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. ஜாவா என்ற பதத்திலிருந்து வந்ததாகச் சொல்லப்படும் 'யாபா' என்ற சிங்களச் சொல்லோடு 'பட்டினம்' என்ற தமிழ்ச் சொல் இணைக் கப்பட்டு யாழ்ப்பாணம் என ஆயிற்று என்று கருதுவது சற்றும் பொருத்தமாயில்லை. அதனால் 'யாழ்ப்பாணப் பட்டினம்' என்ற பெயரைக் கொண்டே சிங்களப் பெயராய 'யாபா பட்டுன' என்ற பெயர் புனையப்பட்டிருக்கிறது என்பதே பொருத்தமான முடிவாகும்.

நல்லூர் என்ற தமிழ் ஊர்ப் பெயரின் சிங்கள மொழிபெயர்ப்பாய 'யாபன' என்ற பதத்திலிருந்தே யாழ்ப்பாணம் என்ற பெயர் பிறந்தது என்று கூறும் முதலியார் ஏ எம். குணசேகரவின் கருத்து, மேற்காட்டிய கலாநிதி பரணவிதானவின் கருத்தோடு மாறுபடுகிறது. முன்னரே பெயர்பெற்று விளங்கிய தமிழரசர் தலைநகரமாய நல்லூரை, அதற்கான சிங்களப் பதத்தால் மறுபெயரிட்டு தமிழர் வழங்கினர் என்பது மாய்ந்து காணும் கருத்துமட்டுமன்றி நம்பத்தகாதது மாகும். மேலும், ஊர்ப்பெயர்களை மற்றொரு மொழியிற் பெயர்த்து ஆவ்வூர்க்காரர்கள் உபயோகிக்கப்படும் வழக்கம் நடைமுறையிலிருப்பதில்லை. யாழ்பாணத்து நல்லூர். அதன் சிங்கள மெழிபெயர்ப்புப் பதத்தினாலேயே சிங்கள சமுதாயத்தில் வழங்கப்பட்டது என்பது உண்மை யானால், இலங்கையின் மேல்மாகாணத்துப் பாணந்துறையிலுள்ள 'நல்லூர்' என்ற ஊர்ப் பெயரை அவ்வூரவர் அதன் சிங்கள மொழிபெயர்ப்பென்று கருதப்படும் 'யாபனே' என்றபதத்தால் வழங்காது ஏன் நல்லூருவ என்று வழங்கியிருக்கியிருக்கிறார்கள் என்பது விளங்கிக்கொள்ள முடியாததாகி விடும். இதிலிருந்து, நல்லூர் என்ற தமிழ்ப் பதத்தின் சிங்கள வடிவம் 'யாபனே' அன்றி 'நல்லூருவ' என்பதே எனல் தெளிவாகிறது. அதனால் நல்லூர் என்ற தமிழ்ச் சொல்லின் சிங்கள மொழி பெயர்ப்பாய 'யாபனே' என்பதிலிருந்தே தமிழ்ப் பெயராய யாழ்ப்பாணம் என்று கூறும் பெயரின் சிங்களத் திரிபென்றே கொள்ள வேண்டும்.

இனி யாழ்பாடி பற்றிய பல்வேறு கதைகளையும் ஆராய்ந்து பார்ப்போம். விபீடணன் முன் யாழ் வாசிக்கும் ஒருவன் இலங்கை வடகடற்கரையில் உள்ள மணற்றிடற் காட்டினைத் திருத்தி

வளநாடாக்கினான் என்று மட்டும் வையாபாடல் கூறும். கைலாய மாலையோ யாழ்ப்பாடிக்கு அந்நிலத்தை வழங்கியவன் பெயரையும் சேர்த்துக் கூறும். யாழ்ப்பாண வைபவ மாலை ஒருபடி மேற்சென்று அந்த யாழ்ப்பாடியின் பெயரையும் கூட்டிச் சொல்லும். சுவாமி ஞானப்பிரகாசர் தனது யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்ற நூலிலே, கைலாய மாலை ஆசிரியரும், யாழ்ப்பாண வைபவ மாலை ஆசிரியரும், அந்நிலத்தைக் கொடுத்தவன் பெயரையும், பெற்றவன் பெயரையும் சரிவரக் கண்டுகொள்ளவில்லை என்றும், சமகாலத்தவரல்லாத வேறு இருவர் பெயர்களோடு அவ்வாசிரியர்கள் தடுமாற்றமெய்தியிருக்கிறார்கள்ளென்றும் காட்டியுள்ளார்.

ஆ. மூத்ததம்பிப் பிள்ளை காட்டியுள்ள பாடல் கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலே இலங்கையின் பெரும்பகுதியை ஆண்ட தமிழ் மன்னனான ஏலேலசிங்கன் அந்தகக் கவிவாணன் ஒருவனுக்குச் சன்மானமாக வழங்கியிருக்கலாமென்று கருத இடமளிக்கிறது. வையாபாடலிற் கூறப்படுட்டுள்ள யாழ்ப்பாடியின் கால நிர்ணயமும் இதுவும் ஓரளவு ஒத்து நிற்கின்றன என்றாலும், வையாபாடலில் ஏலேலசிங்கன் பற்றி எவ்வித குறிப்புமில்லாமை சற்று மலைக்க வைக்கிறது. மேலும் அந்தகக் கவி ஒருவன் ஏலேலசிங்கனைப் புகழ்ந்து பாடினான் எனச் சொல்லப்பட்ட பாடலின் போக்கும் யாப்பும், அப்பாடல் பிற்காலத்தது என்பதைக் காட்டி நிற்கும்.

அப்பாப் புனையப்பட்டுள்ள கட்டளைக் கலித்துறை யாப்பு, கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழகப் புலவர் எவராலேனும் கைக் கொள்ளப்படவில்லை. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை தமிழ் இலக்கியத்திற் கலித்துறைப் புனைவு சீவகசிந்தாமணி காலத்தின் பின்னரே இடம் பெற்றுள்ளதென்று தனது 'காவிய காலம்' என்ற நூலிலே காட்டியுள்ளார்[5]. மேலும் அந்தகக் கவிஞ ராற் பாடப்பட்டதென காட்டப்பட்ட செய்யுளின் ஈற்றடி, வேறு பாட பேதங்களையுங் கொண்டு, திரைபோட்டிருந்தனை யேவால சிங்க சிரோமணியே என்னும், திரைபோட்டு நீயிருந்தாய் சிங்கை பூபசிரோமணியே' என்றுங் காணப்படுகின்றது. அதனால் ஏலேல சிங்கனே அந்தகக் கவிக்கு நிலம் வழங்கினான் என்பதற்கு சான்றாகக் காட்டியுள்ள பாடல் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயில்லை.

அந்தகக் கவிவீரராகவன் என்ற புலவன் யாழ்ப்பாணத்து இறுதி மன்னர்கள் காலத்தவன் என்று சுவாமி எஸ். ஞானப்பிரகாசர் 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' என்ற நூலிலே காட்டியுள்ளார்[6]. நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் அரசாண்ட அம்மன்னர்கள் எவராவது யாழ்ப்பாணத்தை அந்தகக் கவிஞருக்கு கொடையாக வழங்கியிருக்க முடியாது; ஏனெனில் சங்கிலி என்ற இறுதி மன்னன் காலம் வரை யாழ்ப்பாணம் ஆரியச் சக்கரவர்த்திகளால் ஆட்சி செய்யப்பட்டுவந்தது என்பதும், அச்சங்கிலி மன்னனிடமிருந்தே போர்த்துக்கேயர் யாழ்ப்பாண த்தை வென்றெடுத்தனர் என்பதும் வரலாற்றுண்மைகளாகையால், யாழ்ப்பாணம் என்ற பெயரின் மூலத்தினை வையாபாடல் வழியாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

## வையாபாடல் குறிக்குங் காலம்

விபீடணன் சபையில் யாழ் வாசிப்போன் இலங்கை வடகடற் கரையிலுள்ள மணற்றிடற் காட்டைச் சீர் திருத்தி இராசதானியாக்கிய சம்பவம் நடைபெற்றது கி.மு. 101 ஆம் ஆண்டளவிலென வையாபாடல் கணித்துள்ளது. இது இராமாயண காலத்தோடு ஒத்திருக்கக் காணலாம். இராமாயணம் செய்யப்பட்ட காலம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதென்பர் பேராசிரியர் எம். வின்ரனீஸ்[7]. இராமாயணத்தைச் செய்த வால்மீகி முனிவர் காலத்தவரே இராமனும் இராவணாதியரும். அதனால், விபீடணன் காலமும் அதுவேயாதல் வேண்டும்.

வையாபாடல் குறிப்பிடுங் காலக்கணிப்புக்கள் ஏற்புடையனவாகவே இருக்கின்றன என்பதற்கு மற்றொரு சான்று, அதிற் காணப்படும் கண்ணகி பற்றிய குறிப்பாகும். கண்ணகியின் தந்தையாய மாநாகன் தன் மகளுக்கு நாகரத்தினம் வேண்டி மீகாமனை இலங்கைக்குக் கலியுக

ஆண்டு 3392 இல் அனுப்பிவைத்தான் என வையாபாடல் கூறும். கலியுக ஆண்டு 3392 என்பது கி.பி 291 க்குச் சமனானதாகும். கண்ணகியை மையமாக வைத்துச் செய்யப்பட்ட சிலப்பதிகாரம் என்ற நூல் கி.பி. 300 க்கு முன் செய்யப்படவில்லை என்பர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை. அந்நூலின் காலம் கி.பி.5 ஆம் நூற்றாண்டளவினதாகும் என்பர் எம். இராகவஐயங்கார். எனவே கோவலன் மனைவியாய கண்ணகியின் காலம் பற்றி வையாபாடல் காட்டுங் கணிப்பு ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே யிருக்கிறதெனலாம்.

## யாழ்வாசிப்போன் கதை இடைச் செருகலன்று

மேற்கூறியவற்றிலிருந்து வையாபாடற் கூற்றுக்கள் நம்பத்தக்க சம்பவக்கோவைகளைக் கொண்டனவாகவே விளங்குகின்றன என்று தெரிகிறது. அதில் யாழ்ப்பாடி பற்றிக் கூறியுள்ள 12 ஆம் செய்யுள் இடைச்செருகலாக வைக்கப்பட்டிருக்கலாமெனக் கொள்ள முடியாது. ஏனெனில் அச்செய்யுளிற் கூறப்பட்டுள்ள சம்பவம் பற்றிய குறிப்புக்கள் அந்நூலின் வேறு செய்யுட்களிலும் தொடர்ந்து காணப்படுகின்றன. மேலும், 1921 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட அந்நூற் பதிப்பிலும் 1922 ஆம் ஆண்டு பினாங்கில் வெளியிடப்பட்ட பதிப்பிலும் அச்செய்யுள் காணப்படுகிறது. அன்றியும் கி.பி 18 ஆம் நூற்றாண்டளவில் செய்யப்பட்டதாகக் கருதப்படும் 'கல்வெட்டும் வையாவும் செய்யேடும்'[8] என்ற வையா வசன நூலிலே வையாபாடல் மூலத்திற் போலவே யாழ்ப்பாடியின் கதை காணப்படுகிறது.

## தமிழுக்கே உரிய 'ழ' என்ற சிறப்பெழுத்து

யாழ்ப்பாணம் என்ற பெயரிலுள்ள 'ழ்' என்ற மெய்யெழுத்துத் தமிழுக்கும் தமிழிலிருந்து பிறந்த மொழிகளுக்குமே தனியுரிமையுடையது. அதனால், யாழ்ப்பாணம் என்ற சொல் தமிழ் மூலத்திலிருந்து பிறந்திருக்கலாம்.

இதுவரை நாம் ஆய்ந்தவற்றிலிருந்து 'யாழ்ப்பாணம்' என்ற பெயர் வையாபாடலிற் கூறப்பட்டுள்ள யாழ்வாசிப்போன் கதையிலிருந்தே வந்திருக்கிறது என முடிவுசெய்யலாம். 'கைலாய மாலை'யின் இறுதியிற் காணப்படும்

'இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை
அலர்பொலி மாலை மார்ப னாம்புவ னேக வாகு
நலமிகும் யாழ்ப்பா ணத்து நகரிகட் டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித் தானே'

என்ற செய்யுளின்படி யாழ்ப்பாண நகர் சகாத்தம் 870 (அதாவது கி.பி. 948) இலே கட்டுவிக்கப்பட்டதெனக் தெரிகிறது. அது நகரைப் புதுக்கி நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கட்டுவித்த காலமாகலாம். சகாத்தம் 870 என்பதற்குச் சுவாமி எஸ். ஞானப்பிரகாசர் மற்றொரு விளக்கந் தருகிறார். 'யாழ்ப்பாண வைபவ விமர்சனம்' என்ற அவரது நூலிலே, 'எண்' என்பது ஆயிரத்தைக் குறிக்கும் என்று கூறி, எண் நூற்றெழுபது என்பது 1000 + 170 = சகாத்தப் 1170 = கி.பி 1248 என்று காட்டியிருக்கிறார். அது வலிந்து காணும் கருத்தே என்பது புலனாகும்.